திரட்டு

சிறந்த மாதாந்தர கட்டுரைப் பொக்கிஷம்

1220

மன்மதஹு
வைகாசி—ஆனி

பாண்டுங் மகாநாட்டின் ஞாபகச் சின்னம்
மற்றும் சுவையான மகாநாட்டுத் தகவல்கள்

வழக்கம்போல் தொடர் நாவல், நாடகம், சிறு கதைகள், பல விசேஷக் கட்டுரைகள் நிறைந்தது.

8 அணா

198759

Vol. 2. No. 6. May 1955 Pages

SAMSONS DRESSES

ஸாம்ஸன்ஸ் ரெடிமேட் ஆடைகள்

★

சிறந்த துணி வகைகளில், நாகரீகமான பாணியில் நீடித்த உழைப்புக்காக தயாரிக்கப்படுகின்றன.

★

ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவருக்கும் தேவையான ஆடை வகைகள் யாவும் கிடைக்கின்றன.

★

பெங்களூர் டிரஸ்
மானுபாக்சரிங்
கம்பெனி,
12, லால் பாக் ரோட்,
பெங்களூர் - 2.



உலகத்திலுள்ள இதர மைகளுக்கு ஓர் அறைகூவல்

சுலேகா

பௌண்டன் பேனா இங்க்
("எஸ்-100" ஸால்வென்ட் கூடியது)

தரத்தில் உயர்ந்தது
உயர் ரக பொருள்களை வாங்கி எமது
சுதேசியை பெரிதும் ஆதரியுங்கள்

SULEKHA WORKS LTD.

SULEKHA PARK :: CALCUTTA - 32

Branches : **Delhi - Bombay - Madras**

மதராஸ் ஆபிஸ்: 5, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை - 1.

ஸ்ரீ அம்பிகா எம்போரியம்

தாசர்புரம், திருநீண்டயூர் போஸ்டு
திண்ணனூர் ரயில்வே ஸ்டேஷன்.



உத்தரவாதமான பி. அண்டு சி. மில்
ரெடிமேட் ஆடைகளுக்கும் நூதன பைகளுக்கும்
சிறந்த இடம்:

உரிமையாளர்
எம். கே. ரங்கநாதன்

திரட்டு

Vol. 2 பொருளடக்கம் No. 6

பாரதப் பெண்கள் அன்றும் இன்றும்	...	3
கையிலோ ஜெபமாலை புரிவதோ கொள்ளை, கொலை!		8
வள்ளி மலை	...	14
ஸுதாமா	...	17
பாண்டுங் பிரமுகர்கள்	...	29
பதிலுக்குப் பதில்	...	32
ஆசிய ஆப்பிரிக்க நேசச்சின்னம் - பாண்டுங்	...	33
கள்ளக் கடத்தல்	...	39
சாந்தால்கள்	...	41
பாரதமும் கிரேக்கர்களும்	...	44
பத்தினியின் கண்கண்ட தெய்வம்	...	45
சம்ஸ்கிருதமும் பொதுமக்களும்	...	47
புரொபஸர் பட்டாபி	...	49
மூக்கின் போக்கு	...	63
மதியும் நரியும்	...	64
ஸ்வர்ணமாலா	...	65
போதை	...	77
நோய்க்கிடங்கொடேல்	...	78
புரந்தரதாஸர்—ராமதாஸர்	...	80
புற்றுநோய்	...	81
தனக்கு வந்தால் தெரியும்	...	83
மகத்தானதானம்	...	85
இந்தியாவின் குருடர்கள்	...	87
சீரழிக்கும் சினம்	...	89
ஜ்யாமகன்	...	91
வாழ்க்கையும் பண்பாடும்	...	94
ஆசையுறும் இன்பம்	...	95
கலிசந்தாரண உபநிஷத்	...	96
பழமையில் மோகம்	...	97
ஈசுவர தரிசனம்	...	103
எண்பத்தேழுவயதிலும் விவாக மறு	...	104
மேவாரின் வீழ்ச்சி	...	105
உயிர்க் கனல்	...	113
சிருஷ்டியில் யாவும் கடவுள் மயமே	...	121

198259

'THIRATTU" Tamil Monthly Digest.

திரட்டு

சிறந்த மாதாந்தரக் கட்டுரைப் பொக்கிஷம்

மே ○ 1955

பாரதப் பெண்கள் அன்றும் இன்றும்

★

வேத காலங்களில் குமாரத்திகளைவிட குமாரர்களையே தான் குடும்பங்களில் யாவரும் விரும்பினார்கள். இதனால் அந்தக் காலத்துப் பெற்றோர்கள் பெண்களை அலட்சியம் செய்தார்கள் என்பதில்லை. பெண்கள் யாவரும் கல்வி பயின்றிருந்தனர். சிறந்த விவேகிகள் என்ற பெயர் பெற்ற ஸ்திரீகள் பலர் வேத காலங்களில் வாழ்ந்தனர். ரிக்வேதம் முதலிய கிரந்தங்களில் ஸ்திரீகளால் இயற்றப்பட்ட மந்திரங்கள் அநேகம் உண்டு. சிறந்த வேதாந்திகள் எனப்பெயர் பெற்றவர்கள் கார்கியும், மைத்ரேயியும் ஆவார்கள்.

ஸ்திரீகள் வயது முதிர்ந்த பின்னரே விவாகஞ் செய்து கொள்வதே வழக்கமாயிருந்தது. கணவனைத் தேர்ந்தெடுப்பதில் ஸ்திரீகள் பூரண சுதந்திரம் பெற்றிருந்தனர். தங்கள் பெண்களைப் பண்டிகை முதலிய விசேஷ வைபவங்களுக்கு அனுப்பும்போது, அவர்கள் தங்கள் கணவர்

களைத் தேடிக்கொள்ளவேண்டுமென்பதற்காகவே அழகாக ஆடையலங்காரஞ் செய்வித்து அனுப்பிக்கொண்டிருந்தார்கள் தாய்மார்கள்.

கலியாண விஷயங்களில் அக்காலத்தில் கட்டுப்பாடுகள் மிகவும் குறைவு. தந்தை பெண்ணையோ, சகோதரன் சகோதரியையோ மணஞ்செய்து கொள்வது மட்டுமே தான் நீச காரியமாகக் கருதப்பட்டு வந்தது.

கலப்பு மணம் மிகவும் சகஜமாய்த்தானிருந்தது. மனைவிக்கு கிருகத்தில் பிரத்தியேக மதிப்புண்டு. வீட்டிற்கு யஜமானி இவள்தான். கணவன் வாக்கே வேத வாக்கியம் என்று வேத காலத்தில் கருதப்படவில்லை. வீட்டுக் காரியங்களிலும் வைதீக விஷயங்களிலும் இவர்களுக்கு முக்கியமான பங்கிருந்தது. கணவன் வீட்டிலில்லாத சமயங்களில் மனைவியே வைதீகக் காரியங்களைக் கவனித்து வந்தாள். ரிக்வேத காலங்களில் 'பர்தா' என்ற பேச்சே கிடையாது.

பதிவிரதா தர்மத்திற்கு வேத காலத்தில் அவ்வளவாக முக்கியத்துவமளிக்கப்படவில்லை. விவாகரத்து அபூர்வமாக இல்லை. சில குறிப்பிட்ட காரணங்களுக்காக மறுமணம் செய்துகொள்ள ஸ்திரீகளுக்கு உரிமையிருந்தது. இறந்துபோன சகோதரனுக்கு குழந்தைகளில்லாவிட்டால் அவனுடைய மனைவியான விதவையை உயிரோடுள்ள சகோதரன் மணந்துகொள்ளலாம்.

குலஸ்திரீகளின் நெறி தவறுதலை அவ்வளவாகப்பொருட்படுத்தவில்லை. மணமாகாத பெண்களுக்கு குடும்பசொத்தில் பங்கிருந்தது. சரித்திரத்தில் ஹிந்து சகாப்தம் என்று கூறப்படும் காலத்தில் இவையெல்லாம் மாறியது. ஸ்திரீகளுக்கு வேதங்களைக் கற்றுக்கொடுக்கக் கூடாதென்று நிர்ணயிக்கப்பட்டது. ஏன், அவர்கள் வேத கோஷத்தைக் கேட்கக்கூடாதென்ற கட்டுப்பாடு கூட வந்துவிட்டது. உயர்தரக் கல்வி ஸ்திரீகள் பயிலக்

கூடாதென்ற விதியுமிருந்தது. படித்த ஸ்திரீயைப்பற்றிய நினைப்பே சங்கரருக்கு அருவருப்பாயிருந்தது.

வேதங்களைக் காப்பதற்கு ஸ்திரீகளுக்கு உரிமை யளிக்காததால் காலப்போக்கில் இவர்களுக்கு யாகங்களில் ஒரு பங்குமில்லாமற் போயிற்று.
இம்மாதிரி சமூக விஷயங்களில் ஸ்திரீகளின் மதிப்புக் குறையக் காரணம் அவர்களை இளம் பருவத்திலேயே கன்னிகாதானம் செய்துகொடுப்பது வழக்கத்திலிருந்தது தான். ஸ்திரீகளை இளம் பருவத்தில் கன்னிகாதானம் செய்துகொடுக்காமலிருப்பது சமூகத்திற்கேஇழிவென்று கருதப்பட்டு வந்தது. ஸ்திரீகளுக்கு இளம் பருவத்தில் விவாகமானதால் கல்வி பயில்வோ தன்னிஷ்டப்படி கணவனைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவோ உரிமையில்லாமற்போயிற்று.

முப்பது வயதடைந்த ஒரு ஆண் பத்து வயதடைந்த பெண்ணை மணந்துகொள்ளவேண்டுமென்றும் இருபத்தோரு வயதான ஆண் ஏழு வயதான பெண்ணை மணந்துகொள்ள வேண்டுமென்றும் மஹாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது. மாதர்கள் மணக்கவேண்டுமென்பது கட்டாயமாகிவிட்டது. விவாக ரத்தும் மறு மணமும் ஸ்திரீகளுக்குக் கூடாதென்ற கட்டுப்பாடுமிருந்தது.

சிறிதுநெறி தவறினுல்கூட ஸ்திரீகளுக்கு பெருத்த அபாய மாயிருந்தது. இம்மாதிரிக் கொள்கைகளே 'சதி' என்ற பழக்கத்திற்குக் காரணமாயிற்று. உலக மனப்பான்மை இம்மாதிரி மாறிய பின்னரே மனு ஸ்மிருதி என்னும்நூல் தோன்றியது. ஸ்திரீ என்றும் பிறர் ஆதரவிலேயே வாழ வேண்டுமென்பதே மனுவின் கொள்கை.

இளம் வயதில் தந்தையின் ஆதரவிலும் மணமான பிறகு, கணவனுடைய ஆதரவிலும் பின்பு மகனுடைய ஆதரவிலும் தான் ஸ்திரீகள் வாழ வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார் மனு. இதைத் தவிர

ஸ்திரீகளை நன்கு பாதுகாக்காவிடில் அவர்கள் ஒழுங்கு தவறி விடுவார்களென்றும் மனு குறிப்பிட்டுள்ளார். கணவன் சொற்படி நடப்பதும் அவன் இறந்த பின்னர் அவன் நினைவை மறவாமலிருப்பதும் ஸ்திரீகளின் முக்கிய கடமையென்றும் விதித்துள்ளார். ஒழுங்கற்ற கணவனையும் கண்கண்ட தெய்வமாகக் கொண்டாடவேண்டுமென்பது மனுவின் ஆக்ஞை.

கணவனுக்கு மனைவியை நிராகரிப்பதற்குச் காரணங்களைக் கூறியுள்ளார். ஆனால் ஒரு மனைவி உயிரோடிருக்கும்போது மற்றொரு மனைவியைக் கணவன் வீட்டிற்கழைத்து வந்தால் கூட தன் கணவனைக் கோபித்துக் கொள்ளக்கூடாதென்றும் அவ்விதம் கோபங்கொள்ளுபவளுக்கு வீட்டில் அடைத்து வைப்பது, பிரம்படி கொடுப்பது முதலிய சிக்ஷைகளையும் விதித்துள்ளார் மனு.

கணவன் நினைவைக் கொண்டாடும் கடமை மனைவிக்குத்தானே யொழிய மனைவியின் நினைவைக் கொண்டாடும் கடமை கணவனுக்கில்லை. மனைவி மரித்த கணமே கணவன் மறு மணம் செய்துகொள்ளும் உரிமையை யளித்துள்ளார் மனு.

புராண காலங்களில் பூரண சுதந்திரத்தில் வாழ்ந்த பாரத நாட்டுப் பெண்மணிகள் மனுவின் இத்தகைய கருத்துக்களையும் புனிதமாகக் கொண்டாடி காலப் போக்கில் அவற்றை அனுசரித்தும் நடக்கத் தொடங்கினார்கள். ஸ்திரீகளுக்கென்ற தனி உரிமைகள் ஸ்திரீதனத்தைப் பற்றி மட்டுமே தான். ஒரு ஆண் எவ்வளவு ஸ்திரீகளை வேண்டுமானாலும் மணந்துகொள்ளலாம். ஆனால் அவர்கள் யாவருக்கும் உணவும் உடையுமளிக்கும் கடமை மட்டும்தான் அவனுக்குண்டு.

இம்மாதிரி ஸ்திரீகளின்மதிப்பு குறைய ஆரம்பித்ததற்குக் காரணம் ஒரு தனி நபரோ அல்லது ஒரு இனத்தாரோ அல்ல; சிருஷ்டியில் ஸ்திரீகள் தரம் குன்றியவர்கள்

என்ற கருத்தை அநேக வேதாந்திகளும் கவிகளும் அவர்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளார்கள். ஸ்திரீ ஒரு இன்பம் தரும் கருவி மட்டுமேயானதால் மனிதன் அழிவுறுவதற்கு அவர்களேதான் காரணமாவார்களென்று காளிதாஸர், புத்தர் முதல் இன்று வரை அநேக மகான்கள் அபிப்பிராயப்பட்டுள்ளார்கள்.

ஸ்திரீகளைப் பற்றி இவ்வாருக மாறிய கொள்கைகளுக்கும் சிறந்த உதாரணங்களாக விளங்கினர்கள் நம்நாட்டு பெண்மணிகள். உத்தமப் பெண்மணிகளைப் பற்றி கவிகளும் வேதாந்திகளும் கூறும் கருத்துகளுக்கேற்றவாறே நம் நாட்டுப் பெண்மணிகள் வாழ்க்கை நடத்தியுள்ளார்கள்.

பூரண சுதந்திரமே பெண்களுக்குப்பூஷணமென்று கருதியிருந்த காலத்தில் பூரண சுதந்திரத்தை ஏற்று சிறப்பாக வாழ்ந்தார்கள், சுதந்திரமற்று இருப்பதுதான் பெண்களுக்கழகு என்று மேதாவிகள் கூறிய காலத்தில் சகலவிதமான கட்டுப்பாடுகளுக்கு ஆளாகியும் நாட்டுக்குத் திலகங்களாக விளங்கினர்கள்.

அரசியல் துறையில் நம்நாட்டு பெண்மணிகள் பிரபல ராஜ தந்திரிகளாக விளங்கியதுண்டு. புத்தர் முதலிய மகான்களின் சிஷ்ய பரம்பரைகளிலும் ஸ்திரீகள் மிகப் பெரிய வேதாந்திகளாகவும் திகழ்ந்ததுண்டு.
மனு சாஸ்திர விதிகளின் பிரகாரம் வாழ்க்கை நடத்தும் குல ஸ்திரீகளாகவும் இந்தியப் பெண்மணிகள் அன்றும் இன்றும் இருந்து வருகிருர்கள்.

—R; C. Majumdar (*B. U. J.*)

கையிலே ஜெபமாலை புரிவதோ கொள்ளை, கொலை!

[மான்சிங் என்ற பிரபல கொள்ளைக்காரன் நான்கு ராஜ்ய சர்க்கார்கள் வருஷக்கணக்காக எவ்வளவோ முயற்சித்தும் பிடிபடாமல் ஒளிந்துகொண்டிருக்கிறான், சமீபத்தில் இவனை ராணுவ உதவியினால் பிடித்துவிடலாமென்று சிலர் யோசனை கூறினார்கள். ஆனால் மத்திய பாதுகாப்பு மந்திரி இலாகா இதுபற்றி ஒன்றும் தெரியாதென்று கூறிவிட்டது. ஆனால் மக்களின் அமைதிக்கு இவனை ராணுவ உதவியாலோ அல்லது வேறு எந்த உதவியாலோ பிடித்துவிடவேண்டியதவசியம். இவனை எவ்வளவு காலம் பிடிக்கமுடியாமலிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு சர்க்கார்மீது பொதுமக்களுக்கு மதிப்பு குறைந்து போகும்.]

—*Caravan*.

ராஜாக்களையெல்லாம் ஒழித்துக்கட்டியுள்ள இக்காலத்திலும் மத்திய பாரத மாகாணத்தில் ஒரு ராஜா இருக்கிறார். ஆனால் இவர் சிம்மாசனத்தில் வீற்றிருந்து வருவோருக்கெல்லாம் தரிசனம் கொடுக்கும் ராஜா அல்ல; இந்த ராஜாவை என் கண்ணாலேயே காணவேண்டுமென்று சென்ற எனக்குக்கூட அவருடைய நண்பர்களை மட்டுமேதான் காணச் சந்தர்ப்பங் கிடைத்தது,

நான் சந்தித்தவர்கள் யாவரும் அவரை மனித இனத்துக்கோர் அரசன் என்றே மதிப்பவர்கள். போலீசார் இவரை நேருக்கு நேர் நின்று போராடக்கூடிய வீரன் என்று மதிக்கிறார்கள்.

"ராஜா" மான்சிங் என்பவன் உத்தரப்பிரதேசம், மத்திய பாரதம் முதலிய மாகாணத்து நிலச்சுவான்தார் குடும்பத்தைச் சேர்ந்தவன். அடிக்கடி சர்க்காரிடம் சாதாரண ஒரு நிலச்சுவான்தாரின் வாழ்க்கையை நடத்த அனுமதிப்பீர்களா" என்று கேட்டுள்ளான். அவற்றிற்கெல்லாம் சர்க்கார் அளித்த பதில் மான்சிங் மரியாதையாக சரணடைந்து சிறைவாசமோ அல்லது மற்ற ஏதாவது தண்டனையோ அநுபவிப்பதுதான் நியாயம் என்பதே.

61 வயதுள்ள மான்சிங் மிகவும் வலிமை பொருந்தியவன், புத்திக் கூர்மை படைத்தவன்; காளிதேவியின், பக்தன்; ஈடாவா ஜில்லாவில் ஒரு காட்டிலுள்ள ஒரு காளி கோயிலுக்கு இவன் அடிக்கடி செல்வது வழக்கம். இப்போது அந்தக் காடுகளில் ராணுவத்தார் முகாமிட்டு மான்சிங்கின் நடவடிக்கைகளை கவனித்து வருகின்றனர்.

சாம்பல், யமுனை ஆகிய இவ்விரு நதி தீரங்களைச் சேர்ந்த காடுகளில் மான்சிங் அடிக்கடி தன் கோஷ்டிகளோடு பஜனை செய்து வருகிறான். இந்த பஜனைகளுக்கெல்லாம் பக்கத்துக் கிராமங்களிலிருந்து மக்கள் திரள் திரளாகக் கூடுகிறார்கள். கிராமத்திற்கு கிராமம் மான்சிங் சுற்றுப்பிரயாணஞ் செய்வது ராஜ தோரணையோடுதான்.

ஒரு கிராமத்திற்கு வந்து சேர்ந்ததும் அந்தக் கிராமத்து மக்கள் அவனுக்கு நெற்றியில் திலகமிடுவார்கள். மான்சிங் நடமாடும் கிராமங்களிலுள்ள மக்கள் அவர்களுடைய பூசல்களைத் தீர்ப்பதற்கு மான்சிங் உதவியைத் தான் நாடுகின்றனர். ஏனெனில் மான்சிங், மிகுந்த புத்தி சாலியென்றும் பாரபட்சமற்றவனென்றும் புகழ்பெற்றவன்.

கிராமத் தலைவர்களனைவரும் மான்சிங் தங்கள் கிராமங்களுக்கு வரும்போது மரியாதை செய்கிறார்கள். இவர்களே

தான் மான்சிங்கிற்குத் தேவையான பொருளையும் துப்பாக்கி முதலிய தற்காப்பு கருவிகளையும் அளிக்கின்றனர்.

இவற்றையெல்லாம் தவிர இவனுக்கு ஏராளமான ஒற்றர்களும், தகவல் கொடுப்போரும் இருக்கின்றனர். இவர்கள் மூலம் போலீசாருக்கு இவனைப் பற்றிக் கிடைக்கும் தகவல்களைவிட அதிகமான தகவல்கள் இவன் எதிரிகளான போலீசாரைப் பற்றி இவனுக்குக் கிடைக்கிறது. போலீசாரிடம் பயந்தோ அவர்களிடம் லஞ்சம் வாங்கிய காரணத்தாலோ ஏதாவது கிராமத்தார் மான்சிங் பற்றி போலீசாருக்கறிவித்தால் அந்தக் கிராமத்தாருக்குப் மான்சிங் தக்க தண்டனை யளித்துவிடுவானென்பதில் சிறிதும் ஐயமில்லை.

மான்சிங் வெகு அபூர்வமாகத்தான் பகற்கொள்ளையிலீடுபடுகிறான். ஏதாவது ஒரு பிரபலஸ்தரை தன்னிடம் பிடித்து வைத்துக்கொண்டு அவருடைய சொந்தக்காரரிடமிருந்து ஒரு பெருந்தொகையைப் பலாத்காரமாகப் பெறுவதே இவன் தொழில். இப்படிப் பணம் சம்பாதிப்பதைத் தவிர இவன் பணம் லேவாதேவியும் செய்வதுமுண்டு. இதற்காக ஆக்ரா, பிந்த் முதலிய ஜில்லாக்களில் காரியாலயங்கள்கூட அமைத்துள்ளான். ஒரு சந்தர்ப்பத்தில் போலீசாரிடம் சிக்கியுள்ள கணக்குப் புத்தகங்களிலிருந்து இவன் அநேக லக்ஷ ரூபாய்களுக்கு லேவாதேவி செய்கிறான் என்பது புலனாயிற்று.

தான் சம்பாதிக்கும் பொருளையெல்லாம் ஏழை மக்களுக்கு உதவி செய்வதற்காக செலவிடுகிறான். ஏழைப் பெற்றோர்களுக்கு அவர்கள் பெண்களை விவாகஞ் செய்வதற்கு தேவையான பொருளுதவிசெய்வது இவன் செய்யும் தர்ம காரியங்களில் முக்கியமான ஒரு அம்சம்.

போலீஸ் படைக்கும் தனக்கும் அடிக்கடி ஏற்படும் சண்டைகளில் மரித்துப்போனவர்களின் குடும்பங்களையும்

பாதுகாத்து வருகிறான். ஏன், தன்னைப் பிடித்துப்போக வரும் முயற்சிகளில் மாண்டுபோகும் போலீஸ்காரர்களின் குடும்பங்களுக்கும் பொருளுதவி செய்துவருகிறான் மான் சிங்.

மான்சிங்கின் பிறந்து வளர்ந்த வீடு இப்போது போலீசார் வசமிருக்கிறது. இவன் நிலங்களின் அருகே யுள்ள நிலங்களுக்குச் சொந்தக்காரரான ஒரு பிராமண ஜமீன்தாருக்கும் மான்சிங்கிற்கும் ஏற்பட்ட தகராறில் சர்க்கார் மான்சிங்கின் எதிரி பக்கம் தீர்ப்பளித்தார்கள். அந்தக் கணத்திலிருந்தே மான்சிங் சர்க்காரின் எதிரியாக மாறினான்.

இதற்கு முன்பு இவன் சமூகத்திலேயே ஒரு பிரபல பிரமுகராய்க் கருதப்பட்டு வந்தான்.

மான்சிங்கின் எதிரியான பிராமண நிலச்சுவான் தாரின் பெயர் துல்பிராம். இவர் மான்சிங் வீட்டுப் புரோ கிதருங்கூட. இவர்களுக்கிடையே ஏற்பட்ட ஒரு தகராறி லிருந்து ஒரு கலகம் மூண்டது. இந்தக் கலகத்தின் போது துல்பிராமைச் சேர்ந்த இரு ஆட்கள் கொல்லப் பட்டனர். இதற்காக மான்சிங்கிற்குத் தீவாந்திர சிக்ஷை கிடைத்தது. இதோடு கலகம் முடிந்துவிடவில்லை. மான்சிங்கின் சகோதரர்களை துல்பிராமின் ஆட்கள் கொலைசெய்ய முயற்சித்தனர். மான்சிங் சிறையிலிருந்து திரும்பி வந்ததும் கலகங்கள் இன்னும் தீவிரமாயிற்று. மான்சிங்கின் புதல்வர்கள் துல்பிராமை சுட்டுக்கொன்று விட்டார்கள். இது காரணமாக மான்சிங்கின் எதிரி களான பிராமண நிலச்சுவான்தாரின் குடும்பம் அந்தக் கிரா மத்தை விட்டே வெளியேறியது.

இதற்குப் பிறகு இருகட்சிகளிடையே நடந்த கொலை களுக்கு கணக்கேயில்லை. பட்டப் பகலிலும் போலீஸார்

முன்னிலையிலுங்கூட பல கொலைகள் நிகழ்ந்துள்ளன. போலீஸார் மான்சிங்கைப் பிடிப்பதற்கு ஆகாயவிமானங்களைக்கூட உபயோகித்துள்ளனர்.

மான்சிங் பிராமணர்களின் விரோதி என்று கருதுவது தவருகும், இன்றும் மான்சிங்கினுடைய கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் பிராமணர்கள். எதிரியான துல்பிராமின் குடும்பத்தையொழித்துவிட்டார்கள் மான்சிங் கூட்டத்தார்.

சென்ற ஜூன் மாதத்தில்தான் அதுவரையில் உயிர் தப்பிய துல்பிராமின் குடும்பத்தின் கடைசி அரசாங்கத்தினரான ஒருவரும் கொல்லப்பட்டார். துல்பிராமுக்கு எப்போதாவது உதவியளித்துள்ள எவரையும் தீர்த்து விடுவதென்று கங்கணங்கட்டிக்கொண்டே மான்சிங்கும் அவன் கூட்டத்தாரும் தீவிரமாக இப்போது முயற்சி செய்து வருகின்றனர்.

மான்சிங் குடும்பம் ஏராளமான பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் நிறைந்தது. இவன் மனைவிதான் இவன் குடும்பத்தைப் பற்றியும், மற்ற கோர்ட்டு விவகாரங்களையும் கவனித்து வருகிருள். சமீபத்தில் மான்சிங் பேரன் ஒருவனை ஆக்ராவில் ஒரு குற்றத்திற்காக விசாரணை செய்தார்கள். இதற்கும் மான்சிங் மனைவிதான் எதிர்வழக்காடுவதற்கு ஏற்பாடு செய்தாள். மான்சிங்கிற்கு மன்னிப்பு வாங்கிக் கொடுப்பதற்காகவே இவன் மனைவி சதா முயற்சித்து வருகிருள், இந்த முயற்சியில் சமீபத்தில் மத்திய சர்க்கார் உள்நாட்டு மந்திரியான டாக்டர் கட்ஜுவையும் பேட்டி கண்டிருக்கிருள். ஆனல் அவள் இன்னும் வெற்றி காணவில்லை.

இப்பொழுது மான்சிங் கூட்டத்தில் எட்டு நிரந்தர அங்கத்தினர்கள் இருக்கிருர்கள். இருபது அல்லது

முப்பது அங்கத்தினர்கள் தேவையான சந்தர்ப்பங்களில் சேர்ந்துகொள்வார்கள். அங்கத்தினர்கள் பெரும்பாலோரும் ஆக்ரா நகரத்தைச் சேர்ந்தவர்கள்.

மான்சிங்கோடு நெருங்கிப் பழகுபவர்கள் அவன் பருத்த உடலும் பெரிய மீசையும் கொண்டவனென்று கூறுகிறார்கள். ராஜபுத்திர பாணியில் வேஷ்டியும், குர்தாவும், தலைப்பாகையும் மட்டுமே இவன் அணிவது வழக்கம். இவனுடைய ஒரு கையில் ருத்திராக்ஷமாலையும் துப்பாக்கி மற்றொரு கையிலும் எப்போதுமிருக்கும். கையிலுள்ள ஒரு பையில் எப்போதும் "ஹனுமான் லீலை" என்ற நூலிருக்கும்.

—*Statesman*

வள்ளிமலை

மலையின்பேரிலுள்ள பிரம்மாண்டமான பாறையின்மீது தெய்வ சக்தியால் நிற்கும் கோபுரக் காட்சி.

புள்ளி மானைத்தேடி வந்து வள்ளிக்கொடி நாயகியை, கர்னகத்தில் கைப்பிடித்த கந்த வடிவேலனுடைய ஸ்தலம். இந்த ஸ்தலம் சுப்ரமண்ய ஸ்வாமியின் குன்று தோருடலாகிய ஸ்தலங்களுள் ஒன்ருகும்.

மலையின் கீழ் அழகான திருக்குளமிருக்கிறது. அடிவாரத்திலும் கோயில் இருக்கிறது. அங்குதான் உற்சவ மூர்த்தி இருக்கிருர், உற்சவங்கள், தேர்த் திருவிழா முதலியன அடிவாரத்தில் நடக்கின்றது. சத்திரங்கள் அநேகம் உண்டு. இந்த ஸ்தலத்தில் மயில்கள் அதிகம். மலையின் மேல் ஏறுவதற்கு படிக்கட்டுகள் அழகாகவும் சுத்தமாகவும் அமைக்கப்பட்டுள்ளன. மலையின் மேல் ஆலயம் கையாக அமையப்பெற்றுள்ளது. ஸ்வாமி மூலஸ்தானம் இருக்குமிடம் ஒரு குகைபோல் இருக்கிறது. கோயிலுள் சில இடங்களில் நின்ருல் 4 அடி உயரமும் 6 அடி உயரமும், சில இடங்களில் 3 அடி உயரத்திலும் மூடப்பெற்றிருக்கிறது. புள்ளி மயிலேறும் வள்ளி மண



மலையின் மேலுள்ள ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமி ஆலய மயில் மண்டபமும் துவஜஸ்தம்பக் காட்சியும்.

வாளன் வள்ளி தேவசேனா சமேதராய்க் காட்சியளிக்கிறார் சுந்தரமான தோற்றம். ஒரு பாறையின் மீது கோபுரம் அமைந்துள்ளது.

மலையின் மேலுள்ள இயற்கைக் காட்சிகளும் ஆங்காங்கே தெரியும் ஏழு நாற்கால் மண்டபங்களும் கண்ணுக்கு விருந்தாகும். வள்ளி தினைப்புனம் காத்தது, மஞ்சள் நீர் சுனை, சுப்ரமண்யர் கூப்பிட்டபோது விநாயகர் யானையாக வந்தது கல்லாக இருக்கிறது. மலையின் மேலேயே கோயிலுக்கு ஒரு மைல் தூரத்தில் வள்ளி மலை சுவாமி சமாதியும் இன்னும் இயற்கைக் காட்சிகளும், காணத் தகுந்த ஆசிரமமும் இருக்கிறது.

(வள்ளி மலை: அரக்கோணம்-காட்பாடி மார்க்கத்தில் திருவலம் ரயில் நிலையம்) இங்கிருந்து 8 மைல். வண்டி வசதி உண்டு. சென்னையிலிருந்து பஸ் மார்க்கமாய் போக வேண்டுமானால் குடியாத்தம் போகும் பஸ் காலை 5 மணிக்கு சென்னையிலிருந்து புறப்படுகிறது. இதில் ஏறி (திருவலம் கோயிலுக்கு) அருகில் பொன்னையாற்றின் மேற்கு கரையில் காலை 8-30 மணிக்கு இறங்கி அங்கிருந்து சித்தூர் மார்க்கம் போகும் பஸ்ஸில் ஏறினால் 6 மைல். 9-30 மணிக்கு வள்ளி மலை போகலாம். மறுபடியும் சுவாமி தரிசனம் மற்றுமுள்ள விசேஷங்களைத் தரிசித்துக்கொண்டு பகல் 3 மணிக்குத்திரும்பினால்அன்று இரவு 8 மணிக்கு சென்னை திரும்பிவிடலாம். சாப்பாடு வசதிகள் உண்டு.)

மூலம் :— காளத்தி நடேச முதலியார் இயற்றியுள்ள இறைவனின் உறைவிடங்கள்'' என்ற நூல்.

ஸுதாமா

★

[பகவானையே எண்ணி எண்ணி உள்ளம் கரைந்து நிற்கும் அன்பர்கள் கருதுவது என்ன? செல்வமும் சுகமும் அடையப்பெருதபோது இவை செய்யக்கூடிய தீங்குகளை எதிர்க்க நமக்குத் திறமை இல்லை என்றுதான் பகவான் அவற்றைக் கொடுக்கவில்லை என்றும், காசு பணம் கிடைக்கப் பெற்றபொழுது அவை செய்யும் தீங்கை எதிர்த்தடிக்கும் திறனையும் உடன் தருகின்ருன் என்றும் கருதுகிருர்கள். இத்தகைய கருத்து எவர்களுக்கு இருக்கிறதோ அவர்களே கண்ணனுகிய செல்வத்யையும் பெற்றவர்கள் அல்லது தெய்வ சம்பத்தைப் பெற்றவர்கள். குசேலர் இத்தகைய செல்வத்தைப் பெற்று கண்ணனுடைய இணையருத் தோழனுக விளங்குகிருர்.]

பகவானுடைய நாமத்தை ஒருமுறை உச்சரித்த நாவிற்கும் பலமுறை உச்சரிக்க ஆசை தோன்றுவது போலவும், ஒரு முறை முகில் வண்ணனைக் கண்ட கண்கள் தொடர்ந்து காண விருப்பமடைவதுபோலவும் நண்பனுடன் உண்டான நேசம் பிரிக்க முடியாதாகிவிட்டால் அதுவே தெய்விகத் தன்மையுடையது என்று சொல்லப்படும். இத்தகைய தெய்விக நேசங்கொண்ட குசேலரின் சரித்திரமிது. காமம், கோபம், லோபம் முதலியவைகளுக்குத் தெய்விக நேசத்தில் இடமில்லையாதலால் இது வளர்ந்துகொண்டே வருகிறது. இம்மாதிரி வளராத நேசம் உலர்ந்து பொய்யாகி விடுகிறது. அது வேண்டாம். குசேலர் கூறும் நண்பனுடைய பண்பு பின்வருமாறு :—

"அவனுடைய தெய்விகக் குணங்களையே வாய் பேச வேண்டும் கைகள் அவனிட்ட காரியங்களைச் செய்யவேண்டும். அசையும் பொருள்களிலும் அசையாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கும்

அவனை உள்ளம் ஓயாது நினைக்க வேண்டும். உள்ளும் புறமும் ஒருங்கே தூய்மைப்படும்படி அவனுடைய வரலாறுகளையே செவிகள் கேட்கவேண்டும். சிரம் அவன் வடிவமான சாதுக்களை விடாது வணங்கவேண்டும், கண்களும் கண்ணன் வடிவினரான அவர்களையே காணவேண்டும். சாதுக்களின் சரணோதகத்தை உட்கொள்வதில் ஆனந்தப்பரவசமாக வேண்டும்'' இவ்வாறு குசேலருடைய கருத்தைக் கேட்டுப் பருகிய பரீக்ஷித்து அரசருடைய மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

''இப்படி வரலாறு மூலமாக வாழ்க்கையை இன்பச்சுளையாக மாற்றும் முகுந்தனைப்பற்றி ஒருமுறை கேட்பவர் ஓயாது கேட்டுக் கொண்டு தானிருப்பார்கள், இன்னும் சிறிது சொல்லுங்களேன் கேட்போம்'' என்று சுகபிரம்மத்தைக் கேட்டுக்கொண்டார் அவ்வரசர்.

மாயவனுடைய எண்ணத்தை மன்னர் கிளறிவிட்டவுடன் சுகப்பிரம்ம முனிவர் உணர்ச்சிக் கடலில் மூழ்கிப்போனார். உள்ளத்திலிருக்கும் கண்ணனின் அணைப்பில் ஒருமுறை அகப்பட்டுத் திக்குமுக்காடிய பின்பு அக்கண்ணனையே 'குசேலர் வரலாறு' என்ற முறையில் பின்வருமாறு வெளியிட்டார் :—

குசேலர் என்ற பிராமணருக்குக் கண்ணனுடைய நேசத்தைப் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. மணமாகியிருந்தது, குடும்பிதான். கண்ணன் பிராமணர்களை எப்படி இருக்க வேண்டுமென்று விரும்பினானோ அப்படியே அனைவருக்கும் காமதேனுவாக இருந்தார் அவர். ருக்மணி ஒருமுறை பிராமணர் ஒருவரைக் கண்ணனிடம் தூதனுப்பியிருந்தாள். அவரைக் கண்டவுடன் கண்ணனுக்குக் குசேலரின் ஞாபகம் வந்திருக்கவேண்டும். ஏனென்றால் ''கிடைத்ததைக்கொண்டு திருப்தி அடைந்து பிராணிகளின் நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்து, அகம்பாவம் சிறிதும் கொள்ளாத அமைதியுள்ள பிராமணர்களை 'தலையால் வணங்குகிறேன்'' என்று கூறினான் கண்ணன். சிறு வயதிலிருந்தே உடனிருந்து பழகியதால் மலர்ந்து கனிந்த நேசமல்லவா? தன்னலமற்று, அஹங்கார மில்லாமல் எப்பொருளிலும் கலந்திருக்கும் பரம்பொருளை

மறவாமலிருப்பவனே பிராமணன் என்பதை எண்ணி இருப்பவர் போல் நடந்து வரும் இந்த குசேலரை எந்த பிராமணனைக் கண்டாலும் அவனுக்கு குசேலர் தான் ஞாபகத்திற்கு வருவார். இவ்வளவையும் அறிந்த சுகர் குசேலரை நமக்கு அறிமுகப்படுத்தும்போது தழுதழுத்த குரலில் அவருக்குக் கண்ணனிடமிருந்த ஈடுபாட்டை எடுத்துச் சொல்ல விரும்பி வேறு ஒன்றும் சொல்லாமல் 'கண்ணன் விரும்பியபடி, கண்ணன் இட்ட திட்டப்படி இருந்தார்'' என்று சொன்னார். குசேலருடைய பத்தினியும் இவரைப் போலவே இருந்தாள். பகவானுடைய இனிய நினைவில் ஏழ்மையை மறந்தாள். உள்ளம் செழித்திருந்தது. உடல் பசியால் இளைத்திருந்ததை பலரும் பார்க்க நேர்ந்தது. ஆகையால் க்ஷுத்க்ஷாமா'—பசியால் மெலிந்தவள் என்று இவளைப் பற்றிக்குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்குக் காரணம், இவளுக்கு கண்ணன் நினைவுடன் தன் நினைவும் இருந்தது. கணவன் கருத்துடன் தான் கலந்திருப்பதை உணர்ந்திருந்தாள். குசேலருக்குக் கண்ணன் நினைவு மட்டும் தானிருந்தது. தன்னை அவர் மறந்தார்.

ஆகையால்தான் இவள் மூலமாகக் குசேலரைத் தன்னிடம் வரச் செய்வது சுலபமாயிற்று. இல்லாவிட்டால் கண்ணனே குசேலரிடம் வரவேண்டிய அவசியம் உண்டாகியிருக்கும் எனவே நடந்ததென்னவென்றால் குசேலருடைய பத்தினி, பயபக்தியுடன் உடம்பு நடுங்க வாய் தழுதழுக்க "கண்ணனோ திருவின் கேள்வன், லக்ஷ்மிகாந்தன் உங்கள் நண்பராயிற்றே! சாதுக்களுக்கும் சரணமடைந்திருப்பவர்களுக்கும் கருணைகாட்டுபவராயிற்றே! குடும்பியான தாங்கள் அவரிடம் சென்றால் நிரம்ப திரவியம் கொடுப்பாரல்லவா?'' என்றாள்.

தியானத்திலிருந்த குசேலருக்குக் கண்ணனைப் பற்றிய வாக்கியங்கள் தேனை ஊற்றுவது போலிருந்தது. கவனித்துக் கேட்டார். இன்ப அலைகள் நினைவில் மோதிக்கொண்டன; 'கண்ணனுக்கு என்னிடம் எல்லையில்லா அன்பு உண்டு அவனுக்கு என்னைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் தீவிரமாகிவிட்டது. இல்லாவிட்டால் என்றுமில்லாத முறையில் இவள் இப்படி கூறவேண்டிய அவசியமில்லை! கண்ணன் துவாரகையில் இருந்து கருணை புரி

வதும் நான் குடும்பியாக இருப்பதும் ஒன்றும் புதிதல்லவே என்று நினைத்துப் பத்தினியின் வாயால் கண்ணன் அழைப்பை ஏற்றுக் கொண்டார், அவள் முகத்தைப் பார்த்தார். கண்ணன் இருந் தான். 'ரகசியத்தைச் சொல்லாதே' என்று ஜாடை செய்ததைப் புரிந்துகொண்டார். 'சரி கண்ணனைப் பார்க்கப் போகச் சொல்கிறாய், வெறுங்கையுடனா போவது?' என்று சமாளித்துக் கொண்டு கேட்டார். மனைவி அவசர அவசரமாக நாலு வீடு களில் ஏறி இறங்கினாள். அந்த வீடுகளில் 'வேண்டாம்' என்று அவர்கள் ஒதுக்கியிருந்த அவல் உமிப்பிடிகள் நான்கைச் சேமித்து வந்து ஒரு கந்தையில் கட்டிக்கொடுத்தாள்.

"ஒருவருக்கும் வேண்டாதது தானே பகவானுக்குப் பிடிக்கும். சாதுக்களும் விரும்புவார்கள்" அதற்குப் போட்டியுமில்லை. அதனால் பொறாமையும் தோன்றாது, எனவே அதிருப்தியும் இல்லை. வருத் தமுமில்லை. அப்படிப்பட்ட அவலைக் கொடுத்தாயே' என்று கக்கத் தில் இடுக்கியபடி துவாரகையை நோக்கிப் புறப்பட்டார்.

'வரச் சொல்லிவிட்டோம். நண்பனுக்குச் சிரமம் இருக்கக் கூடாது' என்பதற்காக கண்ணன் தயாராக இருந்தான். துவா ரகை அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஊருக்கு முதல் வீட்டில் தன் ருக்மணியுடன் வாசலுக்கு நேராக உட்காரந்துகொண்டு வர வேற்புக்குத் தயாராக பக்தியுடன் பேசிக்கொண்டிருந்தான் கண் ணன். குசேலரும் கணப் பொழுதில்—ஆம், கண்ணன் நினைவில் காலத்தை மறந்து—ருக்மணியின் வீட்டின் முன் நின்றார். கண் ணனைக் கண் குளிரப் பார்த்தார். கண்ணனும் கண்டான். ஊஞ் சலைவிட்டுக் கீழே குதித்துவிட்டான். ருக்மணியும் ஊஞ்சலி னின்று இறங்கிவிட்டாள்.

கண்ணனைக் கண்டதால் பிரமித்து நிற்கும் ஏழைப் பிராமணனிடம் ஓடினான் கண்ணன். "அண்ணா உன்னை நினைத்துக்கொண்டே இருந்தேன். என் ஞாபகம் வந்ததா? என் மனதைக் குளிர்விக்க வந்தாயே" என்று கூறியபடி குசேலரை அப்படியே கட்டியணைத்துத் தூக்கிக்கொண்டு போய் ருக்மணியுடன் தான் உட்கார்ந்திருந்த ஊஞ்சலில் தன் மேல் பீதாம்பரத்தைப்

போட்டு உட்கார்த்தினர். ருக்மணிக்கு என்ன செய்யவேண்டும் என்பது உடன் புலப்பட்டது. பூஜைக்கு வேண்டிய பொருள் களைக்கொண்டு வந்தாள். தங்கத் தட்டில் குசேலரின் பாதங்களை வைத்து அலம்பி அந்த நீரைத் தலையில் தெளித்துக்கொண்டு அதன் பெருமையைக் கொண்டாடினாள். ருக்மணி மங்கள ஹாரத்தி எடுத்து உபசரித்தாள். அருகிலிருந்து சாமரம் போட்டாள். பட்டுப் புடவையும் அழகும் (உலகிற்கு அன்னையும் மாயை வடிவு கொண்டவளும்) உள்ள லக்ஷ்மியும், கிழிந்த ஆடை யும் மெலிந்த உடலுங்கொண்ட குசேலரும் கண்ணன் முன்பாக ஒன்றுதான். உண்மையில் திருமாலின் மார்பில் திருவும் பிருகு வின் பாதங்களும் அமைந்திருக்கவில்லையா?

கண்ணன் குசேலரின் கண்களைப் பார்த்தான். குசேலரும் கண்ணனுடைய கண்களைப் பார்க்க வேண்டியதாயிற்று. ஒருவர் மற்றவருடைய கண்களில் எதைப்பார்த்தார்களோ நமக்குத் தெரி யாது. ஒரு வேளை "எவர்என்னை அன்புடன்வழிபடுகிறார்களோ அவர் களுக்குள் நானும் என்னிடம் அவர்களும் இருக்கிறோம்'' என்ற கருத்தை அனுபவித்துக்கொண்டிருக்கவேண்டும்.

வெகு நேரம் இப்படி இருந்து விட்டதை முதலில் உணர்ந்த கண்ணன் தன்னைச் சமாளித்துக்கொண்டு தான் உட்காரும் இடத் தில் குசேலரை உட்கார்த்தி அவருடைய இரண்டு கைகளையும் தன் இரு கைகளிலும் தழுவிப் பிடித்துக்கொண்டு பேச ஆரம்பித் தார்.

"குரு குலத்திலிருந்து பிரிந்த பிறகு என்ன செய்தீர்கள்? என் னிடம் சொல்ல வேண்டாமா? விவாஹம் செய்து கொண்டிருப்பீர் போலவே இருக்கிறது! பார்த்தால் குடும்ப இன்பத்தில் ஈடுபட்ட வர் என்று ஒருவரும் சொல்லமாட்டார்கள். போகட்டும் உமக்குச் சரியான பத்தினி கிடைத்தாளா? அப்பொழுதே உங்க ளுக்கு பணம் காசு என்றால் பிடிக்காது. இருந்தாலும் ஒன்றிலும் ஒட்டாமல் குடும்ப காரியங்களைச் செய்து வருகிறீர்கள் போலிருக் கிறது.'' என்று கண்ணன் பேசிக்கொண்டே போனார். குசேல ருக்குப் பதில் சொல்ல வேண்டுமென்றே தோன்றவில்லை. கண்ண னுடைய உதடுகள் அசைவதையும் வசீகரமாகவுள்ள கைகளையும்

கண்டு தன்னையே பறிகொடுத்துவிட்டார். ருக்மணியும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். கண்ணன் மேலும் சொல்லிக் கொண்டு போனான்.

"நல்ல காரியங்களைச் செய்து வந்ததன் பயனுகவே பிறவியைப் புதுப்பித்துக்கொள்ளும் வாய்ப்புப் பெற்றிருக்கமுடியும்! அன்பனே உலகமே என் வார்த்தைகளைக் கேட்டு கட்டுக்களிலிருந்து விடுபட்டு பிறவிக் கடலை நீந்துபவர்களும் இதையே மெய்பிக்கிருர்கள். என்று, தான், உலகத்தின் நன்மையை விரும்புவதையும் ஞான குருவாக இருப்பதையும் ஞாபக மூட்டிவிட்டுப் பள்ளித் தோழமையை நினைத்துக்கொண்டான்.

"நாமிருவரும் குருகுலத்தில் இருந்தபோது குருபத்தினி உம்மிடம் விறகு—சுள்ளி வேண்டுமென்று கூறினுள். நானும் உம்முடன் வருவேன் என்று பிடிவாதம் பிடித்த பிறகு அந்தத் தாயும் சம்மதித்தாள். இருவரும் சேர்ந்து அடுத்திருந்த காட்டிற்குச் சென்று சுள்ளிகளைச் சேகரித்தோம். திடீரென்று அடைமழை பிடித்துக்கொண்டுவிட்டது. எங்கும் இருள் சூழ்ந்து கொண்டுவிட்டது. வழி தெரியவில்லை. முழங்கால்வரையிலும் வெள்ளமாய் ஓடிற்று. ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு (இப்பொழுது பிடித்துக்கொண்டிருப்பதுபோல) இரவு முழுவதும் காட்டில் திரிந்தோம். 'ஸுதாமா, ஸுதாமா' என்று கூப்பிட்டுக்கொண்டிருந்தேன், நீங்கள் கண்ணு, கண்ணு என்று கூப்பிட்டிக்கொண்டிருந்தீர்கள். இப்படியே இரவு கழிந்தது. விடியும் தருவாயில் நம் குருநாதரே நேரில் காட்டிற்கு வந்து நம்மைக் கண்டு மனங் கலங்கி நாம் பட்ட கஷ்டத்திற்காக நம் குருபக்தியைப் புகழ்ந்து எல்லா ஞானத்தையும் அநுக்கிரகித்தார். நானே குருவானுல் நம்முடைய குருவைப்போல் என்னை நம்பித் தன் சுகத்தை மறந்து போகின்றவர்களையும் பிரியமாக நடத்தவேண்டுமென்று தீர்மானித்தேன். யார் தன் சுகத்தை மறந்து குருவுக்குப் பணிவிடை செய்கிருர்களோ அவர்களைக் காண எனக்கு ஆசை. அந்த ஆசையால் தான் உம்மை இன்று இங்கு வரவழைத்தேன்."

என்னிடம் தன்னை அர்ப்பணம் செய்கிறவர்கள் என்னைத் தவிர வேறு ஒன்றையும் விரும்புவதேயில்லை. அது உயர்ந்த பிரம்ம பட்டமோ, இந்திர பதவியோ, உலக ஆட்சியோ யோக

சித்தியோ பிறப்பற்ற நிலேயோ எதுவானுலும் வேண்டாம் என்று சொல்லுவார்கள்'' என்று கண்ணன் சொல்லியது உண்மையாகி விட்டது.

குருகுல வாசத்தில் கண்ணனுடன் பழகிய குசேலர் தன்னேயே கண்ணனுக்காக அர்ப்பணம் செய்துகொண்டார். குடும்பம் எவ்வளவு பெரிதாலுல் என்ன? வறுமை மிகவும் துன்புறுத்தினுல்தான் என்ன? கண்ணச் சுவையில் மிதந்துகொண்டிருந்த அவருடைய மனம் கலங்கவே இல்லே. அவரைப் பார்க்க வேண்டும் என்று கண்ணனுக்கு ஆசை பிறந்தது. குசேலரின் மனேவியின் மூலம் அவமைத் தன்னிடம் இழுத்துக்கொண்டான் கண்ணன். குசேலரும் வந்தார். கண்ணனுடைய ஆசை நிறைவேறியது. ஆனுல் எதற்காக கண்ணன் குசேலரை வரவழைத்தானே அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு தனக்கு இருப்பதாகக் கருதினுன் கண்ணன்.

பணத்தைக் கொடுத்து அனுப்பிவிடலாம் என்ருலோ நேசம் கோபித்துக்கொள்ளும். குசேலருக்கு கோபமூட்ட முடியவில்லே. அவர் பத்தினியிடம் பணத்தை அனுப்பி வைத்துவிடலாம் என்ருலோ உலகம் பொறுக்குமா? கண்ணன் ஏதாவது கொடுத்தானு? குசேலர் ஏதாவது வேண்டும் என்று கேட்டாரா? இவ்வாறு உலகத்திலிருக்கும் தர்மசீலர்கள் கேட்பார்களே! என்று கண்ணன் கருதினுன். கவலேப்பட்டான்.

இவர் வாய் திறந்து ஏதாவது கேட்டுவிடக் கூடாதா? தர்ம சங்கடத்திலிருந்து தப்பலாம் என்ற கருத்துடன் தன்னுடைய முழு தாராளத்தையும் வெளிக்காட்டியபடி சிரித்த வண்ணம் இருந்தான் கண்ணன். வறுமைப் பற்றிய கவலே இருந்தால் அல்லவா கண்ணனிடம் கேட்கத் தோன்றும். பரம்பொருள் முன்பாகப் பேசத் தேவையோ பேச அவசியம் இல்லாத நிலேயோ ஆகிய அனுபவத்திற்கு வந்துவிட்ட பிறகு குசேலர் எப்படி பேசுவார்? அவர் ஒன்றும் கேட்பதாகத் தோன்ருது போகவே கண்ணனே வலியப் பேச்சுக்கொடுக்கத் தொடங்கினுன். இல்லாவிட்டால் சுற்றிலும் இருப்பவர் என்ன நினேப்பார்கள்?

"குசேல அண்ணு! நீங்கள் விவாகஞ் செய்துகொண்டீர்கள் அல்லவா? உங்களுக்குக் குடும்பம் என்றுலே பயமே. பார்த்தால் விவாகம் ஆகியிருப்பது போலவே தெரிகிறது: உங்கள் மனத்திற் கேற்ற மனையாள்தான் வாய்த்திருப்பாள். சரிதானே" என்று மறுபடியும் கிளறினுன் கண்ணன். வரும்போது அவல் முடிச்சு கட்டிக்கொடுத்து அனுப்பிய மனையாளை ஞாபகப்படுத்தினுலாவது குசேலர் அவலைக் கொடுப்பாரோ, அதன் மூலம் அந்த அம்மாளுக் குப் பணம் அனுப்பலாம் என்று யோசித்தான். குசேலர் வழிக்கு வருவதாக இல்லை. மதனி எனக்கு என்ன கொடுத்தனுப்பினுள்? வெறுங்கையுடன் அனுப்பி இருக்கமாட்டாளே, அதைக்கொடுங்கள் கள்" என்று தானே வேண்டினுன்.

அப்பொழுதும் கக்கத்திலிருந்த அவல் முடியை கொடுக்க வில்லை குசேலர். அவருக்கு ஏனோ எதற்காகவோ சொல்ல முடி யாத வெட்கம். ஆனுல் கண்ணன் அந்த அவல் முடிச்சை அப் பொழுதுதான் பார்த்தது போலப் பிடுங்கினுன். அதிலிருந்து ஒரு பிடி அவலை அள்ளிச் சரேலென்று வாயில் போட்டுக்கொண்டு சுவைத்தபடி நாக்காட்டினுன்.

"அமுத மயமான இப்படிப்பட்ட அவலை கோகுலத்திலிருந்த பொழுது சாப்பிட்டது. அம்மா யசோதை எனக்கென்று எங்கி ருந்தோ சேர்த்து இப்படிப்பட்ட அன்புப் பொருளைக் கொடுப் பாள். நான் கண்களை மூடிக்கொண்டு ரசித்துச் சுவைத்துச் சாப் பிடுவேன். அந்த நாட்களையும், அந்த சாதுக்களையும், அந்த லீலை களையும் ஞாபகப்படுத்தும் சக்தியுடையதாய் இருக்கிறதே! எனது மதனி கொடுத்தனுப்பிய இந்த அவல்!" என்று கண்கள் அடைந்த களிப்பால் நீர் சொரிய தழுதழுக்கும் குரலில் கூறியபடியே இரண் டாவது பிடி அவலை எடுத்து வாயில் போட்டுக்கொள்ள ஆரம்பித் தான். கண்ணனிடம் அன்பு கொண்டவர்களில் முதலிடம் பெற் றுள்ள லக்ஷ்மி, "பிரபோ! உங்கள் நாமத்தை (பெயரை) ஒருமுறை சொன்னுல் போதும்என்பது போல உங்கள் வரலாற்றை ஒருமுறை கேட்டால் போதும் என்பது போல உங்களிடம் அன்புக் காணிக் கையாக வந்த அவலின் ஒரு பிடியையே முழுவதும் சுவைத்துவிட முடியுமா? இரண்டாவது பிடியைப் போட்டுக் கொண்டால் முதற்

பிடியின் சுவை அவ்வளவு போதாது என்றுதானே பொருள். என்று கூறினுள். உண்மையை அறிந்த கண்ணன் வாயில் இருந்த அவலேயே மெல்ல ஆரம்பித்தான்.

"ஒரு நாமம் சொன்னுல் போதும் என்பது போல ஒரு பிடி அவல் சாப்பிட்டானே கண்ணன்! நாமும் ஒருநாள் இரவு கண்ண னுடன் இருந்து களித்தால் அந்த எண்ணத்திலேயே பல யுகங்களை இன்பமாய் ஓட்டிவிடலாமே. என்னைக் கண்டு மற்றவர்களும் கண்ணனுடைய அன்பிற்கு நாளுக்கு ஒருவராக பங்கு போட்டுக் கொண்டு வரவேண்டாமா? கண்ணனுடைய நேசத்தின் இனி மையை என்னைப் போலவே எல்லோரும் அனுபவிக்கவேண்டுமே என்று எண்ணினுர் குசேலர். பகவான் அதை ஆமோதித்தான் அன்று இரவு இருவரும் உறங்கவில்லை. பக்தனும் நண்பனுமான சுதாமாவுடன் இருந்த கண்ணன் தன்னை மறந்த இன்பத்தில் மூழ்கினுன். கண்ணன் அடைந்த இன்பவெள்ளம் பெருக்கெடுத்து படைப்பையே புளகாங்கிதம் ஆக்கியது என்றுல் குசேலர் என்ன ஆகியிருப்பார்? மறுநாள் காலையில் குசேலரை அவருடைய உடம் பிற்கும் வீட்டிற்கும் அனுப்பி வைத்தான் கண்ணன்.

உலகத்தில் எதைச் செல்வம் என்று ஜனங்கள் சொல்லுகிறுர் களோ அதைச் சுதாமா விரும்பவில்லை என்பது உறுதி. அந்த அழியக் கூடிய செல்வத்தைப் போன்ற கோடிக்கணக்கான வற்றை பாததூளியால் படைக்கும் திறமை பெற்றவருடைய நட் பைப் பெற்றவர் குசேலர். அந்த பகவானுடைய பெருமையை யும் நன்கு அறிந்தவர். தெய்வம் தான் உண்மைச் செல்வம் என்பதைத் தேர்ந்தவர். இப்படிப்பட்ட ஒருவர் லௌகீகப் பொருளை எச்சிலாய் எண்ணியதில் வியப்பு ஏது? இவரைக் காணக் கண்ணனுக்கு ஆசை. இவர் தான் விரும்பாததொன்றை மனைவி விரும்ப கண்ணன் செயலால் துவாரகை வந்தார். இப்படி ஒரு ஏற்பாட்டை கண்ணன் செய்துகொண்டது வியப்பே, அல்லது ஒரு வேடிக்கையே. கண்ணன் செய்வதெல்லாம் வேடிக்கைதானே! நாம் எதை வேண்டாம் என்று சொல்லுவோமே அதையே கேட் கும்படி சாதாரணமாகச் செய்துவிடுவான். ஆனுல் குசேலரை அப்படித் தோற்றுப் போகும்படி செய்யவில்லை. குசேலர் வந்

தார். ஆனால் கண்ணனிடம் அவர் ஒன்றும் கேட்கவில்லை. கண்ணன்தான், அவரை வேண்டி அவலைப் பிடுங்கிக்கொண்டான். பதிலுக்குப் பதில் அன்பு உலகில் செய்யவேண்டியது இல்லை. ஆனாலும் உலகத்தோர் வாயை மூடிக்கொண்டு இருப்பார்களா? பின்னால் இவற்றை கேட்கப் பிறந்திருக்கும் நாமும்தான் விட்டுவிடுவோமா? இதற்குப் பயந்த பகவான் எதைக் கொடுத்தார் என்று கவனித்துச் சொல்லாமற் போனால் குசேலர் வரலாறு குறையாக இருக்குமே.

துவாரகையை மயனால் அமைத்துக்கொண்டான் கண்ணன். தன்னுடைய நண்பனுக்கும் துவாரகை ஒன்றை அமைத்துக் கொடுக்க எண்ணினான். மயனைக் கூப்பிட்டு அமைத்துக் கொடுக்கச் சொல்ல நேரமில்லை. தானே ஒரே இரவில் தன் துவாரகையைப் போலவே குசேலருக்கும் நகரம், அரண்மனைகள், வேலையாட்கள், தோட்டம் முதலியவைகளை சிருஷ்டித்து குசேலரின் பத்தினிதான் அதற்கு நாயகி என்றும், குசேலரின் குழந்தைகள்தான் இராஜ குமாரர்கள் என்றும் உணரும்படியும் செய்தான். குசேலரும் கண்ணனும் என்றைய தினம் இரவு களிப்புடன் அளவளாவிக் கொண்டு இருந்தார்களோ அன்றிரவே குசேலரின் பத்தினியும் குழந்தைகளும் குபேர சம்பத்தை அனுபவிக்க ஆரம்பித்துவிட்டார்கள். கண்ணன் கொடுத்த செல்வம் ஆகையால் அதைப் பெற்றுக் கொண்ட அவர்களுக்கு தயை, நன்றி, பக்தி, தர்மம், அடக்கம், வணக்கம் ஆகிய எல்லாம் பன்மடங்கு வளர்ந்தனவே அல்லாமல் சிறிதளவும் குறையவில்லை. துவாரகாபதியாகிய கண்ணனின் கருணையே இவை. இளமைத் தோழனுக்கு தன் முழுக்கருணையையும் காட்டி இருக்கிறான் கண்ணன். என்று குசேல குடும்பம் எண்ணிற்று. அவர் எப்பொழுது திரும்புவாரோ என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தது.

குசேலரோ இரவு முழுவதும் கண்ணன் இன்பத்தில் மூழ்கி இருந்த பிறகு மறுநாள் காலை கண்ணன் வழியனுப்பப் புறப்பட்டு ஊர் திரும்பிக்கொண்டிருந்தார்; குசேலர் வந்த படியே பழைய குசேலராகத் திரும்பிக்கொண்டிருந்தார். கண்ணனுடைய கருணையையும் நேசத்தையும் எண்ணி மெய் மறந்தார். வந்தது முதல் விடைபெற்றுக் கொண்டது வரை நடந்த ஒவ்வொன்றையும்

எண்ணி எண்ணி இன்ப அலைகள் மோதி திக்கு முக்காடினர். மூச்சுத் தத்தளித்தது. எதைச் சுவைப்பார்? எதை ஒதுக்குவார்? கண்ணன் தன்னைக் கண்டதும் கட்டிக்கொண்டதும் ஒரே இருக்கையில் உட்கார வைத்ததும் மலர் போன்ற கரத்தால் முரட்டுப் பாதங்களை மென்மையாகப் பிடித்து பூஜை செய்ததும் ஒவ்வொன்ருக ஞாபகத்திற்கு வந்து கொண்டிருந்தன. எல்லாவற்றையும் விட அவர் பார்வையும், பத்தினி முதலானவர்களைப் பற்றிய பரிவான பேச்சும், உறவு கொண்டாடிய முறையும், உள்ளத்தில் அடங்காத சுவையை எழுப்பிக்கொண்டிருந்தன. உமியுடன் கலந்த அவலை வாயில் போட்டு மென்று பேரின்பம் அடைந்தவனைப்போல பித்துக்கொண்டு நின்ற கண்ணனை அவர் நினைத்த பொழுது அவர் தன்னை மறந்து போனர். பணம் வாங்கி வரச் சொன்னளே, அதை அவன் கொடுத்திருந்தாலும், நான் வாங்கி வந்திருந்தாலும் இவ்வளவு ஆழமான கண்ணன் அன்பை நினைக்க முடியுமா? பணத்தை எப்படிச் செலவழிப்பது? எப்படிப் பூட்டி வைப்பது என்று எண்ணமிடத்தானே புத்தி போகும் என்று நினைத்தார். எல்லாம் அறிந்த கண்ணனுக்கு குசேலரின் நிலை தெரியாது இருக்குமா? அவன் குசேலருக்கு க்ஷேமத்தைத் தவிர வேறு எதையாவது செய்வானு? இப்படியிருந்தும் பணத்தை ஏன் கொடுக்கவில்லை என்ற கேள்விக்கு குசேலர் கண்ட பதிலை கவனிக்க வேண்டுமல்லவா?

மனைவியிடம் ஆசைகொண்ட கணவன் எவ்வாறு மனைவியின் பிரியத்தை தான் ஒருவனே பெறவேண்டும் என்ற எண்ணத்தால் அவளை மற்றவர் பார்க்காமலும், அவள் மற்றவர்களைப் பார்க்காமலும் எச்சரிக்கையாய்க் காக்கிருனே அவ்விதமே பகவான் கண்ணன் நான் அவனிடம் கொண்டிருக்கும் அன்பு பணம் இல்லாமலிருக்க நிலையாயிருந்து பணம் வந்தவுடன் அதன் பக்கம் போய்விடும் என்று பயந்து எனக்குப் பணம் கொடுக்காமல் அனுப்பினன். அவனுடைய இந்த அன்பை என்னவென்று சொல்லுவேன்? இவ்வாறு எண்ணினர் குசேலர். இந்த எண்ண அலைகளில் மிதந்தபடி ஊரில் வந்து ஒதுங்கினர். எண்ணத்திலிருந்த துவாரகையும் அரண்மனையும் எதிரில் தென்பட்டன. வழி தப்பி விட்டோமோ என மயங்கினர். அதே சமயத்தில் மங்கள வாத்தி

யத்துடன் பணிப்பெண் புடை சூழ தன் பத்தினி எதிர்கொண்ட ழைக்க வருவதையும் கண்டார். இவ்வளவுக்கும் காரணம் கண் ணனே என்பதை கணப்பொழுதில் உணர்ந்தார்.

உள்ளன்புடன் நன்மை செய்பவன் வாயினல் சொல்லா மலும் நன்மையை அடைய இருப்பவன் உணராத முறையிலும் ஒன்றைச் செய்து முடிப்பான். அவ்வாறு அன்பை வெளியிடு வது அவன் இயல்பு. உள்ளன்புடன் கொடுப்பவன் தான் கொடுத்தது கோடியே ஆனலும் குவித்தது மலையானலும் கொடுத் தது போதாது என்றே உணர்வான். திருப்தி அடையவேமாட் டான். இவ்வளவு அன்பை காட்டக் கூடியவன் அழிவில்லாத, குறைவில்லாத கண்ணன் ஒருவனேதான். அவனுடைய அன்பு அவனுடைய நேசம், அவனுக்குத் தொண்டு செய்யும் பேறு, இவற் றையே ஒருவன் வேண்டிப் பெறவேண்டும். இத்தகைய எண் ணங்கள்தான் அவருடைய உள்ளத்தில் இருந்தன.

"நிதாயி"

THE ARYAVAIDIA PHARMACY [C.B.E.] LTD.

H. O. Trichy Road, Coimbatore.

(*Phone No.* **108**)

Branch :—

140, Bazaar Road, Rayapettah

Madras-14.

(*Phone No.* **85752**)

Approach for effective and excellent Ayurvedic medicines and treatment

Special treatments like Dhara, Pizhichil etc., undertaken.

Consulting Physician :—

Arya Vaidyan

P. V. RAMA VARIER

பாண்டுங் பிரமுகர்கள்

●

பாண்டுங்கில் நடைபெற்ற ஆசிய ஆப்பிரிக்க மகாநாட்டின் முடிவு எதுவாயினும் இந்த மகாநாடு ஆசிய ஆப்பிரிக்க தேசங்களின் பிரமுகர்களனைவரையும் ஒருங்கே பிணைத்து வைத்துள்ளது. முக்கியமாக சூயென்லாய் இந்த மகாநாட்டில் பிரதம நக்ஷத்திரமாய் ஜொலித்தார் என்று கூறவேண்டும். இந்த மகாநாட்டில் இவருடைய மதிப்பு மிகவும் உயர்ந்துவிட்டது. ஏன், மகாநாட்டின் வெற்றிக்கே இவரே காரண புருஷர் என்று கூறலாம். இவரைப்பற்றி ஜெனரல் மார்ஷல் கூறிய யாவும் உண்மை என்று மகாநாட்டின் முடிவு நிரூபணஞ் செய்துவிட்டது.

1945-ம் ஆண்டிலேயே இவரது அபார ராஜதந்திரத்தையும் சமரசம் ஏற்படுத்திவைப்பதில் நிபுணத்துவத்தையும் இந்த அமெரிக்கச் சேனாதிபதி வெகுவாகப் புகழ்ந்துள்ளார். இந்தச் சாமர்த்தியத்தை இவர் ஜெனிவாவில் வெகுவாகக் காண்பித்து இந்தோ சீனாவைக் காப்பாற்றியுள்ளார். இன்று பாண்டுங்கில் கிழக்கு—மேற்கு தகராறைத் தவிர்த்து பிரமாத வெற்றியடைந்துள்ளார்.

பாண்டுங்கில் சூயென்லாய்தான் அடிக்கடி அங்கு வந்திருந்த பிரதிநிதிகளுக்கு அவர்கள் அங்கு கூடியுள்ளதன் நோக்கம் அந்தந்த தேசங்களின் சித்தாந்தங்களை மட்டும் விவாதிப்பதற்கல்ல; ஆனால் எல்லாவற்றிலும் ஒரு பொது உடன்படிக்கைக்கு வருவதே முக்கியமாகும் என்பதை வற்புறுத்திக் கூறினர். இவருடைய இந்த சமரச மனோபாவம் வீண்போகவில்லை. மகாநாட்டையே

வெற்றிகரமாகச் செய்ததன்றி இவரது மதிப்பையும் உயர்த்தியது. பாண்டுங் மகாநாடு நடவடிக்கைகளில் இவர்தான் பிரதான புருஷராக விளங்கினர். நேரு இந்த மகாநாட்டில் அவ்வளவாகப் பிரகாசிக்கவில்லை; ஏனென்றால், ஆசியாவிற்குத் தகர்க்க முடியாத ஒற்றுமை வேண்டுமென்ற இவர் கொள்கை வெற்றி பெருததேயாகும். மகாநர்ட்டின் வெற்றிகரமான முடிவிற்கு இந்தோனேஷிய பிரதமர் சாஸ்திரோமியோ, ஜோ ஜோவினுடைய உழைப்பும் முக்கிய கர்ரணமாகும்.

ஆசிய நர்டுகளின் ஒற்றுமையைக்குலைப்பதற்கென்றே வந்த ஜான் கொத்தலாவலையின் முயற்சிகளைச் சிதற அடித்து 29 தேசங்களுக்கிடையேஒரு பொது ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது சாஸ்திரோமிய ஜோ ஜோர்வின் மகத்தான சாதனையாகும். இதனல் இவர் உலகப் புகழ் பெற்றுள்ளாரென்று கூறவேண்டும்.

பிலிப்பைன்ஸ் தலைவர் கார்லஸ் ரோமுலோ எல்லோரும் எதிர்பார்த்தவாறு அமெரிக்காவை ஆதரித்து அதிகம் பேசவில்லை. பிலிப்பைன்ஸ் விஷயமாகவே அதிகம்சிரத்தையெடுத்துக்கொண்டார். சூயென் லாயுடனும் போராடாமல் ஒதுங்கி மகாநாட்டில் அமைதியாக இருந்தது குறிப்பிடத்தக்கது. மத்திய கிழக்கு நாடுகளின் சீர்குலைந்த நிலை இந்த மகாநாட்டிலும் பிரதிபலித்தது பற்றி நாஸருக்குத் தலைவேதனையாயிருந்தது. ஜப்பானியத் தலைவர் தக்காசாகி மகாநர்ட்டில் அதிகமாய் ஒன்றும் பேசவேயில்லை, பேசுவதை விட மகாநாட்டு நடவடிக்கைகளை கவனிப்பதிலேயே சிரத்தையாயிருந்தார். இதற்குக் காரணம் ஜப்பானுக்குப் பொருளாதாரத் துறையிலும் உற்பத்தி துறையிலும் நீண்டகாலமாக ஆசியநாடுகளின் தலைமை ஸ்தா

னம் பெற்றிருந்தும் ஆசியாவின் மக்களுக்குத் தலைமை ஸ்தானம் பெருந்தேயாகும். மேற்கூறிய தலைவர்கள் தான் உலகப்பிரசித்தி யடைந்துவிட்ட பாண்டுங் மகாநாட்டில் விசேஷ பங்கெடுத்துக்கொண்டவர்களாவார்கள்.

—With Acknowledgements to *Indonesian Observer*, Djakarta, Indonesia.

M. E. T. A.

A Name to Remember for

Electrical Installations of every description and Radio Servicing Charges Moderate

Wish all our patrons A Happy & Prosperous New Year

Get the Best

Buy From :—

Madras Electric Trades & Agencies

Engineers, Contractors & Dealers

80/3, Lloyds Road, Gopalapuram, Madras-6.

Prop. K. M. ABRAHAM

பதிலுக்குப் பதில்!

புதிதாக வெளிவரும் பிரசுரங்களையெல்லாம் தாமதமின்றி உடனே படித்துவிடுவதில் பெருமை கொண்ட ஒரு கல்லூரி மாணவி ஒரு தினம் தன் ஆசிரியரிடம் அப்போது வெளிவந்திருந்த ஒரு பிரசுரத்தைக் குறித்து "சமீபத்தில் வெளிவந்த இந்தப் பிரபல நவீனத்தை நீங்கள் படித்திருக்கிறீர்களா" என்று கேட்டாள். ஆசிரியர் "நான் படித்ததில்லையே" என்றார்.

உடனே மாணவி "இவ்வளவுதானா இந்தப்புத்தகம் வெளிவந்து மூன்று மாதம் ஆகப்போகிறது, சீக்கிரம் வாங்கிப் படியுங்கள்" என்றாள். ஆசிரியர் நிதானமாக "சரிதானம்மா நீ வால்மீகி ராமாயணம் படித்ததுண்டா"? என்றார். மாணவி படித்ததில்லை யென்றதும், "பூ இவ்வளவுதானா? இந்தப் புத்தகம் வெளியாகி மூவாயிரம் ஆண்டுகளாகிறதே" என்றார்.

"துரை"

D. வேலாயுதம் பிள்ளை

சிங்கப்பூர் விடுதி

1/8, வானல்ஸ் ரோட்,

எழும்பூர் P. O. மதராஸ்-8.

குறைந்த சார்ஜில் ரூம் வாடகை விடப்படும்.

S. I. R. ஐஸ் பேக்டரி எதிரில் இருக்கிறது.

ஆசிய-ஆப்பிரிக்க நேசச் சின்னம்-பாண்டுங்

★

சமீபத்தில் இந்தோனேஷியாவில் பாண்டுங்கில் நடந்த ஆசிய—ஆப்ரிக்க மகாநாடு சரித்திரத்திலேயே ஒரு முக்கியமான சம்பவமாகும். ஆசிய நாட்டுப் பிரதிநிதிகள் முதன் முதலாக ஒன்று சேர்ந்த சந்தர்ப்பம் இது என்ற பெருமை இதற்கில்லாவிடிலும் மற்ற அனேக அம்சங்களில் இந்த மகாநாட்டிற்கு முக்கியத்துவமுண்டு.

1946—ம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னரே ஆசியநாடுகளின் மகாநாடு ஒன்று புதுடெல்லியில் கூடியது. ஆசியாவில் தோன்றியுள்ள விழிப்புணர்ச்சியின் சின்னமாக விளங்கியது இந்த மகாநாடு.

1949—ம் ஆண்டிலும் மற்றொரு ஆசியநாடுகளின் மகாநாடு இந்தோனேஷியாவின் சுதந்திரப் போராட்டத்தை ஆதரிப்பதற்காகக்கூடியது. ஆசியாவிலுள்ள நாடுகளுக்குச் சுதந்திரம் அநேக நூற்றுண்டுகளாக இல்லாததால் அவற்றின் பொருளாதார நிலைமை மிகப் பரிதாபகரமாயிருந்தது.

ஆசிய-ஆப்பிரிக்க மகாநாட்டின் வைபவத்தை யொட்டி இந்தோனேஷிய சர்க்கார் வெளியிட்ட தபால் தலை.

பொருளாதார நிலைமை பரிதாபகரமானதால் ராணுவ பலமும் மிகக் குறைவு. அதனல் உலகத்தில் இந்த ராஜ்யங்களைப் பற்றி அவ்வளவாக மதிப்பே கிடையாது. இம்மாதிரி நாடுகளின் மகாநாடென்றாலே மேல் நாடுகளுக்கெல்லாம் சமீப காலம் வரையிலும் கேலியாகத் தானிருந்தது.

ஆசியநாடுகளின் பொருளாதார நிலையைச் சீர்படுத்துவதற்கு, ரஷ்யாவினிடமும் ஒரு சஞ்சீவி உண்டு என்ற உண்மையைத் தெரிந்துகொண்டது முதல் மேல் நாடுகள் தங்கள் மனோபாவத்தைச் சிறிது மாற்றிக்கொண்டுள்ளன. இப்போது மேல்நாட்டுத்தலைவர்களுக்கு ஆசியநாடுகள் எந்த வழியில் செல்லுமென்பதைப் பற்றி உண்மையாக பயமுண்டு. தேவையான பொருளாதார வசதிகளைத் தங்களிடம் பெற்றுக்கொண்டு ரஷ்யாவின் எதிரிகளாய் விடமாட்டார்களா என்று ஏங்குகிறார்கள் மேல் நாட்டார்.

ஆனல்! ஜவஹர்லாலைப் போலுள்ள தலைவர்களுக்கு ரஷ்யாவின் எதிரியாவதிலும் மேல்நாடுகளின் எதிரியாவதிலும், ஆபத்து ஒன்றுபோலுண்டென்று நன்கு தெரியும் அதனல்தான் இரு கட்சிகளையும் விரோதித்துக் கொள்ளாமல் இருவர்களுக்கும் நண்பராக இருக்க விரும்புகிறார் ஜவஹர்லால். சில ஆசிய நாட்டுத் தலைவர்களுக்கு இந்தக் கொள்கையில் நம்பிக்கையில்லாததால் பகிரங்கமாக அமெரிக்க கொள்கையைப் பற்றித் தீர்மானித்துள்ளார்கள். இந்தக் காரணத்தால் ஆசிய நாடுகளுக்கிடையே வேற்றுமைகளும் வேறுபட்ட அபிப்பிராயங்களும் தோன்றியுள்ளன. இந்த வேறுபட்ட அபிப்பிராயங்களைப் பற்றி நன்கு அறிந்துள்ள மேல் நாடுகள் பாண்டுங் மகாநாட்டில் ஆசிய நாடுகளெல்லாம் சண்டையிட்டுக் கொள்ளுமென்றேதான் எதிர்பார்த்தார்கள். ஆசியநாடுகளிடையே கட்சி பிரதிக்கட்சிகள் ஏற்படுமென்றும் எதிர்பார்த்தனர்.

ஆனல் அப்படியொன்றும் பாண்டுங்கில் நடைபெறவில்லை வேற்றுமைகளைப்பற்றிச் சிந்திக்காமலே எங்கெந்த விஷயங்களில் அபிப்பிராய பேதங்களில்லையோ அந்த விஷயங்களை மட்டும் சர்ச்சை செய்து தீர்மானங்களை நிறைவேற்றி விட்டனர் பாண்டுங்கில் கூடிய ஆசிய ஆப்பிரிக்க மகாநாட்டுப் பிரதிநிதிகள். ஒருவருக்கொருவர் பொருளாதார உதவியைச் செய்வதற்கோ உற்பத்திப் பெருக்கத்தின் முயற்சிக்கு உதவி புரிவதற்கோ வெள்ளையரின் ஆதிக்கத்தை விரட்டுவதற்காக ராணுவ உதவி புரிவதற்கோ இவை யெவற்றிற்கும் தகுதியானவர்களல்ல பாண்டுங் மகாநாட்டில் கூடிய ஆசிய ஆப்பிரிக்க நாடுகள். தங்கள்

பண்பாடுகளை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளும் தகுதிமட்டும் பெற்றவர்கள்தான் இவர்கள். வலிமை பெற்றவர்களிடையே ஏற்படக்கூடிய நல்லுறவு போலவே வல்லமையற்ற நாடுகளிடையேயும் நல்லுறவு ஏற்படலாமல்லவா? அந்த நல்லுறவுதான் இன்று பாண்டுங் மகாநாடு மூலம் ஸ்திரப்பட்டுள்ளது.

எதைச் சாதித்தாலும் சாதிக்காவிட்டாலும் இந்த நல்லுறவு அனைவருக்கும் நன்மையே பயக்கக்கூடியதென்பதை ஆசிய—ஆப்பிரிக்க நாடுகள் நன்கு உணரும். இந்த உணர்ச்சியும் இதையொட்டிய பயமும் மேல்நாடுகளுக்கு உண்டென்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆசிய ஆப்பிரிக்க மகாநாட்டைப்பற்றிய கீழ்வரும் தகவல்கள் நம்நாட்டு மக்களுக்கு மிகவும் சுவையானவையே.

★

ஆசிய ஆப்ரிக்க மகாநாட்டை இந்தோனேஷியா சர்க்காரும் பொதுமக்களும் ஒரு மகத்தான வைபவமாகத்தான் கொண்டாடினார்கள். இந்த மகாநாட்டின் ஞாபகச் சின்னமாக இந்தோனேஷிய சர்க்கார் வெளியிட்டுள்ள பிரத்தியேக தபால் தலைகளில் ஒன்றை இக்கட்டுரையில் சேர்த்துள்ளோம். இந்த மகாநாட்டைப் பற்றின பல அரசியல் தகவல்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் ஏராளமாக வெளிவந்துள்ளன. கீழ்வரும் அரசியல் அல்லாத தகவல்களும் வாசகர்களுக்கு சுவாரஸ்யமாயிருக்கும்.

ஆப்ரிக்கா ஆசிய மகாநாட்டிற்கு விஜயஞ்செய்த பிரதிநிதிகள் தங்கியிருந்தஒருஹோட்டல் பலவித நடவடிக்கைகளால் கலகலப்பாயும் சுறுசுறுப்பாயுமிருந்தது. சில நிமிஷங்களுக்கொருதடவை பல்வேறு ராஜ்யங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் அவரவர்கள் தேசீய உடைகளில் தோன்றி தங்கள் சிந்தனைகளை ஆசியாவிலிருந்து ஆப்பிரிக்காவிற்கும் மறுபடி ஆசியாவிற்கும் தாவச்செய்து கொண்டிருந்தார்கள். ஒரு நிமிஷத்தில் தோன்றுவது ஜப்பான் தேசத்து சின்னமான "செர்ரி" புஷ்பங்கள் மற்றொரு நிமிஷத்தில் தோன்றுவதுஎகிப்தையோ மத்திய கிழக்கு ராஜ்யத்தையோ சேர்ந்த ஒரு பாலைவனவாசி. திடீரென வட ஆப்ரிக்காவைச் சேர்ந்த டிரிபோலிவாசியைக் காணலாம்.

நன்றாகக் கவனியுங்கள், நெட்டையான கம்பீர மனிதர் ஒருவர் வருகிறார். அந்தஹோட்டலின் முன்பக்க வராந்தாவிலிருந்த அனைவர் மனத்திலும் எழுந்த கேள்வி "இவர் யார்" என்பதுதான். இவர்தான் ஜொருசலத்து மன்னன். உலகத்தில் பிரிட்டிஷ் சிங்கத்தையே அஞ்ச வைத்த சில வல்லமை படைத்தவர்களுள் ஒருவர்.

எட்டுவயதுள்ள அழகான ஒரு சிறுமி உல்லாசமாக

ஹோட்டல் வராந்தாவில் ஓடிக் குதித்துக்கொண்டு அநேகர் மனத்தையும் பரவசப்படுத்துகிருள். இந்த ஹோட்டலில் சாதாரணமாய் காணப்படாத ரகமான இந்தப் பெண் யாரென்று உங்களுக்குத் தெரியவேண்டுமா? இவள் தான் கம்போடியா ராஜ்யத்து முக்கிய பிரதிநிதியான நோராடாம் சின்ஹாநூக் என்பவரின் புதல்வி ராஜகுமாரி சூர்யரங்ஸே (சூர்யகிரணம்) என்பவள்.

இந்த அழகிய ராஜகுமாரி நீங்கள் இருக்குமிடத்திற்குவந்து ராஜவம்சத்திற்குகந்த மரியாதையுடனும் காம்பீர்யத்துடனும் உங்களை வணங்கிய பின்னர் ஒரு சிறு குழந்தையைப்போல் ஓடோடியும் மறைகிருள்.

மேற்கு ஆப்பிரிக்காவைச் சேர்ந்த கோல்டு கோஸ்டு ராஜ்யப் பிரதிநிதிகளைக் கண்டவர்களெல்லாம் திகைத்துப் பிரமித்துப் போகிருர்கள். இவர்கள் உடைகளில்தான் எத்தனை வர்ணங்கள்! எவ்வளவு அழகு படைத்தவை! விஜயஞ்செய்திருந்த பிரதிநிதிகளனைவர்களிலும் நெட்டையான மனிதர்கள் இவர்கள்தான். எத்தியோப்பியா சக்ரவர்த்தி சம்பாஷணையிலாழ்ந்து நடந்துவருவதைக் கண்டவர்கள் யாவரும் ஏதோ ஒரு அவதார புருஷனைக் கண்டவர்கள்போல் மனங் களித்தார்கள். விஜயஞ்செய்திருந்த பிரதிநிதிகளனைவரும் நாடுகளை ஆளும் மன்னர்கள் அல்லர். தன் நாட்டில் நிலவி வரும் ஆட்சியை எதிர்த்து அதன் அட்டூழியத்திலிருந்து தப்பிப் பிழைத்தவர்களும் பிரதிநிதிகளின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான். அவர்களில் ஒருவர் ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவர் இவர் ஹோட்டலில் ஒரு இடத்தில் தனியாக இருந்து கொண்டிருப்பதைக் கண்டவர்களெல்லாம் இவரைச் சற்றுக் கவனிப்பார்கள். வலிமை பெற்றுத் திகழும் முக தேஜஸ், பராக்கிரமம் தோன்றும் கண்கள்—இவற்றைக் கண்டால் இம்மாதிரி ஒருவரிடம் எந்த சர்க்காரால்தான் எவ்வளவு நாள்தான் போராடமுடியுமென்று தோன்றுகிறது. வட ஆப்பிரிக்காவிலுள்ள் இவர் தேசத்தில்ஆட்சிபுரியும்சர்க்கார் இவர் தலைக்குப் பரிசு வைத்துள்ளது. ஆனல் இவரைப் போலத் தலைவர்கள் விதிக்கும் வழிக்குத்தான் பொதுமக்கள் செல்வார்களென்பதிலோ வேண்டாத பிரெஞ்சு ஆட்சி வீழ்ந்து விடுமென்பதிலோ என்ன சந்தேகம்? அதோ, அங்கிருக்கும் மேஜைக்கருகிலிருந்துகொண்டு நால்வர் குளிர்ந்த பானங்களை அருந்திக் கொண்டிருக்கிருர்கள்! அவர்கள் தான் லிவிப்பைன் ராஜ்யத்திலிருந்து வந்த பிரதிநிதிகள்.

பர்மா தேசத்து பிரதிநிதிகளின் தலையணியைப் பார்த்து புகழாதவர்களே கிடையாது. அவர்கள் வராந்தாவிற்கு வந்தவுடன் அவர்களுடன் இருந்த

வேலையிலிருக்கும் இந்தோனேஷியா போலீஸ் இன்ஸ்பெக்டர் கம்பீரமான ராணுவ வணக்கஞ்செலுத்தினர்.

பர்மாப் பிரதிநிதிகள் கை, நிறைய வைத்திருந்த 'பைல்கள்' அவர்கள் தீவிரமாக ஆப்ரிக்கா ஆசிய மகாநாட்டின் வெற்றிக்காக உழைக்கிறார்களென்பதற்கு அறிகுறியாயிருந்தன.

ஹோட்டலுக்கு வெளியே சங்கநாதம் முழங்குகிறது, யாரோ மிகப்பெரிய பிரதிநிதி ஒருவர் ஹோட்டலுக்கு விஜயஞ் செய்கிறார். ஜனங்களை ஒரு நிமிஷநேரம் ஆவலுடன் காக்க வைத்த பின்பு அவர் தோன்றுகிறார். சதா புன்னகை தவழ விளங்கும் சீனப் பிரதிநிதியான சூ யென் லாய் ஜனங்களின்மீது இடித்துக்கொண்டே மற்ற மகாநாட்டுக்கு விஜயஞ்செய்திருந்த பிரதிநிதிகள் அவருக் களிக்கப் போகும் விருந்தை ஏற்றுக் கொள்ள அவசர அவசரமாகச் செல்கிறார். உங்கள் முன் இப்போது தோன்றும் டாக்டர் கானி என்பவர் இந்தோனேஷியாவின் தபால் தந்தி இலாகா மந்திரியாவார். இவர் வெளி நாடுகளிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகளுக்கும் பத்திரிகைகாரர்களுக்கும் அவர்கள் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்து மகிழ்விப்பதே தன் கடமையாகக் கொண்டிருந்தார். இன்றே உங்களுக்கு ஜாகர்தாவுக்குச் செல்லும் விமானத்திற்கு பிரயாணச் சீட்டு வேண்டுமா? டாக்டர் கானி கண்டிப்பாக உங்களுக்கு வாங்கிக் கொடுப்பார். பத்திரிகைகாரருக்கு எங்காவது அவசரமாகச் செல்வதற்கு டாக்ஸி வேண்டுமா? அதற்கும் டாக்டர் கானியிடம் சொன்னால் போதும். வந்தவர்களெல்லோரும் திருப்தியடையவேண்டுமென்ற ஒரே கொள்கையை டாக்டர் கானி வெற்றியுடன் நிறைவேற்றிவிட்டார்.

உங்கள் கடிகாரத்தைப் சற்றுப்பார்த்துக்கொள்ளுங்கள்! நீங்கள் ஹோட்டல் வராந்தாவிலிருந்துகொண்டு ஆசியாவையும் ஆப்பிரிக்காவையும் பார்த்துக்கொண்டிருப்பதில் இரண்டு மணி நேரம் செலவழித்ததை திகைப்புடன் அறிவீர்கள். நீங்கள் பார்த்தது மனிதர்களின் உல்லாசமான ஊர்வலக் கூட்டமல்ல! நூற்றாண்டு கணக்காய் நிலவி யிருந்த மயக்கந் தீர்ந்து விழிப்புற்றுத் தன்னம்பிக்கை பெறும் இரண்டு கண்டங்களின் உணர்ச்சி தரும் காட்சியாகும்.

மகாநாட்டுக்குப் பிரதிநிதிகள் அனுப்பி வைத்த ராஜ்யங்களுள் சாவூதி அரேபியாவும் ஒன்று. இந்த தேசத்துப் பிரதிநிதிகள் மகாநாட்டிற்கு வந்ததும் முதன் முதலாகச் செய்த தென்னவென்றால் இரண்டு டச்சுப் பெண்மணிகளை தங்கள் குமாஸ்தாக்களாக அமர்த்திக் கொண்டதாகும்.

இந்தோனேஷியா ராஜ்யம் சமீபத்தில்தான் டச்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்தது.

அதனால் டச்சுக்காரர்களைப் பற்றி இந்தோனேஷியாவில் பொதுவாக வெறுப்பும் அவநம்பிக்கையும் பரவியுள்ளது.

இரண்டு டச்சுப் பெண்களை இந்த அரேபியப் பிரதிநிதிகள் குமாஸ்தாக்களாக அமர்த்திக் கொண்டது. மகாநாட்டில் கலந்துகொண்ட எவருக்குமே பிடிக்கவில்லை. போதாக் குறைக்கு இந்த டச்சுப் பெண் மணிகள் இந்தோனேஷியாவிலுள்ள டச்சுத் தூதராலயத்திற்கு அடிக்கடிப் போய் வருவது சகஜமாயிருந்ததை ரகசியப் போலீசார் கவனித்து வைத்திருந்தனர். மகாநாடு நடைபெற்ற ஹாலில் இந்தப் பெண்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

மகாநாட்டில் பண்டித நேரு, சாஸ்தராமியோ ஜோ ஜோ ஊநூ, மகமது அலி, கொத்தால வலை முதலியவர்களின் சொற்பொழிவு உலகமெங்கும் முழங்கிற்று. உலகமெங்கும் முழங்காத சில அபிப்பிராயங்களைக் கேளுங்கள்! மேல் நாட்டைச் சேர்ந்த ஒருபிரமுகர் இவ்வாறு கூறினார்:—

"இப்போது நடைபெறும் ஆசிய ஆப்பிரிக்கமகாநாடு இந்த நூற்றாண்டில் நடந்துள்ள மிகவும் பெரிய வேடிக்கையான நிகழ்ச்சியாகும். கூடியிருக்கும் இருபத்தொன்பது ராஜ்ய பிரதி நிதிகள் சமாதானத்திற்கும் சுதந்திரத்திற்கும் இருபத்தொன்பது விதமான வியாக்கியானங்கள் கூறமாட்டார்களா?"

இந்தோனேஷியாவிற்கு விஜயஞ் செய்திருந்த ஒரு மேல் நாட்டு ராஜதந்திரியின் அபிப்பிராயம் இவ்வாறு:—

"இந்தக் கறுப்பர்கள் பாண்டுங்கில் கூடி என்ன செய்யப் போகிறார்களாம்? வெள்ளையரிடம் நாகரிகத்தைக் கற்றுக் கொள்ளாமல் இவர்கள் கூட்டமும் கும்மாளமடிப்பதில் என்ன பயன்?

வெள்ளையர்கள் அபிப்பிராயம் இவ்வாறிருக்க இந்தோனேஷிய டாக்ஸி டிரைவர் கூறிய மொழிகள் இவ்வாறு:—

"என்னுடைய கறுப்புச் சகோதரர்களின் கூட்டத்தைக் காணக் காண என் மனம் மகிழ்ச்சி தானடைகிறது. இது வரையிலும் இம்மாதிரிக் கூட்டங்களிளெல்லாம் வெள்ளையர்கள்தானே பிரமுகர்களாயிருந்தார்கள்? அவர்கள் ஸ்தானங்களில் நம் கறுப்பு சகோதரர்கள் வீற்றிருப்பதைக் காண்பதற்கு ஆயிரங் கண்கள் வேண்டுமே!

—With Acknowledgements to "*Indonesian Observer,*" Djakarta, Indonesia.

கள்ளக் கடத்தல்

கள்ளக் கடத்தல் மூலம் இந்தியாவிற்கு வரும் சரக்கு ரகங்களுக்கு அளவே இல்லை. தங்கக் கள்ளக் கடத்தலின் தலை நகரம் பம்பாயும் அபினிக் கள்ளக் கடத்தலின் தலைநகரம் கல்கத்தாவும் ஆகும்.

தங்கத்தைத் தவிர பம்பாய்க்கு வரும் சரக்குகள், பட்டு ரகங்கள், வாசனைத் திரவியங்கள், எஸென்சுகள், அமெரிக்க தயாரிப்புகளான விநோத சாமான்கள் முதலியவையாகும்.

இந்தியாவில் 40 கோடி ரூபாய் விலை மதிப்புள்ள தங்கம் கள்ளக் கடத்தல் மூலம் வருகிறதெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் அரைக்கோடி கண்டு பிடிக்கப்பட்டு விளைமதிப்புள்ள தங்கம்தான் பம்பாய்க்குள் மத்திய திய கிழக்கு தேசங்களிலிருந்தும் பாரஸீக வளைக்குடாக்களிலிருந்தும் தங்கக் கள்ளக் கடத்தல் ஏராளமாக நடைபெறுகிறது. வைரங்கள் பெல்ஜியத் தீவிலிருந்தும் தென் ஆப்பிக்காவிலிருந்தும் கள்ளக் கடத்தல் செய்யப்படுகிறது.

சிங்கப்பூர், ஏடன், ஹாங் ஹாங் முதலிய தீர்வையில்லாத துறைமுகங்களிலிருந்து பட்டு, வாசனைத் திரவியங்கள், போலி தங்க வைர, ஆபரணங்கள் போன்ற சரக்குகளில் கள்ளக் கடத்தல் வியாபாரம் நடைபெறுகின்றன. மற்ற ஆடம்பரச் சரக்குகள் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து பம்பாய்க்குள்களக் கடத்தல் வியாபாரம் நடைபெறுகிறது. பாரஸீகவளைக்குடா துறைமுகப் பிரதேசங்களிலிருந்து தான் பெரும்பான்மையாய் கள்ளக் கடத்தலுக்கு காரணம் இந்தியாவில் தங்கம் இறக்குமதி தடைசெய்யப்பட்டதும், அதனல் இங்கு தங்கத்தின் விலை அபரிமிதமாக உயர்ந்து விட்டதும்தான் காரணம். இன்னும் மதுவிலக்கு வேறு பம்பாயில் அமலில் இருப்பதால் தடைசெய்யப்பட்டுள்ள அயல்நாட்டு மது வகைகளிலும்சாராயதினுசுகளிலும் வேறு கள்ளக் கடத்தல் வியாபாரம் பம்பாய்க்குள் அமோகமாக நடைபெறுகிறது.

சுங்க இலாகாகாரர்களின் தீவிர கண்காணிப்பையும் மீறி இந்தக் கள்ளக் கடத்தல் வியாபாரம் பம்பாய் ராஜ்யத்திற்குள் செழித்துவருகிறது.

பாரஸீக வளைகுடா பக்கங்களிலிருந்து வரும் கப்பல்களின் அறைகளில் தங்கத்தை பம்பாய் சேரும்வரை பத்திரமாக்க பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குவைத்திலிருந்து ஆட்டுத் தோல் கட்டுகளிலும், பிரயாணிகள் காலஜோடுகளின் அடிபாகங்களிலும் மறைக்கப்பட்டு தங்கக் கள்ளக் கடத்தல் அமோகமாக நடைபெற்று வருகிறது.

கல்கத்தாவிலிருந்து தூரக்கிழக்குப் ராஜ்யங்களான ஹாங் ஹாங், சிங்கப்பூர் "சூதாடிகளின் வாசஸ்தலம்" என்று பிரக்கியாதி பெற்ற போர்ச்சுகீஸிய மக்கோவிற்கும் ஏராளமாக அபினி கள்ளத்தனமாக கடத்தப்படுகிறது. இதற்குப் பதிலாக இந்த ராஜ்யங்கள்லிருந்து தங்கம், தங்க கடிகாரங்கள், பவுண்டன் பேனக்கள் முதலிய சாமான்களைப் பெற்றுக்கொள்கிருர்கள்.

இந்த கள்ளக் கடத்தல்காரர்கள் உலகமெங்கும் நடைபெறுவதுபோலவே கள்ளச் சாமான்களுக்குப் பதில் வேறு கள்ளச் சாமான்களை அனுப்பி வைத்தே (Barter) கள்ளக் கடத்தல் வியாபாரம் செழித்து வருவதாக, கல்கத்தாவில் சமீபத்தில் சுங்க இலாகா அதிகாரிகள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் மூலம் தெரியவருகிறது.

தடை செய்யப்பட்ட அபின் ஐக்கிய நாடுகள், கானடா முதலிய தேசங்கள் வரை கள்ளக் கடத்தல் மூலம் அனுப்பப்படுகிறது. அமெரிக்க நாடுகளில் அபினி இந்தியாவில் விற்கப்படும் விலையை விட எத்தனையோ மடங்கு அதிகமாக விற்கப்படுகிறது.

இந்தியாவில் தனியாக யாரும் அபினி உற்பத்தி செய்யக் கூடாது. சர்க்கார் மேற்பார்யில் உத்தரப் பிரதேசத்திலும் ராஜஸ்தானிலும் குவாலியரிலும்மருந்து தயாரிப்பிற்காக மட்டும் உற்பத்தி செய்யப்படுகிறது. கசா கசாப் பயிர் சாகுபடி செய்யக் கூடிய நிலமும் சர்க்காராலேயே வரையறுக்கப்பட்டுமுள்ளது.

ஆனால் பாரதத்தின் பரந்த நிலப்பகுதியில் சில மூலை முடுக்குகளில் சர்க்கார் அதிகாரிகளுக்கு எப்படியோ கண்ணில் மண்ணைத் தூவி அபினி வியாபாரம் மூலம் ஏராளமான வருமானம் கிடைப்பதால் பல விவசாயிகள் இந்த அபினி உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு தயாராகும் அபினிதான் சர்வதேச கள்ளக் கடத்தல் கோஷ்டிகளிடஞ் செல்வது.

Bharat Jyoti, Bombay.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சாந்தால்கள் (ஆண்டவனின் அன்பர்கள்)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

●

இந்தியாவின் பூர்வீகக்குடிகள் இனத்தைச் சேர்ந்தவர்களாகும் பீஹார் மாகாணத்தைச் சேர்ந்த சாந்தாலென்ற வகுப்பார்கள் சாந்தால் என்ற வார்த்தைக்குப் பொருள் ஆண்டவனுக்கு மிகவும் பிரியமானவர்கள் என்பதாகும். ஆரியர்கள் பாரத நாட்டில் குடியேறு முன்பே இவர்கள் இந்நாட்டு கிராமவாசிகளாம். ஆரியர்களைப் பின்தொடர்ந்து பாரத நாட்டிற்குள் புகுந்த மனிதவர்க்கங்களுக்குக் கணக்கேயில்லை. ஆனல் இவர்கள் எவருமே சாந்தால்களைப் பாதிக்கவில்லை. சமீப காலத்திலிருந்துதான் இவர்களுக்கு நகரவாசிகளோடுசற்றுதொடர்புஏற்பட்டு வருகிறது. இதனல் இவர்களின் புராதன பழக்கவழக்கங்களை உதறிவிட்டு நாகரிகமான சில பழக்க வழக்கங்களைப் பின்பற்ற நேரிடுகிறது. மாதர்கள் முன்போல் அரை நிர்வாணமாகச் செல்வதைவிட்டு நகர மாதர்கள் போன்று நாகரிகமாக வித விதமான வர்ணங்களில் கவுன்களையும் சட்டைகளையும் தரிக்கத் தொடங்கியிருக்கிருர்கள்.

சாந்தால் மாதர்கள் அழகான உடைகளை அணிவதில் அபார அக்கறை செலுத்துகிறவர்கள். தங்கள் கூந்தலை வெகு சிங்காரமாக வாரி முடித்துக்கொண்டு மலர்களையும் சூடிக்கொள்கின்றனர். இவர்களுடைய சர்மம் பட்டுப்போன்று மிருதுவானதும் பளபளப்புமானது. இதை இவர்கள் மண்ணல் 'பாலிஷ்' செய்துகொள்கின்றனர். இனிய மொழிகளில் வார்த்தையாடுகிருர்கள். இவர்கள் தங்கள் கணவர்களின் மீதோ குழந்தைகள் மீதோ எரிந்து விழுவதில்லை. மாதர்கள் நன்ருகப் பாடுபட்டு உழைப்பவர்கள். ஆண்கள் குடித்துவிட்டு வீண்பொழுது போக்கிக் கொண்டிருந்தாலும் மாதர்கள் உழவு முதலிய பயிர்த்தொழிலிலும் மற்ற வீட்டு வேலைகளிலும் கவனஞ் செலுத்திக் கொண்டேயிருக்கிருர்கள். சாந்தால் வீட்டின் சமையலறைதான் விசேஷமானது. சமையலறை எப்போதும் துப்புரவாயிருக்கும்.

இருபதாம் நூற்ருண்டில் வீடுகளைப் பூட்டாத இனத்தார் ஒருவர் இருப்பாரேயானல் அவர்கள் சாந்தால் வகுப்

பினரோர் ஆகும். அவர்களிடையே களவும் கிடையாது, களவைப்பற்றிய பயமும் இல்லை.

சாந்தால்களின் முக்கியமான உணவுப் பொருள்கள், அரிசி, மாமிசம், அரிசிச் சாராயம் இவை மூன்றுமாகும். அவர்கள் பசுக்களை வளர்த்தாலும் பசுவின் பாலை அருந்துவது கிடையாது. வாழ்க்கையில் சகஜமான கஷ்ட நஷ்டங்கள் யாவும் இவர்களுக்குமுண்டு. ஆனாலும் இவற்றால் சாந்தால் வகுப்பினர் அவ்வளவாகப் பாதிக்கப்படுவதில்லை. மாலை நேரத்தில் இவர்கள் ஒன்றுகூடி அரிசிச் சாராயத்தை அருந்தியவாறு நடனங்கள் முதலிய பொழுது போக்குகளில் ஈடுபடுவது வழக்கமாகும்.

அறுவடைக் கொண்டாட்டங்கள் வேறெங்கும் உள்ளது போல் இவர்களிடையேயும் உண்டு. ஆண்களும் பெண்களும் ஒன்றுகூடி நடனமாடுவதேதான் முக்கியமான கொண்டாட்டம். இந்த நடனம் ஏழு நாட்கள் விடாமல் நடைபெறும். களைப்புற்றவர்களுக்குப் பதிலாக மற்றவர்கள் நடனத்தில் கலந்து கொண்டு தொடர்ந்து ஏழு தினங்கள் வரை நடனமாடுவார்கள்.

எல்லா சாந்தால் கிராமங்களிலும் மாலை வேளைகளில் யுவர்களும் யுவதிகளும் சந்தித்துக்கொள்ளும் பிரம்மச்சாரி சங்கங்கள் உண்டு.

சாந்தால் வகுப்பினரிடையே நடைமுறையிலுள்ள விவாக முறைகள் நான்கு.

1. ஒரு வாலிபன் தன்னை மணந்துகொள்ள விருப்பமில்லாத பெண்ணை விரும்பினால் அவன் அவள் நெற்றியில் குங்குமத் திலகமிட்டால் அவள் அவனை ஏற்றுக்கொண்டதாக அர்த்தம்.

2. ஒரு பெண் ஒரு வாலிபனை விரும்பி அவனுக்கு அவளைப் பிடிக்காவிட்டால் அவள் ஒரு பானை நிறைய அரிசிச் சாராயத்தையெடுத்துக் கொண்டு அந்த வாலிபன் வீட்டிற்குச் சென்று வசிக்க வேண்டும். ஒரு வாரம் அந்த வாலிபனின் வீட்டில் இவள் வசித்துவிட்டால் அந்த வாலிபன் இவளைத்தான் மணந்தாக வேண்டும். ஆனால் ஒரு வாரத்திற்குள் அந்த வாலிபன் அந்த யுவதியை விரட்டி விட்டால் இந்தக் கட்டாயம் கிடையாது. அதற்காக அவளை இவன் பலவந்தமாக விரட்டக்கூடாதானாலும் இவள்மீது குளிர்ந்த நீரை ஊற்றலாம், திட்டலாம்; ஒரு வாலிபன் ஒரு கூட்டத்திலிருக்கும் யுவதியைக் கையைப் பிடித்து வெளியே இழுத்தால் அவள் அவனைத்தான் மணந்து கொள்ளவேண்டும்.

4. சாதாரணமாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப்படும் கலியாணம். சாந்தால் வகுப்பினரிடையே விவாகரத்து மிக எளிது. ஆனால் சாதாரணமாக நிகழ்வதில்லை.

விவாகரத்திற்குக் கட்டணம் ஒரு பன்றியும் ஐம்பது ரூபாயுமாகும். விவாகரத்து விரும்பும் தம்பதிகள் கிராமப் பஞ்சாயத்தார்கள் முன்பு அரிசிச்சாராயத்துடனும் ஒரு சிறு மரக்கிளையுடனும் உதய சூரியன் எதிரில் நிற்கவேண்டும். மனைவி பானையிலுள்ள சாராயத்தை பாதி வெளியே ஊற்றிவிட்டு மரக்கிளையை இரண்டாக முறிப்பாள். கணவன் பானையிலுள்ள மீதி சாராயத்தை ஊற்றிவிட்டு மரக்கிளையை முறித்தவுடன் விவாகரத்து அங்கீகாரமாகிவிடும். குழந்தைகள் எப்போதும் மனைவிகளையே சேருவார்கள். சாந்தால் வகுப்பினர் ஒரு கணவனுக்கு ஒரு மனைவி என்ற கொள்கையை யுடையவர்கள்.

இவர்களிடையே ஏழு உட்பிரிவுகளுண்டு. இந்த உட்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் விவாக சம்பந்தங்கள் வெளியில்தான் வைத்துக்கொள்ள வேண்டும். சாந்தால் இனத்தாருக்கு குடும்பத் திட்ட முறைகளில் வெறுப்பே கிடையாது. பொதுவாக இவர்கள் ஏழைகள்தான். எல்லோரும் பொரும் குழும்பிகளுங் கூட குடும்ப அபிவிருத்தியைத் தடை செய்வதற்கு ஏதாவது வழிகளை வெகு நாட்களாகவே விரும்பிக் கொண்டுதானிருந்தார்கள்.

மயூராக்ஷி அணைகட்டு இலாகாவைச் சேர்ந்தசிப்பந்திகள் பலர் சாந்தால் கிராமங்களுக் கருகே வசிக்கத் தொடங்கிய பின்னரேதான் இவர்களுக்கு குடும்ப அபிவிருத்தித் தடைமுறைகள் உண்டு என்ற தகவல் தெரிய வந்தது. கடவுள் விருப்பத்தை எதிர்ப்பதல்லவா, குடும்ப அபிவிருத்தியைத் தடைசெய்வதென்ற சந்தேகம் இவர்களுக்கும் இருக்கத்தானிருந்தது. இந்தச் சந்தேகத்திற்கு இவர்கள் கண்டுபிடித்த பதில் கடவுள் விருப்பமில்லாவிடில் இந்தமுறைகள் அவர்களுக்குத் தெரிய வருமா வென்பதாகும். ஆனால் அந்த முறைகளைக் கையாள்வதும் கடவுள் விருப்பத்திற் கெதிராக இராதென்பதுதான்.

—*Tribune*, Ambala.

ASOKA SCENTED BETELNUT POWDER

பாரதமும் கிரேக்கர்களும்

★

மிதுனபுரி ஜில்லாவைச் சேர்ந்த டாம்லக் என்ற இடம்தான் கிருஸ்துவ சகாப்த ஆரம்பத்தின் போது பிரசித்திபெற்ற துறைமுகமா யிருந்த தாம்ரலிப்தா ஆகும் என்று தெரியவருகிறது.

இந்த இடம் கடந்த ஒரு நூற்றுண்டுகளாய் அறிஞர்களுக்கும் சரித்திரக்காரர்களுக்கும் பெருத்த தலைவேதனை யளித்துவருகிறது. முடிவில் பரேஷ்சந்தரதாஸ் குப்தா என்ற ஒரு சரித்திராசிரியர் சேகரித்து வரும் பல சின்னங்கள் தாம்ரலிப்தாவைப்பற்றிய உண்மையான விவரங்களுக்கு ஆதாரமாகின்றன.

இவர் சேகரித்துள்ள பல பொருள்களில் மவுரியர் காலத்திற்கு முந்திய கல்வெட்டுகள், மவுரிய-சங்க காலத்து யக்ஷ-யக்ஷிணிகள், சாஞ்சி வாயலின் சிறிய உருவம் இன்னும்பல யானைகள், குதிரைகள், அலங்கரிக்கப்பட்ட ஆடுகளிழுக்கும் ரதங்கள், கிரேக்க ரோமர்களின் பிரதிமைகள் முதலியன ஆகும்.

இவருக்குச் சமீபத்தில் இப்போதய தாம்லக்கிற்கு 24-மைல் தொலைவிலுள்ள டில்டா என்ற விடத்தில் கிடைத்துள்ள கல்வெட்டு மேற் கூறிய எல்லாவற்றையும் விட முக்கியத்துவம் வாய்ந்ததாகும் இது கிரேக்க பாஷையில் செதுக்கப்பட்ட கல்வெட்டாகும். இந்தக் கல்வெட்டில்ஒருபகுதியை அயல்நாட்டு அறிஞர் ஒருவர் விளக்கியுள்ளார். அவர் கூறிய விளக்கப் பிரகாரம்இந்தசர்வதேசப் பிரக்யாதி பெற்ற துறைமுகத்திற்கு அடிக்கடி கிரேக்க கப்பற் படை வீரர்கள் வந்து போய்க் கொண்டிருந்தனரென்றும், இந்தக் கல்வெட்டில் கண்ட வாசகம் இம்மாதிரி ஒரு கப்பற்படை வீரனின் நன்றியறிவிப்புப் செய்தியாகும் என்றும் தெளிவாகிறது. ஏற்கனவே விளக்

கப்பட்டுள்ள வரிகளுக்கு 'விடியற்காலையில் வீசும், கிழக்குதிசை மாருதம்' என்று பொருளாகிறது.

இப்போது தாம்லக்கில் மூன்று இடங்களில் தோண்டி ஆராய்ச்சி செய்யப்படும். காட்புகூர் என்ற இடத்திலும் தாம்லக் கல்லூரி காம்பவுண்டுக் கருகிலும் சப் டிவிஷனல் ஆபீஸரின் பங்களாவிற்கருகாமையிலும் தோண்டி ஆராய்ச்சி செய்வார்களெனத் தெரிகிறது.

Amrita Bazar Patrika,
Calcutta

பத்தினியின் கண்கண்ட தெய்வம்

சமீபத்தில் ரே பாரெய்லியைச் சேர்ந்த ஸ்ரீ சேஷ்ஜி என்ற சாதுவின் ஆக்ஞைப் பிரகாரம் கோமதி நதிக்கரையில் சுமார் நூறு கணவர்கள் தங்கள் பத்தினிகளால் பூஜிக்கப்படும் பாக்கியம் பெற்றனர்.

இந்தப் பதி பூஜைக்கு கௌரீஸ்வர் பதிபூஜா மகாயக்ஞும் என்று பெயர். ஐந்து தினங்கள் நடைபெற்ற இந்த யக்ஞத்தின் லக்ஷியம் விவாகமானவர்களின் மனத்தில் கணவன்–மனைவி உறவின் தத்துவத்தையும் ஆன்மீகப் பற்றையும் நன்கு பதியவைத்து சமூக வாழ்வை மறுமலர்ச்சியடையச் செய்வதேயாகும். பரமேஸ்வரனின் பத்தினியான கௌரி தேவியின் பெரிய சிலைக்குப் பத்தினிமார்கள் பூஜை செய்த பின்னர் தங்கள் கணவர்களுக்குப் புஷ்பாஞ்சலி செய்து அவர்கள் பாதங்களை நீராட்டினர்.

இந்தப் பூஜையின்போது காசியைச்சேர்ந்தபண்டிதர்ஒருவர் ஒலிபெருக்கியில் "ஓ, கணவனே ! நீங்கள் பிரம்மா; நீங்கள் விஷ்ணு ; நீங்கள் மகேஸ்வரன், தெரியாமல் நான் ஏதாவது பிழை இழைத்திருந்தால் என்னை மன்னியுங்கள்" என்று பொருள்படும் ஸ்லோகத்தை வாசித்தார். ஸ்ரீ சேஷ்ஜி, "இந்த யக்ஞத்தின் கருத்து, வெறும் காமத்தால் அல்லாது, தூய்மையான அன்பினால் சிருஷ்டிக்கப்படும் ஒரு வீர சந்ததியை உருவாக்குவதேயாகும்" என்று கூறுகிறார்.

Mercury Chit Funds Ltd.

22-A, Narasingapuram Street

MOUNT ROAD, MADRAS

STARTING SHORTLY

NEW SERIES OF

AUCTION CHITS

20 Tickets of Rs. 100/- (Capital Rs. 2,000)

Date of Commencement 25—6—'55

20 Tickets of Rs. 50/- (Capital Rs. 1,000)

Date of Commencement 3—6—'55

PARTICULARS ON APPLICATION

K. R. SUBRAMANIA IYER

Managing Director.

சமஸ்கிருதமும் பொதுமக்களும்

புராதன கிரந்தங்களிலுள்ள ரத்தினம் போன்ற தத்துவங்களையெல்லாம் வெளிப்படுத்த வேண்டும். அவற்றில் பொதிந்துள்ள உண்மைகளையெல்லாம் கூடுபோல் அடைத்து வைத்திருக்கும் சம்ஸ்கிருத பாஷையிலிருந்து விடுதலை செய்யவேண்டும். இந்த உண்மைகளைப் பொது மக்கள் யாவரும் அறியும்படி செய்யவேண்டும். இதுமட்டுமல்ல, இதைப் பொதுமக்களின் பொதுவுடமையாக்கவும் வேண்டும். கருத்துக்களைப் பொதுமக்களுக்கு அவர்களுக்கு நன்கு விளங்கும் பாஷையில் கற்றுக் கொடுக்க வேண்டும. இதே சந்தர்ப்பத்தில் சம்ஸ்கிருத போதனையும் இருந்து வரவேண்டும். ஏனென்றால் சம்ஸ்கிருதச் சொற்களின் நாதத்திற்கே தனிக் கௌரவமும் மக்களுக்கு வலிமை யூட்டும் சக்தியுமுண்டு.

சைதன்யர், ராமானுஜர், கபீர்தாசர் முதலிய மகான்கள் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்துவதற்குப் பட்ட பாடும் அதில் இவர்களடைந்த வெற்றியைப் பற்றியும் நீங்கள் நன்கு அறிவீர்கள். ஆனால் இவர்கள் மறைந்த ஒரு நூற்றாண்டுக்குள் இவர்களுடைய மகத்தான தொண்டின் முன்னேற்றம் தடைப்பட்டது. இதற்குக் காரணமென்ன? தாழ்த்தப்பட்ட மக்கள் உயரவேண்டுமென்ற தீவிரமான ஆர்வம் இந்த மகான்களுக்குச் கிருந்தது உண்மைதான். ஆனல் இவர்கள் பொதுமக்களிடையே சம்ஸ்கிருத பாஷையைப் பரவச் செய்யவில்லை. மகான் புத்தர் கூட பொதுமக்களுக்கு சம்ஸ்கிருதத்தில் பயிற்சி அளிக்காதது மிகப் பெரிய தவருகும். பொதுமக்களுக்கு வெகு விரைவில் முன்னேற்றமளிக்க இவர் ஆர்வம்கொண்டதால், சம்ஸ்கிருதத்திலிருந்த நற்போதனைகளை பொது மக்களின் பாஷையான பாலியில் மொழிபெயர்த்துப் பரவச் செய்தார். பொதுமக்களிடம் அவர்கள் பாஷையில் பேசியது அவர்களுக்குப் பெரும் உதவியாயிருந்தது. பொது ஜனங்களிடையே உயர்ந்த கருத்துக்களை வெகு விரைவில் பரவச்செய்தது அவர்களுக்குச் செய்த பெருந் தொண்டுமாயிருந்தது. கருத்துக்களை மக்களுக்குப் போதித்ததோடு சம்ஸ்கிருத பாஷையையும் போதித்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்! சம்ஸ்கிருத பாஷையின்றி கருத்துக்களைப் போதித்ததால் பொதுமக்களுக்கு கருத்துக்கள் மட்டுமே கிடைத்தன. அறிவோ

டிணைந்த மதிப்பு கிடைக்கவில்லை. உயர்ந்த வகுப்பின ரிடமிருந்த பண்பாடும் கிடைக்கவில்லை. அழிவுச் சக்தி யின் உண்மை எதிரி பண்பாடுதான். அறிவூட்டும் கிரந் தங்கள் அல்ல. எவ்வளவுதான் அறிவைப் பரவச்செய் தாலும் அதனுல் மக்களுக்கு பெருத்த நன்மையொன்றும் ஏற்படாது. மக்களின் ரத்தத்தில் அறிவுடன் பண்பாடும் கலத்தல் வேண்டும்.

நாகரிகமடைந்த இக்காலத்தில் அறிவில் தேர்ச்சி யடைந்த தேசங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அங் குள்ள மக்கள் யாவரும் புலிகளையும் காட்டு மிராண்டிகளையு மொத்தவர்களா யிருப்பதற்குக் காரணம் அவர்களுக்குப் பண்பாடு இல்லாமையேதான். அறிவும், நாகரிகமும் மிருதுவான தோலைப் போன்றது. அந்தத் தோலைக்கிழித் தால் அவர்கள் உள்ளிருக்கும் காட்டுமிராண்டித்தனம் வெளிப்படுகிறது. மக்களுக்கு அவர்கள் தாய்ப்பாஷையில் கல்விபோதித்தல் அவசியம்தான், இதனுல் அவர்களுக்கு அறிவை மட்டுமே அளிக்கலாம்.

ஆனுல் நல்வர்ழ்க்கைக்கு அறிவு மட்டும் போர்தர்து, வாழ்க்கைக்கு, மற்ருென்றும் தேவையுண்டு. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்தால்தான் வாழ்க்கைத் தரத் தில் தாழ்ந்தவர்களை நிரந்தரமாக உயர்த்த முடியும் இந்தத் தேவைதான் சம்ஸ்கிருதப் பயிற்சி. இவ்வாறு பொதுமக் களுக்கு நிரந்தரமான உயர்வை யளிக்காவிட்டால் சம்ஸ் கிருதம் தெரிந்தவர்கள் ஒரு தனிப்பட்ட உயர்தர வகுப் பினரென்ற நிலை ஏற்பட்டு விடும். அந்த உயர்தர வகுப் பினர் சமூகத்திலுள்ள ஏழை மக்களையெல்லாம் அடக்கி யாளவும் செய்வார்கள். இப்படி நேராமலிருப்பதற்கு ஒரே வழிதான் உண்டு. அது பொது மக்களுக்கு சம்ஸ்கிருதத் தைக் கற்றுக்கொடுப்பதுதான்.

இப்படிச் செய்தால் பொதுமக்கள் உயர்ந்த வகுப்பின ரைப்பற்றிக் கோபங்கொள்ளவோ, குறை கூறவோ இடமி ராது. உயர்தர வகுப்பினர்களென்ற கூறப்படுபவர்களின் வலிமையின் ரகசியம் அவர்களின் அறிவும் பண்பாடும் தான். அந்த அறிவையும் பண்பாட்டையும் இந்திய மக் கள் அனைவர்களிடையே பங்கிட்டால் உயர்தர-கீழ்தர வகுப்பினரென்ற பாகுபாடுகள் தானுகவே மறையும்.

Swami Vivekananda.

புரொபஸர் பட்டாபி

ஈஸி சேரில் சாய்ந்துகொண்டிருந்த பத்மனாப அய்யர் பெருத்த யோசனையில் ஆழ்ந்திருந்தார். அவர் மனம் வேதனைப் புயலில் சிக்குண்டது. பட்டாபியை நினைத்தாலே, அவனிடம் பரிதாபம், அன்பு, பெற்றபாசம் யாவும் ஒருங்கே தலைகாட்டியது. அறுபதாவது வயதை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்த அவருக்கு இதெல்லாம் ஏற்பட வேண்டுமா என்ன? அது அவர் தலையெழுத்து! அவர் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. அது, அவர் கடந்த நிகழ்ச்சிகளை மனத்தில் பதிய வைக்கும்படி செய்யப் பட்டது; செய்தும்விட்டது. கூடத்து ஊஞ்சலில் லக்ஷ்மியின் மடியில் துள்ளும் மூன்று வயதுப் பையன், பட்டாபியின் பிள்ளை ராஜுவை அவர் கண்கள் நோக்கின. அவர் கண்களிலிருந்து பொல, பொலவென்று கண்ணீர் பெருக்கெடுத்தது. மூன்று வருஷத்துக்கு முன் நடந்த நிகழ்ச்சிகள் அவர் மனதில் பெரும் புயலைக் கிளம்பிவிட்டது.

பட்டாபி அப்போது எம். ஏ. பர்ஸ் செய்துவிட்டு புதிதாக காலஜில் கணக்கு புரொபஸராக அமர்ந்த காலம். அவன் தாய், தந்தையர்கள், அவன் அதிருஷ்டத்தைப் பார்த்து வியந்தார்கள்! வறுமை நிலையில் தத்தளித்து' ஜில்லா போர்டு பள்ளிக்கூடத்தில் தலைமை உபாத்தியாயர் பதவி வகித்துவிட்டு தற்போது ரிடையர் ஆன பத்மனாப அய்யருக்கு அவன் பால் ஒருவித தனி அன்புதான் சுரந்தது. ஒரு நாள் பத்மனாப அய்யர் "என்னடா பட்டாபி இப்படியே தான் காலத்தை கழிக்கப்போகிறாயா, அல்லது குடியும் குடித்தனமுமாக இருக்கப்போகி

ருயா? என்றார். அதற்கு என்னப்பா, பண்ணிக்கொண்டால் போகிறது. அவசரமென்ன என்று சொல்லிக்கொண்டே சென்றுவிட்டான். ஆனால் பத்மநாப அய்யருக்குத் தெரியும் ஏன் பட்டாபி தட்டிக் கழிக்கிறான் என்று! மூத்த பெண்ணான சியாமளா, கணவனால் திரஸ்கரிக்கப்பட்டு, கையில் இரண்டு குழந்தைகளுடன் பிறந்த வீடே கதி என்று வந்துவிட்டாள். இரண்டாவது பெண்ணான கமலமோ, பைத்தியம் பிடித்த கணவனுடன் வாழ முடியாது என்று சொல்லும்படியாக. தன் மாமியார், நாத்தனார்களால் ஏசப்பட்டு, வசவையும், திட்டுகளையும் சகித்துக்கொண்டு வாழ்ந்தாள். ஆனால் அவர்கள் இவளை அங்கு விட்டுவைத்தால்தானே? "போடி உன் வீட்டுக்கு பைத்தியம் பிடித்த கணவனுடன் உனக்கென்ன வாழ்வு. அவனோ ஆஸ்பத்திரியில் இருக்கிறான். நீ இங்கே வேளா வேளைக்கு கொட்டிக்கொண்டு, உனக்கென்ன சுகம் வேண்டிக் கிடக்கு!" என்று சொல்லி அவளை அவள் பிறந்த வீட்டுக்கு மூட்டை கட்டும்படி செய்துவிட்டார்கள். விதியின் கொடுமையைத்தான் என்னவென்று சொல்வது! உரலுக்கு ஒரு பக்கம் இடியென்றால், மத்தளத்துக்கு இரு பக்கமும் இடியாம். அதுபோல் பத்மநாப அய்யர் அவதிப்பட்டார். இந்த இரு வாழா வெட்டிகளின் நடுவே அவர் அருமை மகன் பட்டாபியின் தலை உருண்டது.

அன்று பட்டாபி காலேஜுக்குச் சென்றிருந்தான். அவன் தகப்பனார் ஒரு தினசரியைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் தர்ம பத்தினி ருக்மணி அம்மாள், "ஏன்னா, இப்படியிருந்தால் என்னன்னு நினைச்சுண்டிருக்கேள். பட்டாபிச்கும் வயசாயிடுது. ஆசையாயிருக்காதா என்ன?" என்றாள். "என்னை என்னடி செய்யச் சொல்றே. எல்லா வேளை வரவேண்டாமா" என்றார் வழக்கமாக. தவிர

......ன்னு ஆரம்பிக்குமுன் "போதும் நிறுத்துங்கள் உங்களுக்கு ஏன் அவர்களைப் பற்றி கவலை! நாளைக்கே வேண்டுமானாலும் அவா வீட்டுக்கு அனுப்பிவிட்டால் போச்சு. அதுக்காக பட்டாபியின் கல்யாணம் நடக்கவே கூடாதா?" என்றாள், நாட்டுப் பெண்ணைக் காணவேண்டும் என்ற ஆர்வத்துடன். "நான் என்ன செய்யறது ருக்கு. அவன் மனமே சஞ்சலப்படுகிறது. அப்புறம், அப்புறம் என்கிறான். "அவன் அப்படித்தான் சொல்லுவான், நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள்! பக்கத்து வீட்டு கோமு சொன்னாள்: ஊஞ்சலூரில் ஒரு பெண் இருக்கிறாளாம். மூக்கும், முழியுமாக கிளி போல் அழகாக இருப்பாளாம். தாயார் ஒருத்திதானாம். ஆனால் ஏழையாம். இஷ்டமிருந்தால் கொடுக்கிறேன் என்கிறார்களாம் அவர்கள்" என்றாள் பெருமையுடன். பத்மநாப அய்யரின் மனம் அலை பாய்ந்தது. ஒரு பெரு மூச்சு அவர் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளி வந்தது. ஆம்; என்ன செய்வது, பட்டாபிக்கு பெண் கொடுக்க பல பணக்காரர்கள்கூட முன் வந்தார்கள், அவன் வேலையைக் கண்டு! இரண்டு வாழா வெட்டி நாத்திமார்களின் நடுவே தங்கள் பெண்ணைத் தள்ள ஒருவருக்கும் மனம் இடங் கொடுக்கவில்லை. இவ்வளவும் க்ஷண நேரத்தில் அவரது இருதயத்தைதொட்டது; "என்னன்னா, அப்படி யோசனை செய்யறேள்! பேசாமே இந்த வரத்தையே முடித்துடுங்கோன்னா, ஏழையாயிருந்தால் என்ன! இவ்வளவு நாளும்தான் நீங்கள் பணக்காரர்கள் சம்பந்தத்தை பார்க்கவில்லையா?" என்றாள் ருக்மணி அம்மாள். "சரி, சரி, எதற்கும் நாளைக்குப் பெண்ணைப் பார்த்துவிட்டுவருவோம்" என்றார் பத்மநாப அய்யர் அத்துடன் அந்தப் பேச்சு முடிந்தது.

மறு நாள் மாலை வேளை. அந்தி சமயமாதலால் கிராமத்தின் ஒவ்வொரு வீட்டிலும் தீபங்கள் எரிந்தன. கோவிலிலிருந்து ஒரு கீர்த்தனையை வாசித்துக்கொண்டிருக்

சென்னை-600

தான் ஒரு நாயனக்காரன். மங்களகரமான அந்த வேளை யில் கூடத்தில் லக்ஷ்மி நமஸ்காரம் செய்துகொண்டிருந் தாள் வந்தவர்களுக்கு. பெண்ணைப் பார்த்து பிடித்து விட்டது. பையனைக் கலந்து எழுதுகிறோம் என்று நகர்ந்தார்கள் பையனைப் பெற்றவர்கள். அன்று இரவு பத்மநாப அய்யர் சாவகாசமாக பட்டாபியிடம் கேட் டார், "பட்டாபி இந்த வரம் தட்டினால் வேறு வரன் கிட் டாது. சட்டுபுட்டுன்னு முடித்துக்கொள். எங்களுக்கும் வயதாயிடுத்தோல்லியோ" என்றார். தாயாரோ பல விதங்களில் அவனுக்குப் புரியும்படி சொன்னாள். பட்டாபி வேண்டா வெறுப்பாக மணத்துக்கு இசைந் தான். தாய், தந்தையர்களின் கட்டாயத்தினால். கல்யா ணம் ஓர் சுபநாளில் குறைந்த செலவில், நிறைந்த கண் களுடன் நடந்தது.

தான் கலியாணம் செய்து கொண்டாலும் பட்டாபி தன் மனைவியுடன் பேசவில்லை. காரணமில்லாமல் விரட் டினான், அதட்டினான். "ஏண்டா பட்டாபி எதற்கு அந் தப் பெண்ணைக் கறிச்சுக்கொட்டறே. அது என்ன செய் தது உன்னை?" என்றாள் நாட்டுப் பெண்ணுக்குப் பரிந்து பேசும் ருக்மணி அம்மாள். இதைப் பொறாமைக் கண் களால் பார்த்த நாத்திமார்களுக்குச் சிரிப்பு வந்தது. வேணும். நன்றாக வேணும் லக்ஷ்மிக்கு! என்றது அவர் கள் மனம். லக்ஷ்மிக்கு கணவனின் போக்கு அதிசயத் தைக் கொடுத்தது. அவள் தலையணையில் முகத்தை புதைத்துக்கொண்டு விம்மினாள். "லக்ஷ்மி அழாதே. அவன் அப்படித்தான் இருப்பான். இன்னும் கொஞ்ச நாளில் சரி யாயிடும். அதெல்லாம் நீ காதில் போட்டுக்கக்கூடாது. போ அம்மா, சாப்பிடு, நாழியாகிறது" என்றாள் அன்புடன் மாமியார்.

காலேஜிலிருந்து களைத்துவரும் பட்டாபிக்கு வீட்டில் நடக்கும் நிகழ்ச்சிகள் சொல்லொணு வேதனையைக் கொடுத்தது. "நீ ஏன் கலியாணம் செய்துகொண்டாய். நன்ருக அனுபவி" என்பதுபோல் ஒரு பிரமை ஏற்பட்டது அவனுக்கு. மிரள, மிரள விழித்தான். செய்வதறியாது திணறினன். காரணம் இதுதான். மூத்த பெண்ணன சியாமளா, மாடியில் டிரஸ் செய்து கொண்டிருந்தாள் வெளியில் செல்ல! இளையவளோ ஒரு சினிமா 'டியூனை' இழுத்துக்கொண்டிருந்தாள். சியாமளாவின் ஐந்து வயதுப் பையன் ராமு அலமாரியைக் கிளறிக்கொண்டிருந்தான். சடசட வென்று ஒரு சத்தம். மறு நிமிடம் ஆணி கழன்று அலமாரி ராமுவின் மேல் விழுந்தது. "ஐயோ, அது என்ன சத்தம்" என்று கேட்டுக்கொண்டே வந்தாள் ருக்மணி அம்மாள். அவள் பின்னல் பரக்க, பரக்க ஓடி வந்தாள் சியாமளாவும், கமலாவும். ஆட்டுக்கல்லில் தோசைக்கு மாவு அறைத்துக்கொண்டிருந்த லக்ஷ்மி சத்தம் கேட்டு ஓடோடியும் வந்து அவனைத் தூக்கி சமாதானம் செய்து கொண்டிருந்தாள். "தெரியுமே, யார் உன்னைத் தள்ளினது என்று! வேண்டுமென்றே அடித்துவிட்டிருக்கிருள். அடி பாவி! ரத்தம் வரதே. முன் பின் பிள்ளையைப் பார்த்தாலல்லவோ" என்று படபட வென்று வார்த்தையைக் கொட்டினுள் சியாமளா. அதற்கு ஒத்துப் பாடினுள் கமலா. "அக்கா என்னை ஒன்றும் சொல்லாதீர்கள். அலமாரியில் அவன் ஏதோ நோண்டினன். ஆணி கழன்று அவன்மேல் விழுந்துவிட்டது. அதோ பாருங்கள்" என்று காட்டினுள் லக்ஷ்மி. "பொய் சொல்லி ஏய்க்கலாம்னு பார்க்கிறியா. உன் பாசாங்கு இங்கேநடக்காது" என்று கத்திவிட்டுச் சென்றுவிட்டாள் சியாமளா, கலங்கிய கண்களுடனும், கைகளில் அறைத்த மாவு அடையாளங்களுடன் நின்றிருந்தாள் லக்ஷ்மி. லக்ஷ்மியின் கண்களில் நீர் முட்டியது. அழுது

கொண்டு நிற்கும் லக்ஷ்மியைக் கண்டதும் திக்கென்றது பட்டாபிக்கு. என்ன? இன்று ஏதேனும் ரகளையா என்று கேட்டுக்கொண்டே அவ்விடம் வந்தான். ஒன்றுமில்லை, ஆட்டுக்கல் கைவிரலை நசுக்கிவிட்டது என்று சொன்னுள் லக்ஷ்மி. அவன் ஒன்றும் கூருமல் சென்றுவிட்டான். சக்கரம் வழக்கம்போல் ஓடியது. அதில் பட்டாபி சுற்றி, சுற்றி வந்தான். வீட்டில் நடக்கும் நர்த்தி, நாட்டுப் பெண்களின் பூசல்களைக் கண்டார் பத்மனுப அய்யர். ருக்மணி அம்மாளோ, தன் பெண்களைக் கண்டித்தாள். அவளுக்குத் தெரியாதா என்ன? தன் நாட்டுப் பெண் நல்ல பெண்தான். ஆனுல் தன் பீடைகள்தான் அவளைக் கறிக்கின்றன. "ஏன்தான் நான் இந்தப் பெண்களைப் பெற்றேனே" என்று தலையில் அடித்துக்கொண்டாள். "நீ கோபித்துக்கொள்ளாதே லக்ஷ்மி. அதுகளுக்கு நல்லதும் தெரியாது, சொன்னுலும் தெரியாது" என்று சமாதானம் செய்தாள் லக்ஷ்மியை. லக்ஷ்மியின் மனம் பாகுபோல் கறைந்தது. இதைக் குரூரக் கண்களால் கண்டார்கள் சியாமளாவும், கமலாவும். அசூயை, அகங்காரம், ஆத்திரம் எல்லாம் சேர்ந்தாற்போல் படையெடுத்தன அவர்களின் மனதில். எதற்கெடுத்தாலும் லக்ஷ்மியை மிரட்டிக் கொண்டேயிருந்தார்கள். ஊரில் நாட்டுப் பெண்ணை படுத்துகிருள் ருக்கு என்ற பேச்சு குளத்தங்கரை வம்பர் சபையில் அடிபட்டது. பலபேர் பலவிதமர்கக் கயிறு திரித்தார்கள். பட்டாபியின் காதில் விழுந்த அச்சொற்கள் நாராசம்போல் பட்டது. ருக்மணி அம்மாள் வெளியே தலைகாட்டவே இல்லை. எப்படிக் காட்டுவாள்? அருமையான இரண்டு பெண்களை வைத்துக்கொண்டு! லக்ஷ்மி என்ன செய்வாள்? பிறந்த வீட்டிலும் நன்கு வாழவில்லை. புகுந்தவீட்டிலும் ஹிம்சை பொறுக்க முடியவில்லை. பிறந்த வீட்டுக்காவது சென்று சற்று நிமமதியாக இருந்துவிட்டு வரலாம் என்ருல் அங்கே யார் இருக்கிருர்கள் இவளை வர

வேற்க! பாழடைந்த வீடும், பேயும், எருக்கஞ்செடியும் மண்டின குடிசையும்தான் அங்கே இருந்தது. அவள் தாய் இங்கு வந்து இவள் புகுந்தவுடனேயே காலமடைந்தாள்' "என்ன லக்ஷ்மியிடம் ரொம்பப் பிரியமாயிருக்கிறுளே அம்மா, பெத்தவர்களைக்கூட மறந்துவிட்டு. உலகத்தில் நாட்டுப் பெண்ணை அடக்கி ஆளுவார்கள். இப்படி யாராவது இருப்பார்களா" என்று அதிசயித்தார்கள் சியாமளாவும், கமலாவும். பொருமைத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது.

ஒரு நாள் பட்டாபி காலேஜின் வருட விழாக் கொண்டாட்டத்துக்கு சென்றிருந்தான். பத்மனுப அய்யர் திண்ணை மகாநாட்டில் இருந்தார். ருக்மணி அம்மாள் தூக்கத்திலிருந்தாள். லக்ஷ்மி அப்போதுதான் வீட்டு வேலை யாவும் செய்துவிட்டு இரண்டு டம்ளர்களில் பாலை எடுத்துக்கொண்டு சியாமளாவுக்கும், கமலாவுக்கும் கொண்டுபோய்க் கொடுக்க, அவர்கள் அறைக்குச் சென்ருள். சியாமளாவும், கமலாவும் ஏதோ சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். இவள் அங்கே சென்று திரும்பிகூட பாராமல், பால் டம்ளரை வைத்துவிட்டு வந்துவிட்டாள். அவளுக்குத் தெரியும், அவள் நாளெல்லாம் உழைத்த சிரமம். பேசாமல் சென்று படுத்துக்கொண்டாள். சிறிது நேரம் கழித்து வாந்தி எடுக்கும் சத்தம் கேட்டு விழித்துக்கொண்டாள் லக்ஷ்மி. அவள் மாமியாரும் என்னடி சத்தம் என்னது என்று சொல்லிக்கொண்டே சியாமளாவின் அறையை அடைந்தாள். அங்கே சியாமளாவும், கமலாவும் வாந்தி எடுத்திருந்தார்கள். அதற்குள் பத்மனுப அய்யர் ஓடோடியும் சென்று டாக்டரை அழைத்துவரஓடினுர். "லக்ஷ்மிதான் எங்களுக்கு பால் கொண்டுவந்து கொடுத்தாள். அவள் ஏதோ விஷத்தையோ, மருந்தையோ வைத்துவிட்டாள் போல் தெரிகிறது. இல்லாவிடில் எங்களுக்கு வாந்தி எடுக்குமா

அம்மா" என்ருர்கள் மூத்தவளும், இளையவளும் விம்மலுடன் ருக்மணி அம்மாள் பக்கத்தில் நின்ற லக்ஷ்மியை நோக்கினுள். அவள் மனம் கபடமற்றதா, அல்லது விஷமா என்று தெரிந்துகொள்ளவில்லை. ஏனெனில் லக்ஷ்மியின் மனம் துல்யமாயிருந்தது. கண் இமைக்கும் நேரத்தில் டாக்டர் வந்தார். மருந்து கொடுத்துவிட்டு, கவலை இல்லை அம்மா. ஏதோ பாலில் கோளாறு ஏற்பட்டிருக்கும் போல் தெரிகிறது. வேறொன்றுமில்லை, சில மாடுகளுக்கு வியாதி வரும். அந்த மாட்டின் பால்போல் தெரிகிறது. நல்ல வேளை! ஆரம்பத்தில் சிகிச்சை நடந்துவிட்டதே! இனி மேல் கவலையே இல்லை என்று சொல்லி ஒரு இஞ்செக்ஷனையும் செய்துவிட்டு போய்விட்டார்.

ருக்மணி அம்மாளின் மனம் சமாதானமடைந்தது. ஆனுல் அத்துடன் விடவில்லை சியாமளாவும், கமலாவும் "இல்லை அவள் மருந்துதான் வைத்துவிட்டாள். எங்களைக் கொல்ல அவள் செய்த சதிதான் இது. அவள் மோசக்காரி, சூனியக்காரி என்று வாயில் வந்தபடி பிதற்றினுர்கள். பெண்களைப் பெற்ற மனம் புண்ணுகியது. லக்ஷ்மிக்கு இந்த பேச்சுகளை சகித்துக் கேட்க முடியாததால் தன் அறைக்குச் சென்றுவிட்டாள். பத்மனுப அய்யர் தன் பெண்களுக்குச் சமாதானம் செய்துவிட்டு கூடத்துக்கு வந்தார். அங்கே அவர் கண்ட காட்சி! ஐயோ! நினைக்கக்கூட பயமாயிருக்கிறதே. பட்டாபி லக்ஷ்மியை அடித்துக்கொண்டிருந்தான். பட்டாபியின் மனம் கல்லாய்ப் போயிருந்தது. அவன் இந்த பேச்சுகள் நடக்கும்போதே ரேழியில் நின்று கவனித்துக் கொண்டிருந்தான். "அடே பட்டாபி, அவளை என்னடா செய்கிருய், நிறை கர்ப்பிணி! ஒன்றும் செய்யாதேடா, பழியைத்தலையில் போட்டுக்கொள்ளப்போகிருயா? என்று கத்திக்கொண்டு அவ்விடம் வந்தார். பட்டாபி அவ்விடத்தைவிட்டு நகர்ந்தான். ருக்மணி அம்மாள் அடி

பட்டு துவண்டு விழுந்து கிடக்கும் லக்ஷ்மியை கட்டிலில் கிடத்தினுள். அதற்குள் மறுபடியும் டாக்டரை அழைத்து வந்தார் பத்மனுப அய்யர். டாக்டர் மருந்து கொடுத்து விட்டுச் சென்ருர்.

அன்று இரவு அந்த வீடு அமைதியிழந்து காணப்பட்டது. வெவ்வேறு கட்டிலில் படுத்திருந்தார் கள் அவர்கள். லக்ஷ்மிக்கு சுயநினைவு வந்தபோது, அவள் படுக்கையில் கிடப்பதையும், தன் மாமியார் அருகில் கவ லையோடு தன் முகத்தை பார்த்துக்கொண்டிருப்பதையும் பார்த்து "விம்மினுள். அழாதே, நடந்தது, நடந்துவிட் டது. உன்னைச் சொல்லி என்ன பையன்! என் புத்தி அப்படி போயிற்று. இப்படியெல்லாம் நேரும்னு யார் கண்டார்கள். பேசாமல் தூங்கு. காலையில் சரியாயிடும்" என்று ஆதரவோடு சொன்னுள் மாமியார் ருக்மணி அம் மாள். லக்ஷ்மியின் மனம் ருக்மணியின் பேச்சில் சிறிது சாந்தியடைந்து கண்ணை மூடிக்கொண்டாள். உலகத் தில் எல்லோரும் நாட்டுப் பெண்ணை படாதபாடு படுத்தி வைப்பார்கள். ஆனல் ருக்மணி லக்ஷ்மியை தன் கண் இமைபோல் காத்து வந்தாள். இது உலக விந்தையிலே ஒன்றேயல்லவா? ருக்மணி அம்மாளின் கண் கள் நீரைச் சிந்தின.

அறைக்குள்ளே மூளையைக் குழப்பிக்கொண்டிருந் தான் பட்டாபி. சிறிது நேரத்துக்கு முந்தி காலேஜில் நடந்த 'டீ பார்ட்டி' முடிந்ததும், நண்பர்கள் சொன்ன சில வார்த்தைகளும், தன் வீட்டில் நடந்த நிகழ்ச்சிகளும் அவன்முன் உருவம் கொண்டு பேசின. "என்னப்பா பட் டாபி, சொல்கிறேன் என்று கோபித்துக்கொள்ளாதே, உன் வீட்டில் தினம் ரகளைகள் நடக்கிறதாமே. பேசாமல் பெண்டாட்டியோடு தனிக் குடித்தனம் போய்விடு அப்பா. இந்தக் காலத்தில்கூட இன்னமும் இப்படித்தான் இருப்

பார்களா" என்முன் கோபு. ஏன், கோபு அவனைத் தனிக் குடித்தனம் வைக்கச் சொல்றே? காலேஜில் பெரிய புரொபஸராக இருக்கும் இவன், வீட்டில் பெண்டாட்டி, நாத்தனார் சண்டையை அடக்க முடியாதா என்ன? என்முன் நண்பன் வேணு. அதை நினைத்த பட்டாபிக்கு தூக்கம் கொள்ளவில்லை. அன்று நடந்த நிகழ்ச்சிகள் வேறு மனத்தை அறுத்தது. "நான் ஏன் கலியாணம் செய்து கொண்டேன்? இதெல்லாம் தெரிந்துதானே நான் கலியாணம் வேண்டாம் என்றேன். அப்பா' அம்மா பிடிவாதத்தினால் செய்து கொண்டேன். இப்போது பெரிய தொந்தரவாக அல்லவா போய்விட்டது. இதிலிருந்து விடுபட வழியே இல்லையா?" எப்படி விடுபட முடியும்? அன்பே உருவான தந்தை, தன் கண்களில் நீர் காணக் கூடாது என்று ஏங்கும் தாய், புகுந்த வீட்டில் இன்பத்தை அனுபவிக்காமல், கணவன்மார்களுடனும் வாழாமல் தன் ஆதரவில் நிற்கும் சகோதரிகளின் முகம், நிறை மாதக் கர்ப்பிணியான லக்ஷ்மியின் அழகிய முகம், இவையெலாம் இவன் கண்முன் கோரத் தாண்டவம் ஆடின. அவன் மனத்தில் பெரிய போராட்டம் நடந்தது. யோசனை செய்து அவன் முகம் வெளுத்துப்போயிருந்தது. முடிவில் வைராக்கியம் வென்றது. துறவியாகப் போய் விடலாம். இப்போதே வீட்டைவிட்டு ஓடிவிடலாம் என்றும் எழுந்தான்.

இரவின் இரண்டாம் ஜாமம். எங்கிருந்தோ ஆந்தை ஒன்று அலறியது. வானத்தில் நட்சத்திரங்கள் கண்ணைச் சிமிட்டி இவனை போ, போ என்று சொல்வதுபோல் இருந்தது. முன் ஜாமம் பூராவும் கண் விழித்த காரணத்தால் நன்கு தூங்கிக்கொண்டிருந்தார்கள் வீட்டில் யாவரும். காலேஜ் அன்றுதான் கோடை விடுமுறைக்காக சாத்தியிருந்தார்கள். சிறிது நேரம் சிந்தனையைத்தட்டி விட்டான். அடுத்த நிமிடம் சாலையில் நடந்துகொண்டிருந்

தான் ரயில்வேஸ்டேஷனை நோக்கி, ஈரோட்டிலிருந்து வரும் மெயில்வண்டி வேகமாக வந்து கொண்டிருந்தது. பௌர்ணமி கழிந்து ஐந்தாம் நாள் ஆதலால் தேய் பிறைச் சந்திரன் சிறிது வெளிச்சத்தைக் கொடுத்தான். கால்போனபடி நடந்தான். அது அவனை ஸ்டேஷனைத் தாண்டி இரண்டு மைல் கொண்டுபோய் விட்டது. ஒரு விசில் சத்தம் கேட்டதும்தான் அவனுக்கு நினைவு வந்தது. திரும்பினான். அப்போது அவன் லயன் கரை அருகேயிருந் தான். விசில் சத்தமும், பூமி அதிரும் சத்தமும் மிக அரு கில் கேட்டது. அப்போது ஒரு உருவம் வெகு வேகமாக லயனை அடைந்து படுத்துக்கொண்டது. பட்டாபி ஆ! என்பதற்குள் மெயில் வண்டி அந்த இடத்தைத் தாண்டி விட்டது, ஒரு க்ஷணநேரம் இவன் மூளை வேலை செய்தது: ஓடினான் வெறிபிடித்தவனைப் போல் லயனை நோக்கி! 25 வயது மதிக்கத்தக்க ஒருவன் ரத்தவெள்ளத்தில் இறந்து கிடந்தான். அவன் பையை சோதித்தான் பட் டாபி. அவன் விலாசத்தை களைந்துவிட்டு தன் விலா சத்தை அதில் வைத்துவிட்டு மறைந்தான். இவ்வளவும் ஒரு நிமிட நேரம். அந்த வண்டி கொஞ்சதூரம் போய் நின் றது. அதிலிருந்து பல மனிதர்கள், கார்டு, போலீஸ், டிரைவர் உள்பட வந்து பார்த்தார்கள். அந்த மனிதன் இறந்து கிடந்தான் லயனில். உடனே வண்டிக்குக் கொண்டு போனார்கள் உடலை' அவன் விலாசத்திற்கு தந்தியும் அடித்தார்கள். பட்டாபியும் ஒன்றும் தெரியா தவன் போல் அக்கூட்டத்தில் கலந்துகொண்டான்.

மறுநாள் பத்திரிகையில் பட்டாபியின் மரணத்தைப் பற்றி கொட்டையான எழுத்தில் போடப்பட்டிருந்தது. தாய் தந்தையர்கள் தந்தியைப் படித்துக் கலங்கினார்கள். பரிதவித்தார்கள். "ஐயோ! என் பெண்கள்தான் வாழக்

கொடுத்து வைக்கவில்லை என்றால், என் நாட்டுப் பெண் கூடவா இப்படி. தெய்வமே என்னை ஏன் சோதிக்கிறாய். இன்னும் நாங்கள் இதையெல்லாம் அனுபவிக்க வேண்டுமா?'' என்று கதறினார்கள். அன்றுதான் சம்பளம்வாங்கியிருந்த பட்டாபியின் கோட்டுப் பையில் ரூபாய் 300 அப்படியே இருந்தது. அதில் ஒரு கடிதமும் இருந்தது. கடிதத்தை படித்தார், மயக்கம் அடைந்தார். வீடே சோகத்தில் ஆழ்ந்தது. மனம் வெறுத்து ஓடி, உயிர், துறந்தான் பட்டாபி என்று சொன்னார்கள் ஊரார். இந்நிலையில் லக்ஷ்மி ஒரு ஆண் மகவை ஈன்றாள். அவனுக்கு நடராஜன் என்றும் பெயர் வைத்தார்கள். அவர்களுக்குத் தெரியுமா? நடராஜர் ஸ்தலத்திலேதான் நடராஜன் தகப்பன் பட்டாபி இருக்கிறானென்று!

சிதம்பரம் தில்லை அம்பலவாணர் ஸ்தலத்திலே காஷாயம் தரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான் பட்டாபி. அவன் நாள்தோறும் குளித்துவிட்டு விபூதி பூசுவதும், ஜபமாலையை உருட்டுவதும், திருப்புகழில் இரண்டு அடிகளைச் சொல்வதுமாக காலங்கழித்தான். நடு, நடுவே வீட்டு நினைவும் வரும். கவலையும் எழும். ஆனால் நாள் ஆக, ஆக கவலையை மறந்து நடராஜர் ஸ்தலத்திலே உட்கார்ந்திருந்தான் மெய்மறந்து. இந்நிலையில் வருடங்கள் மூன்றும் கடந்துவிட்டன. பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று பிள்ளை இல்லாத குறையை நிவர்த்தி செய்யும் வேணு, சிதம்பரம் வந்திருந்தான் அன்று. நடராஜனை தரிசனம் செய்துகொண்டு பிரகாரம் சுற்றிவரும்போது ஒரு மண்டபத்தில் ஒரு சாமியாரைப் பார்த்தான். சந்தேகமே இல்லை! அவன் பட்டாபியேதான். சிறிதுநேரம் அவனையே பார்த்துக் கொணடிருந்தான் வேணு. "சரி, இப்போது ஒன்றும் செய்ய வேண்டாம், வீட்டிற்குச் சென்று தாய், தந்தையர்களை அழைத்து வருவோம்என்று'' நினைத்தான். அன்றே ரயிலேறினன். பட்டாபிக்குத் தன்னை

வேணு பார்த்ததோ, ஊருக்குச் சென்றதோ ஒன்றும் தெரியாது. மறுநாள் தாய் தந்தையர்கள் ஓடோடியும் வந்தார்கள். அவன் ஜபமாலையை உருட்டிக்கொண்டிருந்தான். தாடியும், மீசையும், காவி வஸ்திரமும், தீர்த்த பாத்திரமும் கொண்ட பட்டாபியைப் பார்த்த பத்மநாப அய்யரின் கண்களில் நீர் சுரந்தது. "என்னடா பட்டாபி, எங்களை மோசம் செய்துவிட்டு இப்படி இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறாயே! எங்கள் கதி! உன் மனைவி லக்ஷ்மியின் கதி? புறப்படு, வீட்டுக்கு போகலாம், போனதுபோகட்டும்" என்றார் உணர்ச்சியுடன். அப்போதுதான் பட்டாபி தந்தையைப் பார்த்தான். தாய் சொல்ல முடியாத துயரத்தோடு அவனை அணைத்துக் கொண்டிருந்தாள். பட்டாபியின் கண்களில் நீர் மறைத்தது. அவன் மனம் இளகியது. ஆனால் அடுத்த கணம் அவன் மனக் கண்முன் மறுபடியும், தாய் தந்தையர்கள், அக்கா, தங்கைகள் முகம் தெரிந்தது அதோடு லக்ஷ்மியின் முகமும், அவள் கையில் ஒரு பிள்ளையை வைத்துக்கொண்டு "என்னை மோசம் செய்து விட்டீர்களே" சொல்வதுபோல் தெரிந்தது. "நீ மோசக்காரன், மோசக்காரன்" என்று மனம் கூறியது. பரிதாபமான முகத்துடன் காணும் தன் மனைவியின் இளம் முகம் இவன் மூளையை சிதற அடித்தது. "அப்பா என்னை மன்னியுங்கள்" என்று காலில் விழுந்தான். பிராயச்சித்தம் செய்து கொண்டான். அன்று அவன் வாழ்க்கையிலும் மலர்ச்சி ஏற்பட்டது. வீட்டிற்கு வந்தவுடன் அவன் கண்கள் தொட்டிலை நோக்கின. ஓடிச்சென்று தன் பையன் நடராஜனை அணைத்துக்கொண்டான் அன்புடன். ஆனால் அவன் கண்கள் யார் யாரையோ தேடின. என்னடா பட்டாபி யாரைத் தேடுகிறாய்? கமலாவும், சியாமளாவும் எங்கே என்று தேடுகிறாயா? சியாமளாவை அவள் கணவன் திரும்ப அழைத்துக்கொண்டு விட்டான். கமலாவின் கணவனுக்குப் பைத்தியம் தெளிந்து கமலாவை நாலு

நாளைக்கு முன்புதான் அழைத்துக்கொண்டு போனான். பட்டாபியின் கண்கள் அகல விரிந்தன. மனம் நிம்மதி யடைந்தது. இனிமேல் பட்டாபிக்கு சந்நியாசம் வாங்கிக் கொள்ள பைத்தியமா என்ன?

ஆ! என்ற சத்தம் கேட்டு விழித்துப் பார்த்தார் பத்மனாப அய்யர். சிந்தனைக் கயிறு பட்டென்று அறுந்தது. என்னம்மா லக்ஷ்மி என்று ஓடி வந்தார் பத்மனாப அய்யர். "ஒன்றுமில்லை மாமா, இந்த ராஜு என் விரலை பதம் பார்த்துவிட்டான்" என்றாள். "அடே போக்கிரிப் பயலே ஏதேது உன் அப்பனை எல்லாம் சாப்பிட்டு விடுவே போல இருக்கே" என்றார். "நிச்சயம் அப்படித்தான் இருக்கவேண்டும். என்னைப்போல் இருந்தால் எப்படி குடித்தனம் ஒழுங்காக நடக்கும்" என்று சொல்லிக்கொண்டே அங்கு வந்தான் பட்டாபி. தந்தையும் தாயும் பட்டாபியை ஆனந்தக்கண்ணீர் நிறைந்த கண்களால் பார்த்தனர்.

—ப. ரா.

எப்போதும் உற்சாகம் அளிப்பது
அசோகா சுகந்த பாக்குத்தூள்

மூக்கின் போக்கு

★

ஜீவராசிகளின் அவயவங்களில் மூக்குமிகவும் விசேஷமானதாகும். மனிதனுகட்டும், மிருகமாகட்டும், மற்ற பறவை, பூச்சி இனங்களாகட்டும், இந்த மூக்கின் மகிமை சொல்லத் தரமன்று! அந்துப் பூச்சியை எல்லோரும் பார்த்திருப்பீர்கள். இந்த ஆண் அந்துப்பூச்சி பெண் பூச்சியோடு சேரும் காலங்களில் பெண் பூச்சி இரண்டு மைல் தொலைவிற்கப்பாலிருந்தாலும் தன் மூக்கால் கண்டு பிடித்து விடுமாம். பூச்சி இனத்தில் முகரும் உணர்ச்சி இதற்கு அபாரம் என்று கூறலாம்.

எறும்புகள் மற்ற எறும்புகளைத் தங்கள் கூட்டத்தைச் சேர்ந்த எறும்புகளா அல்லது வேறுகூட்டத்தைச் சேர்ந்த எறும்புகளாவென்று வெகு எளிதில் மூக்காலேயே கண்டு பிடித்து விடுகின்றன. தன் இனத்தில் சேராத எறும்புகள் கூட்டத்திலிருந்தால்அவற்றை தாட்சண்யமின்றி விரட்டி விடுகின்றன. எறும்புகளைப்பற்றி மற்ெருரு விநோதமான தகவல் என்னவென்ருல் ஒரே இனத்தைச் சேர்ந்து சகோதர பாசத்துடன் வாழும் எறும்புகளின் மூக்கைத் துண்டித்துவிட்டால் அந்த எறும்புகள் ஒன்ருேடொன்று கோர யுத்தம் செய்து மரித்து விடும். இதற்குக் காரணம் முகரும் உணர்ச்சியை இழந்ததேயாகும்.

பாம்புக்கு மூக்கு உண்டு என்ருல் எவரேனும் நம்புவார்களா? ஆனுல் பாம்புக்கு அபார முகரும் உணர்ச்சி உண்டென்பது இயற்கையின் அதிசயங்களுள் ஒன்ருகும். பாம்பின் நாக்குதான் இந்த உணர்ச்சி பொருந்திய அங்கம். பெரும்பாலான காட்டு விலங்குகளுக்கும் தங்கள் சத்துருக்குள் சமீபத்திலிருப்பதை இந்த முகரும் உணர்ச்சியால் தெரிந்து கொள்ளும் சக்தி உண்டு. தன் கண்ணில் பட்ட மான் இருக்கும் திசையை நோக்கி காற்றடித்துக்கொண்டிருந்தால் அந்த மானைப் பின் தொடர்வதில் பயனில்லை என்பது வேட்டையில் கைதேர்ந்த வேடனுக்குத் தெரியும்.

கரடிகளுக்கும் காட்டு ஆடுகளுக்கும் இந்த முகரும் உணர்ச்சி விசேஷமானவை. காட்டு யானைக்கு மூக்கு தும்பிக்கையின் முனையில் தானிருக்கிறது. காட்டு யானை தும்பிக்கையை உயர்த்தி இரு புறமும் அசைத்தால் தனக்கு வரும் ஆபத்தை முகரும் சக்தியால் அறிந்துகொண்டு விட்டதென்பது நிச்சயம்.

தன் மோப்ப சக்தியைக் கொண்டு குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க மனிதருக்குத் துணைபுரியும் நாய் உலகப் பிரசித்திபெற்றதல்லவா? நாய்க்

கும் காடிக்கும் ஓரிடத்தில் நான்கு ஐந்து தினங்கள் முன் பிருந்த பொருளின் வாஸனையைக்கூட அறியும் சக்தி உண்டு.

சிருஷ்டியிலுள்ள மூக்குகள் அனைவற்றிலும் மிகச்சக்தி வாய்ந்ததுமனிதன் மூக்குதான். மனிதன் மூக்குக்கு பத்தாயிரம். விதமான வாஸனைகளை அறியும் சக்தி உண்டு.

மதியும் நரியும்

நியூயார்க் தாலுகாவிலுள்ள நரிகளை ஒழித்தே விடுவதென்று ஒருவர் கங்கணங் கட்டிக்கொண்டார். இரண்டு மாதங்களில் 305 நரிகளை ஒழித்தும் விட்டார். இவ்வளவு நரிகளை வெற்றிகரமாக வலையில் பிடித்ததன் ரகசியத்தை அவரிடம் கேட்டதற்குத் தான் இந்தியாவிலிருந்து நரிகளை வசப்படுத்தும் ஒருவிதமான வாஸனைத் திரவியத்தைக் கொண்டு வந்துள்ளதாகக் கூறினர். இந்த வாஸனைப் பொருள் என்னவென்பதை இவர் வெளியிடவில்லை. ஆனல் ஐந்து மைல் தொலைவிலிருக்கும் நரியைக்கூட ஆகர்ஷிக்கும் சக்தி இந்த வாஸனைப் பொருளுக்கு உண்டு என்பதை மட்டும் வெளியிட்டார்.

நரிகளைப் பிடிப்பதற்காக கடல் கடந்து பாடுபட்டு விலை மதிப்பற்ற சஞ்சீவியைக்கொண்டு வந்த மனிதனின் திறமையைப் புகழ்வதா? ஐந்து மைல் தொலைவிலிருக்கும் பொருளின் வாசனையை உணரும் சக்தி பெற்ற நரியைப் படைத்த இயற்கையைப் புகழ்வதா?

★

ASOKA SCENTED BETELNUT POWDER

சிறு நாடகம்:

ஸ்வர்ணமாலா

(கலாபாரதி)

நாடக பாத்திரங்கள்.

ராஜமார்த்தாண்ட தேவன் : ஜெயமங்களபுரி மன்னன்.
புலவர் ஸதானந்தர் : ஆஸ்தான கவிவாணர்.
ஸ்வர்ணமாலா : புலவரின் புதல்வி.
சிகண்டி : நொண்டிப் புலவர்.
அமரசிம்மன் : பிரதான அமைச்சர்.

(இதர கலைஞர்கள், வீரர்கள், அரசாங்க சிப்பந்திகள்.)

[குறிப்பு:—வாலிப வயதினனான மார்த்தாண்டன் ஆட்சி காலத்தில் கவிவாணர் ஸதானந்தர் ஆஸ்தானப் புலவராக இருக்கிறார். அதிமேதையான அவர் அளவற்ற அகம்பாவம் அடைகிறார்.]

காட்சி 1

இடம். ராஜ சபை, காலம்: காலை நேரம், பாத்திரங்கள்: அரசன், அரசப் பிரதானிகள், மந்திரி, புலவர், ஸ்வர்ணமாலா.

(ராஜ சபையில் புலவர் ஸதானந்தர் புத்திரியுடன் பிரவேசம்.)

ஸதானந்தர்: (தலைவணங்கி) ஜெயமங்களபுரி மன்னனுக்கு ஜெயமும் மங்களமும் உண்டாகட்டும்.........

மார்த்தாண்டன்: வரவேண்டும்.......ஸதானந்தரே......கவிவாணர் இல்லாமல் அரச சபையே களையற்று காட்சியளிக்கிறது அமரவேண்டும்... :

ஸதானந்தர்: சீக்கிரமே வந்துவிட வேண்டுமென்றுதான் புறப்பட்டேன்......என் புத்திரியை அழைத்துக் கொண்டு தேவாலயஞ் சென்று திரும்பி வரும்போது தாமதம் ஆகிவிட்டது...... இதோ இவள்தான் என் புதல்வி ஸ்வர்ணமாலா......(தன் பெண்ணிடம்) ஸ்வர்ணா! அரசருக்கு நமஸ்காரம் செய்யம்மா......

ஸ்வர்ணமாலா: (மிடுக்கான வணக்கத்துடன்) நமஸ்காரம் மன்னவ!

மார்த்தாண்டன்: அந்த ஆஸனத்தில் அமரலாமே!...(ஸதானந்தரிடம்)...ஸதானந்தரே! உங்கள் புத்திரியைப் பற்றி நீங்கள் அடிக்கடி சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர, நான் நேரில் பார்த்தது கிடையாது...இதுவே முதல் தடவை சந்திப்பு...

ஸதானந்தர்: அதனுல்தான் அரசுக்கு அறிமுகம் செய்து வைக்க, ஈஸ்வர தரிசனம் ஆனதும் ராஜ தரிசனத்துக்காகவே இன்று இங்கு அழைத்து வந்தேன்......அடுத்த மாதம் அவளுக்குப் பதினெட்டாவது பிறந்த தினம் வருகிறது. அவளது கலை அரங்கேற்றத்துடன் அந்த வைபவத்தை விமரிசையாகக் கொண்டாடுவதாக இருக்கிறேன். ஒரு வார காலமாக அவள் ஆராதனைகள் விசேஷ முறையில் நடைபெற்று வருகின்றன. அவளுக்காகத் தான் தகுந்த வரன்கள் பார்த்து வருகிறேன். ஒன்றும் வகையாக வாய்க்கவில்லை......

மார்த்தாண்டன்: (சற்று அலட்சியமாக) ஊ...ம்...உங்களுக்கு கூடவா அந்த சிரமம்! ரொம்பவும் உயர்ந்த ராஜகுமாரர்களாகப் பார்க்கிறீர்கள் போலிருக்கிறது.

ஸதானந்தர்: அப்படியில்லை. மஹாராஜ்! ஸ்வர்ணமாலாவோ, கல்வி, கலை, அறிவு, அழகு அனைத்திலும் அபாரத் தேர்ச்சியும், ஆற்றலும் பெற்றிருக்கிருள். என்னையே மிஞ்சி விடும் விதத்தில், கேள்விகள் கேட்டுத் திணற அடித்துவிடுகிருள்... அதனுல் அவளுக்கு நிகரான ஒரு புருஷனையோ அல்லது அவளது திறமையைவிட அதிகமாக உள்ள ஒரு யுவனையோ அல்லவா பார்க்கவேண்டியிருக்கிறது...

மார்த்தாண்டன்: ஓஹோ...அப்படியா...தங்கள் குமாரிக்கு சங்கீதப் பயிற்சி உண்டல்லவா...அப்படியானுல் கொஞ்சம் கேட்டு மகிழலாமா...

ஸதானந்தர்: பேஷாக, சங்கீதமட்டுமென்ன? நாட்டியம் அபிநயம், நடிப்பு முதலிய சகல கலைகளும் அவதரித்த சாக்ஷாத் சரஸ்வதியென்றே சொல்லவேண்டும்...மாலா! சங்கீதத்தைப் பற்றியே அன்று ஒரு கீர்த்தனம் சாஹித்தியம் செய்து கொடுத்தேனே அதைப் பாடு...ரஸிக்கலாம்.

ஸ்வர்ணமாலா: (எல்லாரையும் வணங்கிவிட்டு அபினயத்துடன் பாடுதல்)

பாட்டு. ராகம்; பியாக்கடை தாளம் : ஆதி
அல்லது ரூபகம்.

பல்லவி

கானாம்ருத பானம்—வெகு
கர்ணானந்த கீதம்...
கவலைகள் தீர்த்திடும் (கானம்)

அனுபல்லவி

வானோர் முனிவர் போற்றும் சங்கீதம்
வாணியின் வீணையிதெழும் பிரணவ நாதம் (கானம்)

சரணம்

பாதம் பணிந்தேன்—புஸ்தக பாணீ
வேத சாஸ்திர வித்யா வாணீ
ஸ்ருதிலயஸ்வர பாவ ஸதரூபிணீ
மதுர கீதா வாணீ...கல்யாணீ
சதுர் முகத்தவனின் சரஸ்வதி தேவியின் (கானம்)

மார்த்தாண்டன் : ஆஹா....அபாரம்...அற்புதம்...ஆனந்தம் ...என்ன சாரீரம்...என்ன சாஹித்யம்...ஸதானந்தரே ரொம்ப பிரமாதம்...

ஸதானந்தர் : அதனால்தான் அரசே! நான் இவளுக்காகக் கலை, கல்வி, அறிவு, அழகு, காம்பீர்யம், வீரம், தேஜஸ் நிறைந்த யுவனைத்தேடி அலைந்து கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்டவர் நம் ராஜ்யத்தில் எங்கு கிடைக்கிறார்கள்...ஹூம்...

மார்த்தாண்டன் : புலவரே! (சற்று பதட்டமாக) நீங்கள் ஒரேயடியாய் அப்படிச் சொல்லக்கூடாது...அது சரியல்ல...தற் போது கவிவாணர்களில் சிறந்தவர் நீங்கள் இல்லையா...அது போல் இன்னும் சிறந்தவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார் களோ...கண்ணுக்குப் புலப்படாத கணக்கிலடங்காத ரத்தினங் களும், மாணிக்கங்களும் கண் மறைவாக இருக்கலாமல்லவா?

ஸதானந்தர் : அரசே! நானும் இந்த விசாலமான ஜெயமங் களபுரி சாம்ராஜ்யம் முழுவதும் திக்விஜயம் செய்து வந்திருக் கிறேன். வெளி நாடுகளுக்கும் போய் எவ்வளவோ அரசவைகள் கலைப்போட்டி பந்தயங்கள், கலை மகாநாட்டு விழாக்களிலும் கலந்துகொண்டு அஷ்டாவதானங்கள், மணிப்பிரவாளங்கள் செய்து சன்மானங்களை அடைந்திருக்கிறேன்......அவற்றில் ஒரு

வரேனும் என்னையே வெல்ல முடியவில்லை யென்றால், என் மகளையா ஜெயிக்கப் போகிறார்கள்...ஹூம்...ஹூம்...(இறுமாப்புடன் பெருமூச்சு.)

மார்த்தாண்டன்: ஸதானந்தரே! புலிக்குப் பிறந்தது பூனையாகாது. ஆனால்...உங்கள் புதல்வியையோ, உங்களையோ மீறுவதற்கும் ஒருவன் கண்டிப்பாய்க் காத்துக் கொண்டிருக்கிறானென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்... அவன் அரச சபையில் அலங்கார ஆடை தரித்த ஆஸ்தான கவி வாணராக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லையே! எளியவனாய் விளம்பரப்படுத்திக்கொள்ளாதவனாய் இருக்கலாமல்லவா...

ஸதானந்தர்: அப்படிக் காத்துக்கொண்டிருப்பவனை நான் பார்த்துப் பரிசீலனை செய்யலாமா?

மார்த்தாண்டன்: தாராளமாய்ச் செய்யலாம்......ஆனால் அதற்கு நான் சொல்லும் யோசனைப்படி நீர் செய்யவேண்டும்—இந்த நாட்டிலுள்ள அரசர்கள், வீரர்கள், கலைஞர்கள், புலவர்கள், சாஸ்திர நிபுணர்கள் அனைவரையும் அழைத்து ஒரு கலையரங்கு நடத்தவேண்டும்...அதில் நீரும், உமது மகளும், மூன்றாவதாக இன்னொருவரும் சேர்ந்து மூன்று கேள்விகளடங்கிய ஒரு வினைத்தாள் தயார் செய்து விநியோகித்து விடைகளை எழுதி வாங்க வேண்டும்—அம் மூன்று கேள்விகளில் ஒன்று கலை-சாஸ்திரம் சம்பந்தமாகவும், இரண்டாவது உலக சம்பந்தமானதாக சாதாரணமாக பொது அறிவுக்குப் பயன்படக்கூடிய கேள்வியாகவும். மூன்றாவது நம் சாம்ராஜ்ய அரசியல் விவகாரமாகவும் அமைந்திருக்கவேண்டும்—உங்கள் மூவர் அடங்கிய பஞ்சாயத்தாரின் பரிசீலனை முடிவின்படி மூன்று கேள்விகளுக்கும் முற்றிலும் சரியான விடையளித்தவனை தடையின்றி உமது மகள் அடைவதோடு அவன் கேட்கும் கேள்விகளுக்கும் பதிலளிக்க உமது புத்திரி சித்தமாக இருக்கவேண்டும்—என்ன சொல்கிறீர்கள்—எப்படி இந்த யுக்தி...

ஸதானந்தர்: ஆ...ஹா...சரியான யுக்தியிது. இந்த யுக்திதான் காரியசித்தி யடையச் செய்யும்...தவிர இந்த உபாயத்திலும் யாதொரு அபாயமும் இருப்பதாகத் தெரியவில்லை...மூன்றாவது நியாயஸ்தராகத் தாங்களே இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன் மஹாராஜ்!

மார்த்தாண்டன்: இல்லை...நான் ஒரு அவசிய காரியமாக அவசரமாக வெளியூருக்கு இன்று இரவு போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் எனது ஸ்தானத்தில் நமதுபிரதான

அமைச்சர் அமரசிம்மனை அழைத்துக்கொண்டு பார்த்துக்கொள்ளுங்கள்...நான் கல்யாணத்துக்கு வந்து விடுகிறேன்.

ஸதானந்தர் : சரி. தங்கள் சித்தம்...மஹாராஜ் !

மார்த்தாண்டன் : அமரசிம்மா ! எல்லாவற்றையும்...(சற்று நிறுத்தி) ஹாம்...நன்ருய்க் கவனித்துக்கொள்ளுங்கள். தெரிந்ததா? நான் வருகிறேன். (எழுந்திருத்தல்)

அமரசிம்மன் : அப்படியே மஹாராஜ் !
ஸதானந்தர் (மகளுடன்) நாங்கள் வருகிருேம்...
ஸ்வர்ணமாலா : நமஸ்காரம் மஹாராஜ் !
(எல்லோரும் போகிருர்கள்) (திரை விழுதல்)

காட்சி 2

இடம் : கலை மகா நாட்டு மண்டபம், **காலம்** : மாலை நேரம்,
பாத்திரங்கள் : புலவர்—ஸதானந்தர், ஸ்வர்ணமாலா, மந்திரி அமரசிம்மன், சிகண்டி, இதர (மகா நாட்டுக்கு வந்த) கலைஞர்கள், வீரர்கள்.

(**குறிப்பு** :—பரீக்ஷை முடிந்து விடைத்தாள்கள் திருத்தப்பட்டு மகா நாட்டில் முடிவுகள் தெரிவிக்கப்படுகின்றன).

ஸதானந்தர் . (பிரசங்க மேடையில் நின்று) சபையோர்களே! கலைஞர்களே ! நான்தான் இந்த சாம்ராஜ்யத்தின் ஆஸ்தானப் புலவர் ஸதானந்தர் என்று உங்களுக்கெல்லாம் தெரியும். இன்று காலையில் நீங்கள் எல்லோரும் எழுதின விடைத்தாள்களை யெல்லாம் நானும், அமைச்சர் அமரசிம்மனும், எனது குமாரி ஸ்வர்ண மாலாவும் நன்கு பரிசீலனை செய்தோம்...அதன்படி மூன்று கேள்விகளுக்கும் முற்றும் சரியான, பொருத்தமான விடையளித்தவர் "சிகண்டி" என்பவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிருேம். "சிகண்டி" என்பவர் மேடைக்குத் தயவு செய்து வரவேண்டும்...

சபையோர்கள் : சிகண்டிக்கு ஜே ! சிகண்டி வாழ்க !
(சிகண்டி மேடைக்கு வருவதில் சற்று தாமதமாகும்...... கோஷூன்றும் சப்தம்)

ஸதானந்தர் : ஏன் இன்னம் அந்த சிகண்டி என்பவரைக் காணவில்லை...

அமைச்சர் : (கையைக் காண்பித்து) அதோ வருகிருரே! ஒரு கிழவனர் நொண்டிபோல்...இரண்டு சிம்புகளை ஊன்றிக்கொண்டு தள்ளாடி வருகிருரே...அவர்தான் போலிருக்கிறது...

ஸதானந்தர் : (திடுக்கிட்டு) ஆ...என்னது...நொண்டியா... இவ்வளவு கோரஸ்வரூபமா...ஐம்பது வயதுக்குக் குறையாது போலிருக்கிறதே...

ஸ்வர்ணமாலா : ஆ! அப்பா...எனக்குப் பார்க்கவே கண் கூசுகிறதே...பயங்கரமாகவல்லவோ...

(அழுகிருள்)

அமைச்சர் : பொறுங்கள்...ஸதானந்தரே !...அழாமலிரு ஸ்வர்ணமாலா...ஏன் இப்படி பதட்டப்படுகிறீர்கள்.

(சிகண்டி நெருங்கி வருதல்) 'அவரிடம்' உரத்த குரலில்' ஏனைய...சிகண்டி என்பவர் நீர்தானு? இது உமது விடைத்தாள் தானு ?

சிகண்டி : (ஏளனச் சிரிப்புடன்) ஹோ...ஹோ...அதில் சந்தேக மென்ன? எனது உடையும், நடையும் விகாரமாயிருப்பது கண்டு விடையும் விபரீதமாயிருக்குமென நினைத்தீர்களோ !

அமைச்சர் : அதில் தடையென்ன? உமது தலை ஜடையும், தாடியும், மீசையும் பார்த்தால் கலை மகா நாட்டு விழாவிற்கு வந்தவராகவே தோன்றவில்லையே.

சிகண்டி : (சற்று ஆத்திரத்துடன்) அமைச்சரே! இதோ பார்த்தீர்களா என் முழங்கையில் 'சிகண்டி' என்ற பச்சைக் குறி இருக்கிறது. கையெழுத்தை வேண்டுமானல் நானே மீண்டும் போட்டுக் காண்பிக்கிறேன். கால் முடமே தவிர எனக்குக் கை திடமாயிருக்கிறது. தேவையானல் நான் எழுதியிருக்கும் விடைகளைப் பாராமலேயே உங்கள் எதிரே இப்போது சொல்லுகிறேன். போதுமா நிரூபணம்...

(சபையோர்களிடம் 'உரத்த குரலில்') சபையோர்களே! நான் எப்படியிருந்தாலென்ன? எனது விடைகள் சரியாக இருக்கும் போது விவாகத்திற்கு தடை எதற்கு? சட்ட நியாயப்படியும், இவர்கள் நிபந்தனைகளின் படியும் தேர்ச்சி பெற்ற எனக்குத்தானே பெண்ணைக் கொடுத்தாகவேண்டும்? நீங்களே நியாயம் சொல்லுங்கள்...

சபையோர்கள் (பல குரலில்): ஆம். சரிதான்...அதுதான் தரும நியாயம்...(ஸ்வர்ணமாலா விசிக்கிருள். உள்ளம் குமுறுகிருள்).

அமைச்சர்: (மெல்லிய குரலில் தனியாக, ரகசியமாக) ஸ்வர்ணமாலா... அழாதேயம்மா. தைரியமாய் இரு. ஸதானந்தரே! வருந்தாதீர்கள்...ஒரு வழி பண்ணுகிறேன்.

சிகண்டி: (ஸ்வர்ணமாலாவிடம் கம்பீரத்வனியில்) உண்மைக் கல்வி யறிவு இல்லாத உத்தமியே! நீ படித்த லட்சணம் இவ்வளவு தானு? அழுது சாஹஸம் செய்தால் விட்டுவிடுவார்களா? "வித்யா ததாதி விநயம்"—"படிப்பு பதவிசையளிக்கும்—கல்வி கண்யத்தைக் கொடுக்கும்" என்பதை நீ யறியமாட்டாயா? "கற்றது கைம்மண்ணளவு—கல்லாதது உலகளவு" என்பது போல் உனக்குத் தெரியாதது உலகில் இன்னம் எவ்வளவு இருக்கின்றன என்பது உனக்குத் தெரியுமா? அழகிய புருவமும், பருவத்துக்கேற்ற உருவமும் படைத்துவிட்டதாக கர்வம் கொள்ளுவதுதான் புத்திசாலிப் பெண்ணின் போக்கோ? என்னைக் கேள்வி கேட்டுப் பரீட்சித்த மாதரசியே! இதோ இந்த விடைத்தாள்களில் நான் கேட்டிருக்கும் மூன்று கேள்விகளுக்கு மட்டும் விடை யளி பார்க்கலாம்.

(உரக்க) சபையோர்களே! நீங்களே சொல்லுங்கள்... என்னைப் பரிசோதித்த பாவையை நான் பரிசீலனை செய்யவேண்டாமா? அதி பேதையென்று அகங்கொள்ளும் பேதையை அடக்காவிடில் அது நம் ஆண் இனத்துக்கே அகௌரவமும், அவமானமுமல்லவா? இதுமாதிரி ஒரு பெண்ணை அகம்பாவம் அடைய விட்ட அப்பனுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டாமா?

அமைச்சர் அமரசிம்மன்: (குறுக்கிட்டு) போதும் சிகண்டிப் புலவரே! இது என்ன நாடகமா நடிக்கிறீர்? இது அரசாங்கத்தைச் சேர்ந்த சபை. பிரசாரம் செய்யும் பிரசங்க மேடையல்ல!

(சபையோர்களிடம்)

சபையோர்களே! மற்றொன்று நீங்கள் இன்று நடந்த விஷயங்களில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது: இன்று நடந்த பரீட்சைக் கேள்விகளில் மூன்ருவது கேள்வி யென்னவென்ருல், "நமது நாடான ஜெயமங்களபுரியில் உள்ள ரகசிய தளவாடங்களும், ரகசிய ராணுவப் படைகளும், ராஜாங்க முஸ்தீப்புகளும் எங்கெங்கே இருக்கின்றன? அவை என்னென்ன? அவற்றை இயக்குவது எப்படி?" என்றிருக்கிறது. இந்தக் கேள்வி இங்குள்ள வீரர்களை சோதிப்பதற்காகவும், முக்கியமாக அரசாங்க அந்தரங்க அலுவல்களை ஒட்டியும் ஒரு காரணமாக அமைக்கப்பட்டது. இங்கு குழுமியுள்ள இத்தனை வீரர்களில் ஒருவரேனும் பதில் சொல்ல முடியாதபோது, ஒரு சாதாரண புலவரான சிகண்டி மட்டும் வெகு பொருத்தமான விடை யளித்திருப்பது வியக்கத்தக்கதாக இருப்பதுடன் மிகுந்த சந்தேகத்துக்கும் ஏதுவாகிறது. அந்தச்

சந்தேகம் தீரும் வரையில் இந்த நாட்டுச் சட்டப்படி இவரை அயல் நாட்டு ஐந்தாம் படை ஒற்றனென்று கருதி கைது செய்கிறோம். வெளியூர் போயிருக்கும் நம் அரசர் வந்து விசாரணை செய்து தீர்ப்பளித்தபின் அவரை விடுதலை செய்வது நிர்ணயிக்கப்படும். அது வரை அவருக்குச் சிறைவாசம். ஊம்...விலங்கு மாட்டலாம்.

(கைது செய்கிறார்கள்)

சிகண்டி : தெய்வமே! உண்மை...நியாயம்...தருமம்...நீதி... எல்லாம் ஒரேயடியாய் ஒழிந்துவிட்டதா...க்ருஹப்ரவேசம் செய்ய வேண்டிய மாப்பிள்ளைக்குக் காராக்ருஹப்ரவேசமா? இல்லற வாசத்துக்குப் பதில் கல்லறை வாசமா? நலங்கு நிகழும் நேரத்திலே விலங்கிட நேர்ந்தால் நெஞ்சம் கலங்காதா...அமைச்சரே! ஐந்து விநாடி அனுமதி யளியுங்கள்.

(சபையினரிடம்)

சபையோர்களே! கலைஞர்களே! உங்கள் முன் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்...இதுகாறும் நீங்கள் எனக்களித்த அன்பு—ஆதரவு—ஆசிகளுக்கு எனது அந்தரங்க வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் உண்மையில் ஊர் ஊராய்த் திரியும் பிச்சைக்காரனென்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள். "நாடோடிப் புலவன் சிகண்டி—அவன்—நாழிக்கு நாலடி நடப்பான்—கால் நொண்டி" என்று பாடி எல்லாரும் என்னைக் கேலி செய்வார்கள். நான் எடுக்கும் பிச்சையையும் இச்சைப்பட்டு ஒரு சித்தர் என்னிடம் வாங்கிக்கொண்டார். "வாங்கியறிவேனே தவிர கொடுத்தறிகிலேனே பராபரமே" என்றவாறு இருந்த எனக்குத் தருமம் செய்ய வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி மிகுந்த மகிழ்ச்சியுடன் என்னிடமிருந்த எல்லாவற்றையுமே கொடுத்துவிட்டேன். அதற்கு நன்றியாக அவர் என்னிடம் "அறிவு வேண்டுமா...அழகு வேண்டுமா?" என்று கேட்டதற்கு அறிவுப் பிச்சையே கேட்டேன். அவர் மந்திர பூர்வமாக கலை, சாஸ்திர அறிவைப் புகட்டும்போது, அறிவு வேண்டுமாயின் அடக்கமும், அன்பும் கூட வேண்டுமென்று உபதேசித்தார். அவர் அளித்த அறிவினால் நான் அழகை மட்டுமல்ல, அந்தஸ்து, அதிருஷ்டம் அனைத்தையும் அடைய முடியும்.

சபையோர்களே! இதோ நான் கேட்ட கேள்விகளுக்கு இந்தப் பெண்மணி யளித்திருக்கும் விடை முற்றிலும் சரியென்று எனக்குப் படவில்லை. உங்களில் இருவர் வந்து பரிசீலனை செய்து தீர்ப்பளியுங்கள்.

அமைச்சரே! சிறைச்சாலைக்குத் தயார்...நான் புறப்படுங்கள்!

சபையில் ஒருவன் : (எழுந்து) சபையினர் சார்பில் நான் சில வார்த்தைகள் சொல்ல சமூகம் அனுமதிக்கவேண்டும்! அமைச்சரே! நீங்கள் செய்வது அநியாயம்...அக்ரமம்...சிகண்டி விகாரமாயிருப்பதால் நீங்கள் இந்த விவகாரம் செய்வது தகாது. தரும நியாயப்படியும், உங்கள் நிபந்தனைகளின் படியும் புலவர் சிகண்டிக்கும், ஸ்வர்ணமாலாவுக்கும் எப்படியும் விவாகம் நடக்க வேண்டியது தானே! விவாகத்தை மறுக்க விவாதம் செய்தால் அது விபரீத விவகாரத்தில் விளையுமென்பது ஞாபகமிருக்கட்டும். எங்கள் முன்பு நாளைக்கே கல்யாணம் நடக்காவிடில் கிளர்ச்சி செய்வோம். சிகண்டியைச் சிறையிலிட்டால் நாங்களும் சிறைக்குச் செல்லுவோம். உங்கள் விசாரணையை வேண்டுமானல் கல்யாணத்திற்கு பிறகு வைத்துக்கொள்ளுங்கள். நாங்களும் இந்த அநீதியை அரசனிடம் முறையிடுகிறோம்.

சபையில் மற்றவர்கள் (பல குரலில்)...ஆம்...அப்படியே செய்தாகவேண்டும். (எல்லாரும் ஒரே ஆரவாரம்)

அமரசிம்மன் : சபையோர்களே! கொஞ்ச நேரம் அமைதியாய் இருங்கள்...(ஸதானந்தரிடம் திரும்பி)..ஸதானந்தரே! வேறு வழியில்லை...உமது குமாரி ஸ்வர்ணமாலா சிகண்டியை மணந்து தான் ஆகவேண்டும்...நானும் என்னல் இயன்ற வரை முயன்று விட்டேன்...என்ன ஸ்வர்ணமாலா...(அவள் விசித்தல்)

ஸதானந்தர் : (சலிப்புடன்)...ஹூம்...சரி...தெய்வ சங்கல்பம் இப்படி இருக்கும்போது நாம் என்ன செய்வது...அரசர் சொல்லி விட்டுப் போனபடியே நடந்துவிட்டது...ஹூ..ம்..(பெருமூச்சு)

ஸ்வர்ணமாலா : என் தலைவிதி...மதிகெட்டு நடந்துகொண்டதற்கு என் கதி இப்படியானது தெய்வத்தின் சதிதான்..:பெண்புத்தி பின்புத்தியென்று தெள்ளத் தெளிந்துவிட்டது ...மடமையில் கொண்ட மமதை மண்ணைக் கௌவியது...

அமைச்சர் : சபையோர்களே! உங்களது விருப்பப்படியும், எங்களது தீர்மானப் படியும், நாளைக் காலையில் முகூர்த்தம் நடத்த ஏற்பாடு செய்ய முடிவு பண்ணியிருக்கிறோம்...விவாகத்தை இருந்து விமரிசையாக நடத்தி வைத்துத் தம்பதிகளை ஆசீர்வாதிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்...இத்துடன் சபை இனிது கலைந்து எல்லாரும் நிலாச் சாப்பாட்டுக்குச் செல்லலாம்...உங்கள் முன்பே சிகண்டி கையில் மாட்டிய விலங்கை எடுத்து விடுகிறோம்...

(சபை கலைதல்)

(திரை விழுதல்)

காட்சி 3

இடம் : கல்யாண மண்டபம். காலம் : காலை நேரம் பாத்திரங்கள் : சிகண்டி, ஸ்வர்ணமாலா, ஸதானந்தர், அரசன், இதர ஜனங்களும், அரச சிப்பந்திகளும், கலைஞர்—வீரர்களும்—

(வாத்தியங்கள் முழங்க, மந்திரங்கள் ஒலிக்க ஸ்வர்ணமாலா வருத்தத்துடன் விசித்துக்கொண்டே கண்ணீர் மல்க சிகண்டிக்கு மாலையிட, சிகண்டி அவள் கழுத்தில் தாலி கட்டுகிறார்)

சபையோர்கள் : சிகண்டிக்கு ஜே! ஸபாஷ்...சிகண்டி வாழ்க! (பலகுரல்களில்) அவர் மனைவி நீடூழி வாழ்க!

(ஸ்வர்ணமாலா அழுது விம்முகிறாள்)

ஸதானந்தர் : (மகளிடம்) ஸ்வர்ணா! அழாதேயம்மா...(அவரும் கரகரத்த குரலில் கண்ணைத் துடைத்துக்கொண்டு) வருத்தப் படாதேயம்மா...ஸ்வர்ணமாலா...

சிகண்டி (குரல் சற்று மாறியவராக) : சபையோர்களே! உங்கள் முன் ஒரு சமாசாரம்...இந்த யுவதி ஸ்வர்ணமாலா கலை சாஸ்திரங்கள் அனைத்தும் தன் தகப்பனைப்போல் கற்றறிந்த மேதை என்பதை யாரும் மறுக்க முடியாது. அவ்வளவு மேதையாக விளங்கியும் அகம்பாவமென்பது அவள் மனோபாவத்தில் வேரூன்றி அவள் சுபாவத்தை மாற்றி அறிவையே மங்கச்செய்து விட்டது.

"கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அரெனின்"

என்ற வள்ளுவர் வாக்குப்படி படித்தும் பரமனுக்குப் பணியாத பண்பு பலனற்றது. அனுபவ மற்ற அறிவானது உருவற்ற சிலைக்கு சமமானது...மடமையால் இந்த மடந்தை கொண்ட மமதை இப்போது மடிந்துவிட்டது. அறிவு அதிகமாயிருப்பினும் அடக்கமென்பதுதான் அனைவருக்கும் அணிகலம்...ஆடம்பரமும் விளம்பரமும் அறிவாளிகளுக்கு அருகதை இல்லை. ஒளி மிகுந்திருக்கும் இடத்தை விளக்கைக் கொண்டா தெரியப்படுத்தவேண்டும்?

இம்மடந்தையின் அகந்தைக்கு உடந்தையாக இருந்தது அவள் தந்தைதான் என்றால் அது விந்தையல்லவா? அதற்காகத்தான்நான் இந்தத் தந்திரம் செய்தேன்...என் ரகசிய குருநாதரின் மந்திர தந்திர ம...மையால் என் உருவத்தையே உருக்குலைத்து அருவமாக்கிக்கொண்டு சிகண்டியின் அவதாரம் எடுத்தேன்...குரலை மாற்றிக் கொள்ளவும், வயோதிகத்தை முகத்தில் வரவழைத்துக்கொள்ள

வும், பச்சைக் குத்திக்கொண்டு அதை அழித்துவிடவும், அவரளித்த மூலிகைகளை உபயோகித்து 'சிகண்டி' என்ற பெயரில் இந்த குரூபி வேஷம் எடுத்து நடித்தேன்...இவை எல்லாவற்றிற்கும் மாற்றும் வைத்திருக்கிறேன்...நேற்று மாலை இருந்த மங்கிய ஒளியில் நீங்கள் ஒருவரும் என்னை லகுவில் கண்டு கொண்டிருக்க முடியாது...இப்போது என்னையே சற்றுநேரம் உற்றுக் கவனியுங்கள்...இந்தப் பொய்த்தாடி மீசையையும் எடுத்துவிட்டு, இந்தச் சிம்புகளையும் உதறியெறிந்துவிடுகிறேன்...இதோ பாருங்கள் எனது பூரணமான காலை...உண்மையில் நான் நொண்டியல்ல...இப்போது நான் யாரென்று நன்ருய்த் தெரிகிறதா?...

சபையினர் : (ஒரே ஆச்சரிய மிகுதியில் ஆ ர வா ர ம்)... ஆஹா...மஹாராஜ மார்த்தாண்ட மன்னரல்லவா...எ ன் ன தேஜஸ்...என்ன அழகு...ஜெயமங்களபுரி சாம்ராஜ்யத்தின் சக்ர வர்த்தியல்லவா...அவர் ஆட்சியில்தான் என்ன நீதி, நேர்மை... ஆஸ்தான கவிவாணராயிருந்தாலும் அகம்பாவத்துக்கோ அநீதிக்கோ அணுவளவும் இடம் கொடுக்காத தன்மை எத்தகையது...

சபையில் ஒருவன் : அரசனுக மட்டும் இல்லாமல் நம் போன்ற சாதாரண கலைஞனுகவோ, வீரனுகவோ இருந்திருந்தால் அந்த மூன்ருவது கேள்விக்கு விடையளித்திருக்கமுடியுமா?

மார்த்தாண்டன் : என்ன ராணி ஸ்வர்ணமாலாதேவி! நன்ருய் நேராய் நிமிர்ந்து என்னைப் பார்க்கலாம்...இப்போது சிகண்டியல்ல நான். சாக்ஷாத் மன்னன் மார்த்தாண்டதேவன்...உன்னை மனைவியாக்கிக்கொள்ள நான் மன்னனுயிருந்தும் விலங்கு மாட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது......

ஸதானந்தரே!...அமைச்சரே!... என்ன...ஏன் இப்படி எல்லாரும் ஒரேயடியாய் மலைத்து ஸ்தம்பித்து அசந்து நின்று விட்டீர்கள்? இன்னும் சந்தேகம் தீரவில்லையா? கண்ணைத் துடைத்துக் கொண்டு சரியாய் என்னை மீண்டும் கவனித்துப் பாருங்கள்!

அமரசிம்ம! நான் அன்று சபை முடியும்போது "எல்லாவற்றையும் நன்ருய்க் கவனித்துக்கொள்ளுங்கள் என்று சொன்னதன் குறிப்பை இப்போதாவது புரிந்துகொண்டீரா? சரியானபடி அந்த மூன்ருவது கேள்வியை அமைத்தீரே, அதற்கு உமது புத்திசாலித்தனத்தையும், திறமையையும் வெகுவாகப் பாராட்டுகிறேன் என்னை ஐந்தாம் படை ஒற்றன் என்று கைது செய்யக் கையாண்ட உமது சமயோசித சாதுர்யத்தையும் மிகவும் மெச்சுகிறேன்...

ஸதானந்தரே! சற்று இருங்கள்...எனது வேஷத்தை நன்ருய்க் கலைத்துவிட்டு எனது உடுப்பை மாற்றிக்கொண்டு சுயரூபத்துடன் வருகிறேன். (உள்ளே போகிருர்

ஸ்வர்ணமாலா : (மகிழ்ச்சி பொங்க) ஹா...ம் அ...ப்...பா!...இப்போதுதான் எனக்கு உயிர் வந்தது...என் பாக்கியமே பாக்கியம்...

ஸதானந்தர் : ரொம்ப சிலாக்கியமான வரனல்லவா !

அமரசிம்மன் : (விளையாட்டுச் சிரிப்புடன்) ஹே!...புலவரே!... இப்போது ரொம்ப யோக்கியமாகப் பேசுவீர்...அதோ...மஹாராஜா...வந்துவிட்டார்...பார்த்தீரா...அவர் செய்த...தந்திரத்தை...எனக்குக் கூடச் சொல்லாமல்...

ஸதானந்ரிர் அதுவும் ஒரு ராஜதந்திரம்தான்...

ஸ்வர்ணமாலா : அமைச்சரே? கலை, சாஸ்திரங்கள், ராஜ நிர்வாகம்தான் அரசருக்குத் தெரியுமென்று நினைத்தேன்...அவர் ஒரு பிரதம நடிகர் கூட என்று இப்போதுதான் தெரிந்துகொண்டேன்... (ராஜா அலங்காரத்துடன்

(மன்னர் பிரவேசம்)

மார்த்தாண்டன் : அமரசிம்ம!...ஸதாநந்தரே!...பிறகு எல்லாம் சாவகாசமாகப் பேசிக்கொள்ளலாம்...முதலில் வைதீகச் சடங்குகள் நடந்து முடிந்தபின் தெய்வ ஆராதனை நடக்கவேண்டும்...துரிதப்படுத்துங்கள்.

ஸதானந்தர் : ஸ்வர்ணமாலா!...இப்படி வா...அம்மா...மஹாராஜாவுக்கு இந்த மாலையைப் போட்டு நமஸ்காரம் செய்து அவர் வலக்கரத்தைப்பற்றிக்கொள்...

சபையோர்கள் : ராஜா மார்த்தாண்ட மன்னனுக்கு ஜே!

ராணி ஸ்வர்ணமாலா தேவிக்கு ஜே!

ஜெயமங்களபுரிக்கு ஜெயமும் மங்களமும் உண்டாகட்டும்!

ராஜ தம்பதிகள் நீடூழி வாழ்க!

(மணி வாத்தியங்கள், நாதஸ்வரஇசை முழங்க திரை விழுதல்)

அசோகா சுகந்த பாக்குத்தூள்

போதை......

[அங்கமங்கலம் குப்பு]

மதுரமான தென்றலே!
மதுரமான தென்றலே!
மதுரம்போலும் இனிமைதந்த
வகையெனக்குச் சொல்லுவாய்!

தென்றல்

மதி நிறைந்த மனிதனே!
மதி நிறைந்த மனிதனே!
மானிலத்தின் மங்கையர்தம்
வதனமுத்தச் சுவையது.

மணம் மிகுந்த மலர்களே!
மணம் மிகுந்த மலர்களே!
மனத்தைத் தந்து மானிலத்தை
மகிழவைப்ப தெங்ஙனம்?

மலர்கள்

குணம் நிறைந்த மனிதனே!
குணம் நிறைந்த மனிதனே!
எனது நண்பன் தென்றல் தந்த
இன்பமுத்தச் சுவையது.

துள்ளியாடும் ஆழியே!
துள்ளியாடும் ஆழியே!
துள்ளித்துள்ளி யாடுகின்ற
சூட்சமத்தைச் சொல்லுவாய்!

ஆழி

கள்ளமில்லா மனிதனே!
கள்ளமில்லா மனிதனே!
ஒள்ளிய வெண்கதிர் மகளே
முத்தமிட்ட போதைதான்.



நோய்க்கிடங்கொடேல்

நம் இந்திய நாட்டில் மக்களின் பெருக்கத்தாலும் வாழ்க்கைத் தரக்குறைவாலும் வறுமை மிகுந்து வாடுவோர் பலர். இவர்களில் பலர் பல்வேறு காரணங்களினால் நோய் வாய்ப்படுகின்றனர். மருத்துவர்களை நாடி சிகிச்சை பெறச் செல்வநிலை இடங்கொடுப்பதில்லை. செயலுள்ளவர்கள் சிகிச்சை பெற்றாலும் அற்பநோய்க்கும் மிகுந்த பணச் செலவு செய்ய நேரிடுகிறது. இவர்கள் "சுண்டைக்காய் காற்பணம் சுமைகூலி முக்காற்பணம்" என்ற பழமொழிக்கு இலக்காகிறார்கள்.

ஏழை, பிரபு என்று தாரதம்மியமின்றி பாதிக்கும் சில அற்பநோய்களுக்கு மருத்துவர்களின் உதவியின்றி மக்கள் தாங்களாகவே ஔடதம் தயார் செய்து சாப்பிட்டுக் குணப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது என் இருபது வருட வைத்திய முறையின் அனுபவ பூர்வமான உண்மை. அம்முறைகளில் சிலவற்றை இச்சஞ்சிகை வாயிலாக மக்களுக்கு உதவி தொண்டு செய்யவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் எழுதத்துணிந்தேன்.

பொதுவாக அநேகம் வியாதிகள் மக்களுக்கு வாய், பற்கள், நாக்கு இவற்றின் அசுத்தத்தாலேயே ஏற்படுகின்றன. இப்படி ஏற்படும் வியாதிகளைத் தடுக்க அவற்றைச்

சுத்தமாக வைத்து கொள்ளவேண்டுமென்ற உணர்ச்சி மக்களுக்கு ஏற்படவேண்டும். பற்களைச் சுத்தமாக வைத்துக்கொண்டால் பல நோய்களைத் தவிர்க்கலாம். என் அனுபவத்தில் கண்டமுறை பின் வருமாறு :—சோம்பு, லவங்கம், கடுக்காய்த்தோல்' படிக்காரம்' இந்துப்பு, சமையல்சோடா உப்பு, (Soda bicarbonate) கொட்டைப்பாக்கு; இவற்றைச் சமனெடை எடுத்து இடித்துப் பொடித்துச் சலித்து வைத்துக்கொண்டு சமனெடை உமிக்கரி தயார் செய்து கலந்து அத்துடன் மொத்தப் பொடியில் $\frac{1}{54}$ பாக அளவு சூடத்தை பொடித்துச் சேர்த்து காற்று புகாத டப்பாவில் வைத்துக்கொள்ளவும். தினமும் காலை இரவு இருவேளைகளிலும் இப்பொடியை உபயோகித்துப் பல் துலக்கி வந்தால் பல நோய்கள் வராது என்பதில் ஐயமில்லை.

—R. Krishnamurthy. L. I. M.

FASHION HOME

Pro: M. U. VARGHESE & BROS

Govt. Diplomaed Dress Makers

4-A Whannels Road, Egmore, Madras.

MAKE

Smash-hit Personal Appearances!
Never before such enduring beauty!
Never before such princely comfort!
At a charge so unbelievably low!

Dealers in:

B & C Mills Products & artists in making dresses to measurement & taste

புரந்தரதாஸர்

இவர் கர்ணுடக பிராஹ்மணர். மத்வ மதத்தவர். கன்னட பாஷையில் சிறந்த பண்டிதர். பக்த சிகாமணி. இவர் ஆதியில் புணவில் சாவுகாராக கோடீஸ்வரராயிருந்து பாண்டுரங்க விட்டலரின் பக்தி யதிசயத்தினுல் விரக்தியடைந்தவராய் மகா பக்தராகி ஸங்கீத ஸாஹித்யங்களில் தேர்ந்த ஞானத்தையடைந்து அந்தந்த சந்தர்ப்பங்களில் இயற்றிய கீர்த்தனங்களால் ஸ்ரீ பாண்டுரங்க விட்டலரின் ப்ரீதியைப் பெற்ருர். இப்பொழுது வழக்கத்திலுள்ள ஸரளி வரிசைகள், அலங்காரங்கள், பிள்ளையார் கீதங்கள் முதலியவை இம் மகானுபாவரால் ஏற்படுத்தப் படடவையே. ஆழ்வார்கள் அருளிச் செய்த திருவாய்மொழி என்ற தமிழ்ப் பிரபந்தத்தை ஸ்ரீ வைஷ்ணவ பிராஹ்மணர்கள் எப்படி ஸந்நிதிகளில் ஸேவிக்கிருர்களோ அவ்விதமே மத்வ மத மடாதிபதிகள் தங்கள் தங்கள் ஆஸ்தான தேவதைகளின் ஸந்நிதிகளில் புரந்தரதாஸரின் கிருதிகளைப் பாடி அனுசந்தானம் செய்யுமாறு ஏற்படுத்தியிருப்பதை இன்றும் காணலாம். இவரால் இயற்றப்பட்ட ஸுளாதிகள் அனந்தம். இவருடைய கீர்த்தனங்களுள் பல வேதாந்த விஷயமானவை. இவருடைய கீர்த்தனைகள் எத்தனை என்று கூறுவது அசாத்தியம். புரந்தர விட்டலர் அஹோபலருடைய காலத்துக்குமுன் வாழ்ந்து வந்திருக்க வேண்டும், இவருடைய ஸங்கீத ஸாஹித்ய பிரபந்தங்களின் தோரணை ஸுளாதிகளிலிருந்து தெளிவாக விளங்குகிறது.

ராமதாஸர்

இவர் நியோகி பிராஹ்மணர். கஞ்சல்ல குலத்தில் பிறந்தவர். கோபனமாத்யரின் குமாரர். ஸங்கீத ஸாஹித்யங்களில் நிபுணர். இவர் பத்ராசலம் தாலூகாவுக்கு தாசில்தாராகவிருந்து ஸ்ர்க்கார் பணத்தையெடுத்து பத்ராசலம் ஸ்ரீ ராம பத்ரனின் ஆலயத்தை ஜீரணோத்தாரணம் செய்ததன்றி பாகவதர்களாகிய பிராஹ்மணர்களுக்கு திருப்தியாக தினமும் போஜனம் செய்வித்து, ஸ்ரீ ராமன் விஷயமாக அநேக கீர்த்தனங்களை யியற்றி பாகவதர்களுடன் எப்பொழுதும் பஜனை செய்துகொண்டு தன்னை மறந்திருந்தனராம். இதை யறிந்த நவாப் இவரைச் சிறையிலிட்டு பன்னிரண்டு வருஷ காலம் நிர்ப்பந்தப்படுத்தினுராம். கருணைக் கடலாகிய ஸ்ரீ ராமபத்ரன் மனமிரங்கிலக்ஷ்மணனுடன் வேலையாட்கள் வேஷத்தையடைந்து அர்த்த ராத்திரியில் நித்திரை செய்து கொண்டிருந்த நவாபை எழுப்பி ராமதாஸ் செலுத்த வேண்டிய திரவியங்களைச் செலுத்திவிட்டு மறைந்தார். தெலுங்கில்இவரது கீர்த்தனங்கள் பல உள்ளன.

மூலம் :— ஸ்ரீ ஸுப்பராம தீக்ஷிதர் இயற்றிய இயலிசைப் புலவர் வரலாறு என்ற தெலுங்கு நூல். தமிழாக்கம்: தி. ஸ்ரீ பார்த்தஸாரதி.

புற்றுநோய்

புற்றுநோய் எவ்வளவு தீவிரமாக பொதுமக்களிடையே பரவியுள்ளதோ அந்த அளவிற்கு புற்றுநோயைப் பற்றிய தகவல்கள் பரவக்காணோம். முன் காலத்தில் புற்றுநோயால் பீடித்தவர்கள் பிழைப்பதே அரிது. ஆனால் இப்பொழுது இந்த நோயை குணமாக்கும் விஞ்ஞான முறைகள் பல இருக்கின்றன.

மத்திய சர்க்கார் ஆதரவில் தொத்துநோய்தினம் கொண்டாடுவது வழக்கமாயிருந்து வருகிறது. புற்றுநோய் வியாதியஸ்தர்களனைவரும் வியாதி குணம் அடையமுடியாத உச்சநிலையை யடைந்த பின்னரேதான் டாக்டரிடம் செல்லுகிறார்கள். புற்றுநோயால்பாதிக்கப்பட்ட பலரும் மரித்துப் போவதற்கு இதுவேதான் காரணம்.

டாக்டரிடம் சென்று ஒரு நோயைப்பற்றி ஆலோசிப்பதற்கு யாவரும் தயங்குவது சகஜம். இதைத் தவிர டாக்டரிடம் சென்றால் அவர் இவர்களுக்கு ஏதாவது பெரும் நோய் இருப்பதாகச் சொல்லவும் ஆதலால் பெருஞ்செலவும் மனக்கிலேசமும் ஏற்படுமோ என்ற பயத்தாலும் அநேகர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். நீண்ட கால சிகிச்சையும், அதை யொட்டிய செலவும் சிரமும் அநேகரால் தாங்க முடியாதல்லவா? ஆனால் எவ்வளவோ பணச் செலவு செய்தும் எவ்வளவோ பாடுபட்டும் பாதுகாக்க வேண்டியதல்லவா மனிதனின் உயிர்? இதை உத்தேசித்துத்தான் மத்திய சர்க்கார் சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிர்தகௌரி, "ஒரு நோயாளி புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருக்கிறான் என்று டாக்டர்கள் சந்தேகித்தவுடன் அந்தச் சந்தேகத்திற்கு உண்மை காரணம் உண்டா என்பதை தெளிவாக ஆராய்ச்சி செய்ய வேண்டும். சத்ரசிகிச்சை மூலமும் கிரணங்கள் சிகிச்சை மூலமும் இந்த நோய்க்கு விமோசனம் கிடைக்கலாம் என்ற நிலைமை வந்துவிட்டது.

ஐக்கிய நாடுகளில் இந்நோயைப் பற்றியும் இவற்றின் சிகிச்சை முறைகளைப்பற்றியும் ஆராய்ச்சி தீவிரமாய் நடந்து கொண்டிருக்கிறது. பொதுமக்களின் ஆதரவாலும் உதவியினாலுமட்டுமே இந்த ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. ஆனால் இந்தியாவில் இம்மாதிரி முயற்சிகள் யாவும் சர்க்காரேதான் கைக்கொள்ள வேண்டியிருக்கிறது. டாட்டா கம்பெனிபோல் சில தனிப்பட்ட ஸ்தாபனங்கள் மட்டுமேதான் ஆராய்ச்சி பணிக்குச் சிறிது உதவியளித்து வருகிறது. சர்க்கார் ஆதரவில் புற்றுநோய் ஆராய்ச்சி நிதி என்ற

ஸ்தாபனம் பம்பாயில் பணியாற்றி வருகிறது. சென்னை நகரத்தில் இந்திய மாதர் சங்கத்தின் ஆதரவில் இம்மாதிரி ஒரு ஸ்தாபனம் அமைந்துள்ளது.

புற்றுநோயைப் பற்றியும் இன்னும் பொதுமக்களுக்குத் தெரிய வேண்டிய முக்கியமான ஒரு தகவல் என்னவென்றால் இந்த நோயைப்பற்றிச் சிறிதேனும் பயங்கொள்ளக் கூடாதென்பதும் டாக்டரிடம் செல்ல சற்றும் தயங்கக் கூடாதென்பதுமாகும். இந்த நோயால் பீடிக்கப்பட்டவனென்ற உண்மை பிறருக்குத் தெரிந்தால் தன்னை ஏளனஞ் செய்வார்களென்ற பயத்தாலேயே அநேகருக்கும் இந்த நோய் எந்த சிகிச்சைக்கும் அடங்காத அளவுக்கு முற்றிப் போகிறது. நோயைப் பற்றியுள்ள தகவல்களனைத்தையும் பொதுமக்கள் கவனத்திற்கு வரும்படி நன்கு பிரசாரஞ் செய்வதே சர்க்காரின் முக்கிய கடமையாகும். இந்த நோயை அகற்றுவதற்குள்ள முயற்சிகள் உலகமெங்குமே நடந்து வருகின்றன. இந்த முயற்சிகளில் இந்தியாவும் பங்கெடுத்துள்ளது.

—With Acknowledgments to *The Hindu*.

சென்னை ஹைகோர்ட்டில் அக்காலத்தில் பிரபல சர்க்கார் பிராசிகியூட்டராயிருந்த கே. பி. எம். மேனனுக்கும் வெள்ளைக்காரப் பிரதம நீதிபதி பீஸ்லிக்குமிடையே பின்வரும் ஒரு சுவையான வாக்குவாதம் நடைபெற்றது.

ஒரு வழக்கு சம்பந்தமாய் ஆஜரான இந்த பிராசிகியூட்டர் மிகப் பருத்த சரீரம் படைத்தவர். இவருடைய வழக்கு நடந்துகொண்டிருந்த கோர்ட்டுக்கு இவர் சிறிது தாமதித்துச் சென்றார். வழக்கை விசாரித்துக்கொண்டிருந்த பிரதம நீதிபதி இவரிடம் "நீங்கள் அசைந்து கொடுத்து கோர்ட்டுக்கு வரும் வரை என்னால் காத்திருக்க முடியாது" என்றார்.

மேனன் உடனே "சிலருக்குத் தேகம் மெதுவாக அசைகிறது; சிலருக்கு மூளை மெதுவாக வேலைசெய்கிறது" என்றார்.

தனக்குவந்தால் தெரியும்!

க. சோமசுந்தரம்.

“என்ன பண்ணலாம்? நாம் வந்த வழி அது”

புலவருடைய காதல் மனைவி இறந்துபோய்விட்டாள். மனைவியின் பிரிவினால் வருந்திக் கிடந்தவருக்கு நண்பர்களும் உறவினர்களும் இப்படி அனுதாபம் காட்டினார்கள்.

“அவளை எப்படிப் பிரிந்திருப்பேன்” என்று அலறினார் புலவர்.

தாமும் மனையாளும் நடத்திய காதல் வாழ்க்கை புலவரின் மனக்கண்முன்னே ‘சினிமா’ படம்போல ஓடிற்று. ‘என்ன செய்வேன்? என்ன செய்வேன்? என்று முட்டி மோதிக்கொண்டார் புலவர்.

கொஞ்சிப் பேசி, அமுதளித்து, இன்பம் அளித்து உயிர் போல உடனுறைந்து வாழ்ந்த அவள் பிணமாகக் கிடந்தாள். புலவரோ அவளைப் பிரிந்த சோகத்தால் நடைப்பிணமாகக் கிடந்தார்.

உறவினர்களுக்கும் தெருவாருக்கும் அவசரம். எத்தனை நாழிதான் பிணத்தை நடுத்தெருவில், நடுவீட்டில் வைத்துக் கொண்டிருப்பது? அவர்கள் விரும்பினாலும் கூட காலமும் தேகமும் காத்திருக்காதே?

இழவுச் சங்கம் அழுதது புலவரைப்போல.

புலவரிடம் ஒருவர் வந்தார். தேறுதலாக, “என்ன செய்யலாம். நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். எழுந்திருந்து மேலே ஆகவேண்டியவற்றைக் கவனியுங்கள்,” என்றார்.

புலவர் ஒருவாறு தேறி எழுந்தார். பிணத்தருகே சென்றார். உரிய கடன்களை முடிக்கலானார்.

ஆனால், அவர் மனம், கண்கள் எல்லாம் உயிரற்றுக் கிடந்த அந்த தேகத்தின் மீதே பதிந்து போய்விட்டன.

கற்புடைய மாதரின் கூந்தல் வாசனை வீசும் என்பார்கள். அந்தக் குழல் கற்றை தன் இயல்பை இழந்திருந்தது.

அவருடன் அவள் பேசும் இனிமை; தேவருலகத்து அமுதமல்லவா அது? அவரை இன்பமூட்டிய அந்த அமுதகலசம்—வாய் — மௌனமாகிவிட்டதே!

புலவர் எங்காவது பரிசில் பெற வெளியூர் போவார். காதல் கருத்தை, கண்ணை நிரப்பலாம். வயிற்றையும் நிரப்பியாகவேண்டும் அல்லவா? அதற்காகத்தான். திரும்பி வரும் அவரை அவள் ஆசையோடு

நோக்கும் அந்த நோக்கம் இருக்கிறதே, அதை நினைக்க நினைக்கப் புலவரின் பிரிவுத்துன்பம் பலமடங்கு பெருகிவிட்டது.

'இத்தகைய பெரிய துன்பத்துக்காளாக நாம் செய்த தீவினை என்ன ?

புலவர் தம்மை மறந்து, சிந்தனையிலாழ்ந்து, சிலையாகிப் போனார்.

புலவருடைய துக்கம் அங்கிருந்த மற்றவர்களையும் பிடித்துக்கொண்டது. அவர்களில் ஒருவர், "இணை பிரியாதிருந்தார்கள். இனி எப்படித்தான் காலங்கழிக்கப் போகிறாரோ?" என்று உரக்கக் கூறிப் பெருமூச்செறிந்தார்.

"என்ன செய்வது? பிரமன் அப்படித் தலையிலெழுதிவிட்டானே!"

இது மற்றொருவரின் அனுதாபம்.

இதைக் கேட்டதும் அந்தத் துக்கத்தில் கூடப் புலவருக்குச் சிரிப்பு வந்தது.

அந்தச் சிரிப்பு துன்பம் கனிந்து மிஞ்சிப் போனபிறகு வரும் சிரிப்பு. வெறுப்பின் பயனாய் விளைந்த சிரிப்பு. சினத்தின் எல்லையில் நின்ற சிரிப்பு.

"பிரமன். நாவிலேயே மனைவியை வைத்துக்கொண்டு இணைபிரியாமல் இருப்பவனல்லவா? அவனுக்கென்ன தெரியும் பிரிவின் துன்பம்?" என்று துன்ப நகை புரிந்தார் புலவர்.

புலவரல்லவா? நகைப்பே பாட்டாகப் பரிணமித்துவிட்டது.

நறைஒழுகும் குழலாளை
அழுதொழுகு மொழி யாளை
நயன வேலின்
பிறைஒழுகு நுதலாளைப்
பிரிந்திருக்க இப்பிறப்பில்
பெரிதும் யான்செய்
குறை எதுவோ? மதன் கணைக்கு
மிகவருந்த எனைவிதித்த
கொடியோன் ஆன
மறையவனும் கலைமகளைப்
பிரிந்திருந்தால் தெரியும் இந்த
வருத்தம் தானே.

பிரிவின் வேதனையில் விளைந்த உணர்ச்சிகளை இதைவிட அழுத்தமாக—தெளிவாக வார்த்தைகளில் வடிப்பது எவ்வாறு?

அது மட்டுமல்ல. புலவரின் சோகத்தில் மற்றோர் ஆசையும் பிடிக்கிறது.

'பிரமன் கலைமகளைப் பிரிந்திருக்க வேண்டும், பிரிவுத் துன்பத்தை அனுபவிக்கவேண்டும். அப்பொழுதுதான் அவனுக்குத் தெரியும் விரகவேதனை, பிரிவாற்றாமை என்பது என்னவென்று. பின்பு......'

பாட்டை இன்னொரு முறை படித்துப் பாருங்கள். இந்தத் தொனிப்பொருள் தோன்றுகிறதா இல்லையா?

இந்த உருக்கமான கவிதையைப் பாடியவர் சுந்தர கவிராயர் என்பவர்.

மகத்தான தானம்

ஹரித்துவாரம் கும்பமேளா. அதற்கு வந்து, கங்கையில் நீராடிய கூட்டம் லட்சக் கணக்கு. அதிலே வைசம்பாயன யோகியும் ஒருவர். கும்ப மேளாவுக்கு வரமுடியாதவர் எத்தனையோ கோடி. அவர்களில் ஒருவன் தீனதயாளன்.

வைசம்பாயனர் கங்கையில் நீராடினர்; அயர்வு காரணமாகத் தூக்கம் வந்தது; அப்பொழுது ஒரு கனவு கண்டார்; அதிலே தீனதயாளன் பெயரையும் கிராமத்தையும் கேள்விப் பட்டார். விழித்த பிறகு நேரே அங்கு சென்று தீனதயாளனைக் கண்டார்.

உள்ளத் தூய்மையில்லாமல் கங்கையாடி என்ன பயன்? மேளாக்கூட்டம் பயன் பெறவில்லை.

எண்ணம் தூய்மை பெற்றிருந்தால் போதும்; ஹரித்துவாரம் செல்லவேண்டாம்; எண்ணிய உடனே அப்பயன் கிடைக்கும்.

நலிந்து வாடும் பயிர்களுக்கு, அது கண்டு வாடும் கால் காணி நில விவசாயிக்கு—உதவி கிடைக்கிறது. அது எதிர்பாராத உதவி. அதனல் அடையும் பயன், கும்பமேளாவில் கங்கையில் நீராடியடையும் பயனைவிட மேலானது.

கதையில் உள்ளபடி வைசம்பாயனர் தீனதயாளன் சம்பாஷணையைக் கேளுங்கள்.

"தீனதயாளா! நான் ஹரித்துவாரத்திலிருந்து வருகின்றேன்" என்று தம்மைத் தாமே அறிமுகப் படுத்திக்கொண்டார். ஹரித்துவாரம் என்ற சொல்லைக் கேட்டவுடன் ஆனந்தபாஷ்பம் பொங்கிற்று தீனதயாளனுக்கு. கங்காமாதா! கங்காமாதா! என்று கூறி அவன் வைசம்பாயனருடைய பாதத்தைத் தொட்டு வணங்கி "கங்கை செல்ல முடியாத பாபி யான். கங்கை சென்று வந்த உமது பாதத்தை ஸ்பரிசித்ததால் புனிதனுனேன்" என்ருன்.

"அல்ல, தீனதயாளா! இவ்வாண்டில் நீ ஒருவன்தான் உண்மையில் கங்கா ஸ்நானம் செய்தாயாம்! மற்றவர்கள் கங்கையில் குளித்தும் கர்ம பந்தம் நீங்கப் பெருத புல்லியராம். வான லோகத்து வித்யாதரருடைய வாக்கு இது. அது சரி. கங்கையில் இவ்வளவு பக்தி மிகுந்த நீ ஏன் கும்பமேளாவுக்கு வரவில்லை?" என்ருர் வைசம்பாயனயோகி.

"பெரியோய்! நான் பல ஆண்டுகளாக கங்கை செல்லும் ஆசையுடன் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்து இவ்வாண்டு கும்பமேளாவுக்குச் செல்லும்பொருட்டு வீட்டை விட்டுப் புறப்படவும் செய்தேன். நூறு ரூபாய் வழிச் செலவுக்காக எடுத்துச் சென்றேன். மறுநாள் இரவு நடுவழியில் இருந்த ஊர் ஒன்றில் திண்ணையில்

படுத்திருந்தேன். வீட்டுக்குள் புருஷன் மனைவியும் பேசிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. புருஷன் மனைவியிடம் தன்னுடைய கால் காணி நிலம் நீரின்றி வாடுவதையும் கிணற்றை ஆழப்படுத்த தன்னிடம் பணம் இல்லாதிருந்ததையும் அதன் பயனாகக் குடும்பம் பஞ்சததின் வயப்பட்டு நசித்துப் போகும் நிலையில் இருப்பதையும் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அந்தப் புருஷன் 'அன்று பகீரதன் விண்ணிலிருந்து மண்ணுக்கு கங்கை நதியைக்கொண்டுவந்தான். அந்தப் பகீரதனே இன்று நமது நிலத்துக்கு கங்கையைக்கொண்டு வந்தாலொழிய நமக்குக் கதிமோட்சம் இல்லை என்று கூறினான். அவன் பேச்சைகேட்ட எனக்கு மனம் பொறுக்கவில்லை. நீரின்றிப் பயிர்கள் வாடுவதும், ஒரு குடும்பம்பஞ்சத்தால் நாசமுறுவதும் பெருங் கேடுகள் அல்லவா? என்னிடமிருந்த நூறு ரூபாயை ஒரு பொட்டலத்தில் வைத்துச் சுற்றி "பகீரதன் தந்த பணம் —கிணற்றைத் தோண்டு— கங்கை பொங்கி வருவாள்" என்று அதன்மீது எழுதி ஜன்னல் வழியாக அந்த வீட்டினுள் எறிந்துவிட்டு ஊர் திரும்பினேன். கங்கா ஸ்நானத்தை இழந்தவனானேன்" என்றான்-

"தீனதயாளா? மனிதர் மதிப்பில் நீ கங்கை செல்லாதவன் தான். ஆனால் விண்ணவர் கணக்கிலோ நீ ஒருவனே கங்கையில் கும்பமேளா சமயத்தில் நீராடியவனாகின்றாய். உனது தானம் மகததானது. அது மிகப் புனிதமான ஸ்நானமேயாயிற்று" என்றார் வைசம்பாயனயோகி.

—தர்ம சக்கரம்.

எப்போதும் உற்சாகம் அளிப்பது
அசோகா சுகந்த பாக்குத்தூள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

இந்தியாவின் குருடர்கள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

"ஞானக் கண் உள்ளவன் இருட்டறையிலும் ஒளியை பெறுவான். அஞ்ஞானத்தால் நிறைந்தவன் நடுப்பகலிலும் இருட்டில்தான் தடவுவான்"

ஆங்கிலக் கவி.

இந்தியாவிலுள்ள குருடர் தொகை மிகப் பெரிய பிரச்னை யாகும். இவர்களது எண்ணிக்கை இருபது லக்ஷம்; அதாவது உலகிலுள்ள மொத்த குருடர்களில் ஐந்தில் ஒரு பாகம். ஒரு லக்ஷம் இந்தியர்களில் ஐநூறு பேர் குருடர்கள் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதை விட அதிகமாக எகிப்து நாட்டில்தான் குருடர்கள் இருக்கிறார்களென்பது நிபுணர்கள் அபிப்பிராயம்.

குருடர்களைப் பராமரிக்கும் பிரச்னை அசோக சக்கரவர்த்தி காலம் முதலே இந்தியாவில் இருந்து வந்திருக்கிறது. பிறவிக் குருடர்களான கவிகளும் பாடகர்களும் அநேகர் இந்தியாவில் தோன்றியுள்ளனர். 1887-ம் ஆண்டில்தான் குருடர்களுக்குப் போதிக்கும் பள்ளி இந்தியாவில் முதன் முதலில் தோன்றியது. இப்போது இது மாதிரி 80 பள்ளிக்கூடங்கள் இந்தியாவில் உள்ளன. இவை யெல்லாம் குருடர்களுக்கு இலவசமாக ஆரம்பக் கல்வி புகட்டும் பள்ளிகளாகும்.

சமீபத்தில் டேராடூன் நகரத்தில் குருடர்களைப் பாதுகாத்து அவர்களுக்குப் பல கலைகளைக் கற்றுக் கொடுக்கும் ஸ்தாபனம் ஒன்று ஏற்பட்டுள்ளது. குருட்டுக் குழந்தைகளுக்கு 'கிண்டர் கார்ட்டன்' முறைக் கல்வி, ஆரம்பக் கல்விப் பயிற்சி, அந்தச் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் 'செகண்டரி கிரேட்' கல்விப் பயிற்சி, முதிர்ந்தக் குருடர்களுக்கு போதனை முறைக் கல்விப் பயிற்சி, ஒரு தொழிற் சாலை. குருடர்களுக்கு ஆசிரியர் பயிற்சி இலாகா. குருடர்களுக்கென்று ஏற்பட்டுள்ள பிரத்தியேகமான எழுத்துகளில் அச்சிடும் அச்சாபீஸ், இந்தப்பிரத்தியேக எழுத்துக்களில் அச்சடித்த புஸ்தகங்கள் கொண்ட வாசகசாலை முதலிய வசதிகள் இந்த டேராடூன் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவை. இங்கு குருடர்களுக்குப் பயிற்சி இலவசம் தான். கல்வி கற்க வரும் குருடர்களுக்குச் சர்க்கார் செலவில் போஜனம், உடை, தங்க இடம், முதலிய யாவும் இலவசம்.

குருடர்களுக்கு இன்று இந்தியாவில் கிடைக்கும் கல்விப் பயிற்சி வசதிகளுக்குக் காரணம் பொதுஜனங்களின் முயற்

சியேதான். மத்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் இந்த முயற்சி வெற்றி பெறுவதற்குத் தேவையான பொருளாதார உதவியைச் செய்திருக்கிறார்கள். குருடர்களுக்குத் தர்மஞ் செய்வது மட்டுமேதான் நம் கடமை என்றே சமீப காலம் வரை இந்தியாவில் யாவரும் நினைத்துக் கொண்டிருந்தனர். இந்த அபிப்பிராயம் மாறி குருடர்களுக்கு சாதாரண மனிதர்களைப்போல் ஒரு கௌரவமான வாழ்க்கைக்கு உரிமையுண்டு என்ற கொள்கை பரவியிருக்கிறது. இந்தக் கொள்கை பரவி வருவதானல் குருடர்கள் ஏதாவது ஒரு தொழிலைச் செய்து அதன் மூலம் அவர்களுக்கு பிழைக்க வேண்டிய வசதிகளையும் அளிக்க வேண்டுமென்ற கொள்கையும் பரவிவருகிறது.

குருடர்களைப் பராமரிப்பதற்குரிய வழிகளைத் தேடுவதற்குச் சங்கங்கள் இந்நாட்டில் அநேக நகரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. குருடர்களை எப்படி பராமரிக்கலாம், குருடர்களுக்கு எப்படித் தொழில்களைக் கற்றுக் கொடுக்கலாம், கண் குருடு பொது மக்களிடையே ஏற்படாமலிருக்க வழிகள் யாவை, முதலியவற்றைப் பற்றித் தீவிரமாய் ஆராய்ச்சி செய்கின்றன இந்தச் சங்கங்கள்.

குருடர்களுக்குக் கல்விப் பயிற்சி, தொழிற் பயிர்சி அளிக்கும் ஸ்தாபனங்களுக்கு உபயோகமான கருவிகளின் இறக்குமதி மீது இந்திய சர்க்கார் சுங்க வரி விதிப்பதில்லை. இம்மாதிரி ஸ்தாபனங்களுக்கு குருடான மாணவர்கள் செல்வதற்கு ரயிலில் பிரயாணஞ் செய்ய சலுகைகள் உண்டு. குருடர்களுக்கென்று பிரத்தியேகமான எழுத்துக்களின் பிரசுரிக்கபபடும் புஸ்தகங்களுக்கு நீண்ட காலமாகவே தபால் கூலி சலுகை உள்ளது.

குருட்டு மாணவர்கள் உயர்தரக் கல்விப் பயிற்சி பெறுவதற்கு மத்திய சர்க்கார் 30 பேர்களுக்கு உபகாரச் சம்பளம் ஏற்படுத்தியுள்ளார்கள்.

உலகத்திலுள்ள குருடர்கள் எல்லோருக்கும் உபயோகமாகும் பிரத்தியேக அச்செழுத்தின் அமைப்பிலும் இந்தியா உதவி புரிந்துள்ளது. இந்தியாவிலுள்ள பாஷைகளுக்கெல்லாம் ஒன்று போல் உதவும் பிரெயில் அக்ஷரங்கள் (Braille) அமைத்துள்ளதே ஒரு பெரிய சாதனையாகும். இது மூலம் ஹிந்தியிலும் மற்றுஞ் சில இந்திய பாஷைகளிலும் குருடர்களுக்கு உபயோகமான அநேக புத்தகங்கள் டேராடூனிலிருந்து வெளிவந்துள்ளன. டேராடூன் ஸ்தாபனம்குருடர்களுக்குஉதவுமாறுள்ள சில விளையாட்டு முறைகளையும் பழக்கத்திற்குக் கொண்டு வர முயற்சித்துக் கொண்டு வருகிறது.

—*Book University Journal*

சீரழிக்கும் சினம்

●

மனிதனைப் பீடிக்கும் பயங்கரமான தொத்து வியாதிகள் யாவும்—நோயாளியுடன் சம்பந்தப் படுவதாலும்—அவனோடு நெருங்கிய தொடர்புகொண்டிருப்பதாலுமே மற்றவர்களைப் பீடிக்கின்றன. ஆனால் கோபமோ கண்கலால் காண்பதாலேயே பீடிக்கும் மிகப்பயங்கரமான ஒரு தொத்து நோய். ஒருவர் கோபமுடன் மற்றவரைக் கடிந்துகொள்ளுவதை நாம் வெகு எளிதாகக் காணலாம். மற்றவர் கோபமுடன் பேசுபவரைச் சில நிமிஷங்களுக்குள் எதிர்த்து அவருக்குச் சமமாகப் பேசி தீர்த்துவிடுவார். எனவே கண்களால் காணும்போதே பற்றிக்கொள்ளும் இந்நோயின் தன்மையை ஆராய்வோம்.

கோபம் எவவவுக்கெவ்வளவு வேகமாகப் பரவும் தன்மையுடையதோ அவ்வாறே பயங்கர விளைவையும் உண்டாக்கக் கூடியது. சுமார் ஒரு வருடகாலம் சிறைச்சாலைகளிலும் நீதிஸ்தலங்களிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட குற்றவாளிகளைக் கண்டு பேசி அவர்களின் குற்றப் பத்திரிகையை ஆராய்ந்ததில் 100 க்கு 90 பேர் கோபத்தினலேயே அவலநிலையை அடைய நேரிட்டது என்று தெரிகிறது, பெரும்பாலான கொலைக்குற்றங்கள் கோபத்தின் உச்சநிலையில் விளைந்த வினையேயாகும்.

தனி மனிதனின் கோபம் எப்படி சமூகத்தைப் பாதிக்கிறதோ அது போலவே அவனது உடலமைப்பையும் அது பாதிக்கும். சாதாரணமாக கோபம் கொண்டவரின் முகம் ரத்தமேறி சிவப்புறுவதையும்—மீசை படபடவென்று துடிப்பதையும் கைகால்கள் நிலையில்லாமல் தடுமாறுவதையும் காண்கிறோம். கோபம் கொள்ளும்போது இரத்தத்

தில் உள்ள ஏராளமான சர்க்கரைப் பொருள் எரிக்கப்படுகிறது. இதன் பலனாக சக்தி வீணாகி சோர்வு தட்டுகிறது. வயிறார உணவு உண்டபின் கோபம் கொண்டால்—உணவு ஜீரணமடையயாமல் வயிற்றில் வலி ஏற்படுகிறது. இதன் காரணம் ஜீரண உறுப்புக்களை இயக்கத் தேவையான சக்தி—இரத்தத்திலிருந்து கோபம் அடையும்போது எரிக்கப்பட்டு போதிய சக்தியின்மையால் ஜீரண உறுப்புக்கள் ஸ்தம்பித்து விடுவதேயாகும். மேலும் இரத்த அமுக்கத்தின் காரணமாக தலைவலியும்—சோர்வும் ஏற்படுகிறது.

கோபத்தின் தன்மையை ஆராய்ந்தோமானால் மனிதனின் மன அமைப்பு நமக்கு நன்கு விளங்கும். தான் நினைப்பதுபோல் மற்றவர்கள் நடக்கவில்லையென்ற எண்ணமும்—தான் பிறரைவிட உயர்ந்தவன் என்ற கர்வமுமே கோபத்தின் அடிப்படை. சிறு தவறுக்காக வெளியேற்றப்படும் வேலைக்காரன்—பரீக்ஷையில் தவறி தந்தையின் கோபத்துக்காகப் பயந்து வீட்டைவிட்டு ஓடும் மாணவன்—மூர்க்கமான மாமியின் கோபத்துக்கு நடுநடுங்கும் மருமகள்—போன்றோரை நாம் தினசரி வாழ்க்கையில் காண்கிறோம். எனினும் நாம் கோபத்தின் தன்மையை உணர்ந்தும் கோபம் கொள்ளுகிறோம்!

ஒருவனது கோபம் தன்னிலும் வலியர் மீது எழுந்தால் அது தனக்கே தீமையாகும். தன்னில் மெல்லியவர் மீது எழுந்தாலும் பாவமும் பழியும் விளையும். கோபத்தினால் முகமலர்ச்சியும் மகிழ்ச்சியும் கெட்டுவிடுகிறது.

திருவள்ளுவரும் கோபத்தினால் ஏற்படும் பலனை அழகான குறளால் விளக்குகிறார்.

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க. காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

—வி. ஆர். பாலன்.

ஜ்யாமகன்

["ஸ்ரீரா"]

●

பாகவதத்தில் 9-வது ஸ்கந்தத்தில் கார்த்த வீர்யார் ஜுனன் என்னும் மன்னவனது கதை வருகிறது. அந்த மன்னவன் 85,000 வருடங்கள் ராஜ்ய பரிபாலனம் செய்த தாயும், அவனை நினைத்த மாத்திரத்தில் கெட்டுப்போன வஸ்துக்களும் தானே அகப்படும் என்றும், பாகவதம் விசேஷணம் கூறுகிறது. அவனுக்கு ஆயிரம் பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் பெரும்பான்மையினர் பரசு ராமனுல் கொல்லப்பட்டார்கள். மிகுந்தவர்களில் ஒருவ னுடைய பரம்பரையில் சசிபிந்து என்னும் மகாயோகி ஒரு வன் தோன்றினுன். அவன் குணங்களால் சிறப்புற்று இருந்ததாக பாகவதம் கூறுகிறது. அவனுக்கு 10,000 மனைவிகள் இருந்ததாகவும், ஒவ்வொருத்தியினிடமும் அவன் லக்ஷம் பிள்ளைகள் வீதம் பெற்றதாகவும் சொல்லப் படுகிறது. அவர்களில் ஆறுபேர் பிரதானர்களாயிருந்தார் கள். இந்த அறுவரில் ஒருவனது பரம்பரையில் ஜ்யாமகன் தோன்றினுன்.

ஜ்யாமகனின் மனைவிக்கு சைப்யை என்று பெயர். அவனுக்கு அவளிடத்தில் ஸந்ததி ஒன்றும் உண்டாக வில்லை. இருந்தபோதிலும் அவன் வேருெரு மனைவியை மணக்கவில்லை; காரணம் அவனுக்கு அவளிடம் இருந்த பயம்தான்.

ஜ்யாமகன் சத்ருக்களை ஜெயிப்பதற்காக வெளியில் சென்ற காலத்தில் தன்னுடைய போகத்திற்காக ஒரு கன்னியைக்கொண்டு வந்தான். தலைநகருக்கு அவன் திரும்பி வந்தபோது சைப்யை ரதத்தை கவனித்தாள்.

அவளுக்குக் கோபம் வந்தது. அவள் கூறினாள்: "வஞ்சகனே, நான் உட்காரவேண்டிய இடத்தில் மற்றொருத்தியை எப்படி உட்காரவைத்துக்கொண்டனே?" மன்னவன் மிரண்டான். சிறிது யோசனை செய்து அவன் கூறினான். "இவள் உன்னுடைய நாட்டுப்பெண் என்று கொண்டு வந்தேன்." சைப்யை சிரித்தாள். "நானோ மலடி, எனக்குச் சக்காளத்தியும் கிடையாது. இவள் எப்படி எனக்கு நாட்டுப் பெண் ஆகமுடியும்?" என்று கேட்டாள் அவள். எனினும் சைப்யை அந்தப் பெண்ணை அங்கீகரித்தாள். அம்மன்னவனுடைய கஷ்டமான நிலையைக்கண்டு இரங்கிய தேவதைகள், அம்மன்னவன் கூறியபடியே ஆகட்டும் என்று நிச்சயித்தார்கள். காலப்போக்கில் சைப்யை ஓர் அழகிய புதல்வனைப் பெற்றாள். அந்தப் புதல்வனுக்கு வயது வந்தவுடன் அந்தப் பெண்ணை அவனுக்கு மணமுடித்தாள்.

பாகவதத்தில் வரும் அபூர்வமான கதைகளில் இதுவும் ஒன்று. வேடிக்கையான பாத்திரங்களை உண்டாக்கி, விநோதமான ஸம்பவங்களை நமக்கு இவை சித்திரித்துக் காட்டுகின்றன. இவை உண்மையா, பொய்யா என்று ஆராய்வது அவிவேகம். நமது புராணங்கள் மணி மணியான நீதிகளைத் தாங்கி இருந்த போதிலும் அவற்றை நேரடியாகக் கூறுவதற்குப் பதிலாக, இனிமையான கதைகள் வாயிலாக அவற்றை நமக்குப் போதிக்கின்றன.

கிறிஸ்தவ வேதப் புத்தகமான பைபிளில் "Thc Book of Ruth" என்று பழைய 'டெஸ்டமண்டி'ல் நான்கு அத்யாயங்கள் வருகின்றன. அதில் பிள்ளைகள் இறந்த பின்பு ஒரு மாமியார் தன் இரண்டு நாட்டுப் பெண்களையும் அழைத்துத் தன்னுடன் கூட்டிச் செல்வதாக ஒரு கதை வருகிறது "எனக்கு இனிமேல் பிள்ளைகள் பிறக்கப்போவதில்லை; நீங்கள் என்னுடன் வந்து யாரை மணம்

புரியப்போகிறீர்கள்? நான் அப்படியே மணம் செய்து கொண்டு பிள்ளைகள் பெறுவதனாலும், அவர்களுக்கு வயது வரும் வரையில் நீங்கள் காத்திருப்பீர்களா?'' என்று அந்த மாமியார் கேட்பது நம்மை உருக்கிறது.

நவீன கால இலக்கியத்தில் குணசித்திரங்களுக்கு முக்யத்வம் ஏற்பட்டிருப்பதால், இலக்கியத் துறையில் நமக்குப் புதிய அனுபவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பண்டைய இலக்கியங்களில் அழகான சம்பவ விவரணங்கள் (Narratives) நிரம்பி இருக்கின்றன.

மாலா

கலை, இலக்கிய மாதப் பத்திரிகை.

விலை 6 அணா

பிரதி மாதம் முதல் வாரம் வெளிவருகிறது

சிறந்த கதைகளும், கட்டுரைகளும்,
சினிமா செய்திகளும், படங்களும் வெளிவருகின்றன

விவரங்களுக்கு :—

மாலா

சதர்ன் அவின்யூ

ஆள்வார்பேட்டை, மதராஸ்-18

வாழ்கையும் பண்பாடும்

மனிதனுக்குப் பண்பாடென்பது விலை மதிப்பற்ற பொக்கிஷமாகும். விலங்கினின்று மனிதனை வேறுபடுத்தி அவனை உயர்த்துவது பண்பாடுதான். மனித இனங்களிடையேயுள்ள வேற்றுமைகளுக்கும் காரணம் பண்பாடுதான்.

மனிதன் தேவைகள் அவன் பிழைப்பை யொட்டியதோடு அறிவு உணர்ச்சி மூலமும் சில தேவைகள் ஏற்படுகின்றன. இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கமைந்துள்ள முறைகளே தான் பண்பாடென்பது. வாழ்க்கையில் வயிற்றுப் பிழைப்பு முக்கியமான ஒரு அம்சம்தான். அதனால்தான் பட்டினிக்காளாகியிருப்பவர்கள் முன்னால் கடவுள் உணவுமூலமே தோன்றுகிறார். வயிற்றை நிரப்பிவிட்டால் மனிதனின் உணர்ச்சி மற்ற விஷயங்களில் ஈடுபடுகிறது.

ஓய்வுள்ள மனிதனுக்குத்தான் பண்பாடு என்று ஒரு வசனமுண்டு. இதன் பொருள் என்னவென்றால் வாழ்க்கை வசதிகள் நிறைந்திருப்பவனுக்குத் தான் அறிவு உணர்ச்சி ஏற்படுமென்பது. அறிவு உணர்ச்சியும் அதனால் ஏற்படும் பண்பாடும் மனிதனால் சிருஷ்டிக்கப்பட்டவையாகும்.

அறிவு உணர்ச்சிக்கும் பண்பாட்டிற்கும் எல்லை வகுப்பது அவற்றைக் கொல்வதற்கொப்பாகும்.

வளரும் பண்பாடு ஓடும் நதிக்குச் சமானம். வயிறு உயிர்நிலை உறுப்புகளின் உணர்ச்சி, மூளை இம்மூன்றும்தான் மனித வாழ்க்கைக்கு முக்கியமான அம்சங்கள். இவற்றில் பண்பாட்டிற்குக் காரணம் மூளையே. கட்டுப்பாடுகளுக்கடங்காத ஒரு அம்சமாகும் மனிதனின் மூளை. அதனால்தான் மனிதனின் மூளையால் சிருஷ்டிக்கப்பட்ட பண்பாட்டிற்கும் கட்டுப்பாடுகளிருக்கக் கூடாதென்று கூறுவது.

அறிவுணர்ச்சி இல்லாமலோ, அறிவுணர்ச்சியிருந்து அதை நிறைவேற்ற வசதியில்லாமலோ உள்ள மனிதன் விலங்குக்குச் சமானம். பண்பாடுகள் பரவாமலிருப்பதற்குத் தடையாயுள்ள சுவர்கள் இவ்வுலகில் இருக்கும் வரையில் மனிதனுக்குத் துன்பமில்லாமல் வேறென்ன கிட்டும்?

அயல் நாட்டு சர்வாதிகார ஆட்சியிலிருந்து சமீபத்தில் மீண்ட ஆசியநாடுகளில் அநேக விதமான இடையூறுகள் ஏற்படலாம். இவற்றிற்கெல்லாம் ஒரே சஞ்சீவி நம் பண்பாடுதான்.

நம் பண்பாட்டில் திளைத்த தலைவர்கள் நமக்குக் கிடைத்தால் தீங்கொன்றும் நேரிடாது. ஏனென்றால் இவர்கள் வயிறு பிழைக்கும் வழியொன்றை மட்டும் நாடாமல் அவர்கள் மனத்திற்கும் சுதந்திரத்தையும், தன் மானத்தையுமளிக்கும் வழிகளையும் நாடுவார்கள்.

U. Ba Nyunt in *B.U.J.*

ஆசையுறும் இன்பம்

★

மாசி மதி வானேறி
மண் மீது பெய்யும்
ஆசைமழை வெண்ணிலவில்
அன்பமைதி நிலவும்!

பேசுமொழி யறியாது
பெண்வதனம் மலரும்
மாசு மருவற்றவர் தம்
மையலுடல் துள்ளும்!

பாசிமணி போல்நிலவில்
பைம்பொன் மணியாரம்
ஆசையலை யலைபாயும்
அமுதநிலை யோரம்!

தூசகலவோ சைமிகத்
துள்ளு மிரண்டுள்ளம்
நேசமுரை யாதவரின்
நெஞ்சுதுயர் கொள்ளும்

கூசியுரை யாடிமயல்
கூடிவெகு நாளாய்
வாசல்வழி பார்ப்பவர்தம்
வாதனைகள் நீளும்

நயனமுரை மோஹனமும்
நாயகன தன்பும்
அயனமுறும் நாயகியின்
ஆசையுறும் இன்பம்

—சாலிவாஹனன்

கலிசந்தாரண உபநிஷத்

இக்கலியுகத்தில் பரமனை எவ்வாறு அடைய முடியும் என்பதன் விளக்கம் தான் மேற்கூறப்பட்டுள்ள உபநிஷத்.

துவாபரயுக முடிவில் நாரதமுனிவர் பிரம்மாவிடம் சென்று "ஓ பிரம்மதேவனே! நான் உலகில் சென்று இக் கலியுக்த்தில் எவ்வாறு ஜீவராசிகளை கடைத்தேற செய்ய முடியும்'' என்று வினவினர்.

பிரம்மதேவர் "மஹரிஷே! கலி "பொதுவாகபகவானை ஆதி புருஷர் என்கிற நாராயணனுடைய நாமத்தை உச்சரிப்பதுமாததிரத்தாலேயே கலியை வெல்லலாம்'' என்றார்.

நாரத மஷரிஷி மறுபடி வினவினர். "அந்த நாமங்கள் யாவன?''

பிரம்மதேவன் கூறிய அவை பின்வருமாறு:-

ஹரே, ராம, ஹரே, ராம, ராம, ராம, ஹரே ஹரே ஹரேகிருஷ்ண, ஹரேகிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண ஹரே, ஹரே''

இந்த பதினாறு நாமங்களும் கலியின் தோஷங்களை நசிக்கச் செய்யும். இப்பதினாறு நாமங்களை உச்சரிக்கிற ஜீவன், மாசுகள் யாவும் தீர்ந்து பரமனைப்போலவே பிரகாசிக்கும் மேகம் போய் சூரியன் பிரகாசிப்பதுபோல்'' விளங்கும்.

நாரத மஹா முனிவர், மறுபடி வினவினர் "இவற்றை உச்சரிக்க ஏதேனும் விதி உண்டா?''

பிரமன் :— "விதியாதும் கிடையாது. எப்பொழுதும் சுசியாயிருந்தாலும் அசுசியாயிருந்தாலும் ஜபம் செய்யலாம். பரமனைக் காணலாம், அணுகலாம், அவனுடன் ஈடுபடலாம். இப்பதினாறு நாமங்களை ஒன்றரைக் கோடி தடவைகள் உச்சரித்தமாத்திரமே பிரம்மஹத்தி பாபத்தினின்றும் வீரஹத்தி பாபத்தினின்றும் ஏன், தங்கத்தை திருடின பாபத்தினின்றும்கூட மனிதன் நீங்குகிருன். பித்துருக்கள், தேவர்கள், மனுஷ்யர்கள், இவர்களுக்கு அபசாரங்கள் செய்திருந்தால் கூட அதினின்றும் நீங்குகிருன். எல்லா தர்மங்களைவிட்ட பாபத்தினின்றும் கூட மீண்டு சுத்த ஆத்மாவாக ஆகிவிடுகிருன். எவ்வித பாபத்தினின்றும் மீளுகிருன்'' என்ருர் பிரமன்.

—Rendered into Tamil by *Ikshvaku V. K. V. Achariar.*

பழமையில் மோகம்

"குச்சாமாமா"

(ஆரும் பாகம்)

ஒருவாரமாயிற்று. பார்த்த ஸாரதியிடம் திரும்பவும் வந்தார் பஞ்சாக்ஷரம். பார்த்த ஸாரதி இதற்குள் எப்படியோ மனத்தைத் திடப்படுத்திக் கொண்டுவிட்டான். பஞ்சாக்ஷரத்தைப் பார்த்ததும் வழக்கமான சிரிப்புடன் "என்ன ஆயிற்று விஷயம்" என்ருர்.

பஞ்: என்னத்தைச் சொல்ல! அங்குள்ளவர் எல்லோருமே விசித்ரப் பிருகிருதிகளாய் இருக்கின்றனர். நான் நேரில் சென்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தேன். ஒன்றும் வழிப்பட்டு வரவில்லை. ஒருவகை நியாயத்திற்கும் உட்படாதவரை என்னவென்பது?

பார்த்: பிறகு என்ன தான் செய்தீர்கள்?

பஞ்: பிறகு ஒரு நோட்டீஸ் அனுப்பினேன். எனது கக்ஷிக்காரர் டாக்டர் பார்த்தஸாரதி தன் மனைவியுடன் குடித்தனத்தை நடத்தவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது கோவிந்தாச்சாரியாரின் பொறுப்பாகு மென்றும், இவ்வேற்பாட்டைச் செய்து உதவும்படி என் கக்ஷிக்காரர் பல முறைகள் பலவிதத்தில் வேண்டியும் கோவிந்தாச்சாரியர் ஆவனசெய்யாது தன் கடமையை மறந்தது வருந்தத்தக்கதென்றும் என் கக்ஷிக்காரர் தனது வயது முதிர்ந்த தாயாரை ரக்ஷிக்கவேண்டி தாமதமின்றி குடித்தனத்தைநிறுவிவிட வேண்டியநிர்ப்பந்தமிருப்பதால் ராஜலக்ஷ்மியை உடனே அழைத்து வந்து பார்த்தஸாரதியின் வீட்டில் விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் நோட்டீஸில் குறிப்பிட்டேன்.

பார்த்: உம்......பிறகு.

பஞ்: அவ்வாறே ஸ்ரீமதிராஜலக்ஷ்மியம்மாளுக்கும் ஒரு நோட்டீஸ் அனுப்பினேன். அதிலும் மேற்சொன்ன விஷயத்தையே தான் எழுதினேன். விசேஷமாக மனைவி என்ற முறையில் உலக வாழ்க்கையை யொட்டி அவர்நடக்கவேண்டிய சில கட்டு திட்டங்களைக் குறிப்பிட்டும் கடமையை விளக்கியும் எழுதி இதுவரையில் பலதரமும் தட்டிக் கழித்ததைப் போல் செய்யாமல் இப்பொழுதாவது குடும்பத்தின் தலைமையை ஏற்று நடத்தும்படியும் நோட்டீஸில் வற்புறுத்தியிருந்தேன்.

பார்த்: (பார்த்தஸாரதி உணர்ச்சியற்றவனுய் இயந்திரம் போல்) "உம். பிறகு"

பஞ்: இருவரிடமிருந்தும் பதில் வந்தது. மறு தபாலிலேயே வந்தது.

பார்த்: ......

பஞ்: [தொடர்ந்து] கோவிந் தாச்சாரியார் எழுதுகிறார். தன் மகள் ஒருகடைச் சரக்கல்லவாம் இந்தா என்று எடுத்து என் கக்ஷிக்காரர் கையில் கொடுக்க. 25 வயதான, படித்த பெண்ணும். அவளாகவே மனமுவந்து தன் புருஷன் வீட்டிற்குச்செல்ல விரும்பினால் அதை வேண்டா மென்று தடுக்கத் தனக்கு அதி காரமில்லை என்பதை எப்பொ ழுதுமே தான் அறிந்தவராம். அவ்வாறேதான் நடந்துவந்துள் ளாராம். அதற்கு மாறாக நடக் கத் தனக்கு அதிகாரம் இல்லை யாம். அவ்விதஞ் செய்யுமளவிற் குத் தமது அறியாமை முற்ற வில்லை என்பதைத்தான் என் மூலம் எனது கக்ஷிக்காரருக்கு அறிவிக்க விரும்புகிறாராம். மற்றபடி என் கக்ஷிக்கார ருக்கு ஒரு வயதான தாயார் இருக்கிறாளென்பதை அவ ரறியமாட்டாராம். இருப்பது உண்மையாயின் கல்யாண காலத்தில் வந்திருப்பாரல்லவா? என்று மொட்டையாக முடித்து கர்னாடக பழக்க வழக்கங்களில் என் கக்ஷிக்காரருக்குள்ள மோகத்தை விட்டுவிடும் ஆலோ சனை சொல்லவேண்டிய என் கடமையை விளக்கியும் எழுதி "என் தந்தை குழித்தகிணறு" என்று சொல்லிக்கொண்டு அதன் உப்புத் தண்ணீரையே குடிப்பேன்" என்னும் பிடிவா தக்காரர்களான சில மடிஸஞ்சி களுக்குத் தமது அனுதாபங்கள் எப்பொழுதும் உண்டு என்றும், ஆனால் மற்றையோரும் அதையே குடிக்கவேண்டு மென்று நிர்ப்பந்திப்பது அம் மடிஸஞ்சிகளின் அறியாமை யையே பறைசாற்றுஞ் செய லாகுமென்றும் எழுதியுள்ளார்.

பார்த்: ......

பஞ்: ராஜலக்ஷ்மியம்மாள் எழுதியுள்ள பதிலும் அதே கருத்துக்கள் நிறைந்தது தான். இவருக்கு முன்சொன்ன மடி ஸஞ்சிகளின் பால் அளவு கடந்த வெறுப்புதான் உண்டென்றும், என் கக்ஷிக்காரரும் அவ்வகை மடிஸஞ்சிகளுள் ஒருவர் என் பதை வருத்தத்துடன் தான் அறிய நேரிடுவதாகவும், தனக்கு வெறுப்பை யூட்டும் கொள்கை யில் ஊறிய என் கக்ஷிக்காரரு டன் ஒருமனப் படும்படி தன்னை எதிர்பார்ப்பதே அறியாமை யின் எல்லையைக் கடப்பதாகு மென்றும், இதனாலும் வேறு காரணங்களாலும் என் கக்ஷிக் காரருடன் ஒரு கூரையின் கீழ் வாழ்வது தனக்கு அஞ்சத்தக்க கஷ்டங்களை விளைவிக்குமென்ற ஹேஷ்யங்கள் இருப்பதாகவும் ஆகவே தான் இனி இவ்வகை மடிஸஞ்சிகளைச் சீர்திருத்தும் ஆக்க வேலையில் ஈடுபட்டு பழ மையின் மோகத்தை யொழிப் பதையே தன் வாழ்க்கையின் இலக்ஷியமாக வேற்று அத் திருப்பணிக்காக உழைக்க தன் ஆயுட் காலத்தை அர்ப்பணித்து விட்டதாகவும், என் கக்ஷிக்கா ரரை அவரது மனத்திற்கிசைந்த படி வாழ்க்கையில் வேண்டிய

வசதிகளைச் செய்துகொள்வதில் தனக்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை யென்பதை என்கக்ஷிக்காரரிடஞ் தெரிவித்துவிட்டு அத்துடன் என் வேலை தீர்ந்துவிட்டதாக எண்ணி இந்த விஷயத்தையே மறந்துவிடும்படியும் எழுதி இருக்கிறார் என்று சொல்லி இதோ இரண்டு பதில் நோட்டீஸ்களும் என்று அவற்றைப் பார்த்தஸாரதியின் கையில் திணித்தார்.

பார்த்தஸாரதி சற்று நேரம் மௌனமாயிருந்துவிட்டுப் பிறகு கடகடவென்று சிரித்தான்.

பஞ் : என்ன ஸார் சிரிக்கிறீர்கள்?

பார்த் : ஒன்றுமில்லை. "நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது" என்று சொல்ல வந்த ஒரு ஹாஸ்ய நடிகர், இடையில் குறுக்கிட்டுத் தன்னை அதட்டிய எஜமானருக்குப் பயந்து "இல்லை இல்லை நாமொன்று நினைக்க அது ஒன்ருய் முடிந்ததே" என்று சொல்லிச் சமாளித்துக்கொண்டார். அந்தக்கட்டம் நினைவிற்குவரவே சிரிப்பும் வந்துவிட்டது.

பஞ் : வாஸ்தவத்திலேயே நீங்கள் ஒரு மாதிரி மனிதன் தான் போலிருக்கிறது. இந்த ஸந்தர்ப்பத்தில் உங்களுக்கு ஹாஸ்யத்தில் புத்தி போகின்றதே! அட முருகா! இதை என்னவென்பது.

பார்த் : வெறி பிடித்தவன் போல் பஞ்சாக்ஷரத்தின் இரண்டு கைகளையும் இறுகப் பற்றி தோள்களின் பூட்டும் நெகிழ்ந்துவிடுமோவென அஞ்சுமளவிற்குக் குலுக்கினுன். ஐயா! இவ்வளவு நேரம் நீங்கள் பேசியவற்ருல் எச்சிற்பட்ட உங்கள் நாக்கு கடைசியாக மூன்றெழுத்துதால் கடவுளின் நாமத்தைச் சொன்னதால் பரிசுத்தமாகிவிட்டது. இனி எச்சில் விஷயங்களைப் பேசுவதை விடுங்கள். மற்றும் அதே திருநாமத்தைக் கண்ணை மூடிக்கொண்டே மனத்தால் 108 தரஞ் சொல்லுங்கள். மனமும் பரிசுத்தமாகி நிம்மதியும் சாந்தியும் ஸந்துஷ்டியும் பிறக்கும். நம்மையும் மீறித் தலைக்கு மேல் பெருகும் வெள்ளத்தில் சிக்கியவருக்கு இவ்விதம் கடவுளின் திருநாமத்தை ஓதுவதுஞ் சிந்திப்பதும் தான் சஞ்சீவியாகும். இது பழமை. யார் எப்பெயரிட்டழைப்பினும் சரி, பழமையின் மேன்மைக்கு இவ்வொரு உதாரணமே போதும். இப்பழமையில் நான் ஸந்தோஷத்தையுஞ் சாந்தியையும் காணுகிறேன். இதில் எனக்கு மோகமிருப்பதற்காக நான் வருந்தவுமில்லை வெட்கப்படவுமில்லை. உங்களுக்கு இனியுஞ் சந்தேகமிருக்குமாஞல் நான் சொன்னது போல கண்களிரண்டையும் மூடிக்கொள்ளுங்கள். பிறந உதடு அசையாமல் மனத்திலேயே நீங்கள் வழிபடும் பரம்பொருளின் அம்' மூவ்வக்ஷத்திரத் திரு, நாமத்தைச் சொல்லிப் பிறகு

கண்ணைத்திறவுங்கள். உண்மை வெளியாகும். என்ன உண்மை? நான் சொன்ன அந்த 'அம்' என்ற அடை மொழிக்குத் திரு, ஸ்ரீ, அழகு மிக்க இன்பம் மிக்க, சுவை மிக்க. இனிய என்றெல்லாம் பொருள். உங்கள் நாக்கு தித்திக்கும். உங்கள் மனம் களிப்படையும். 'அம்' என்ற அடைமொழியின் பொருளுண்மை விளங்கும், என்று சொல்லிக் கொண்டே எழுந்து உள்ளே போய்விட்டான்.

★

இவ் விருத்தாந்தங்களைக் கேட்ட பார்த்தஸாரதியின் தாயார் அதிர்ச்சியுற்றுப் போனாள். ஐயோ! எனக்காக வேண்டி உதவி தேடிச் சென்ற என் மகன் இந்தச் சிரமத்திலகப் பட்டுக் கொண்டானே! என்று மிகவும் பிரலாபித்தாள். யாரைக்கண்டாலும் இந்தக் குறையையே தான் சொல்லுவாள். கண்டவரை எல்லாம் நீபோய் அவர்களைக் கண்டு ஸமாதானஞ் சொல்லி ஒழுங்கு படுத்தேன் என்று கெஞ்சுவாள். நான் ஒரு தரம் ராஜலக்ஷ்மியைப் பார்த்துப் பேசவேணும். என் கண்ணால் ஒரு தரம் அவளைப் பார்த்து என் வாயால் இரண்டொரு வார்த்தை சொல்லவேண்டும். அப்புறம் இந்த இடக்குகளெல்லாம் தீர்ந்துவிடும் என்று மற்றுஞ்சிலரிடஞ் சொல்லுவாள். என்னால் தானே என் மகனுக்கு இந்த இன்னல்களெல்லாம் விளைந்தன! என்னையேன் ஈசன் கருணை புரிந்து ஏற்கலாகாது? நான் போய்விட்டால் என் மகனாவது சுகப்படுவானே! என்பாள். இவ்வகை துயரங்கள் வயது முதிர்ந்த அவ்வம்மைக்குத் தினே தினே அதிகரித்து வந்து சுகத்தைக் கெடுத்து வீட்டினுள்ளேயே நடமாடவும் முடியாதளவு பலஹீனத்தையுமுண்டாக்கியது. காலக்கிரமத்தில் ஸ்நானம், போஜனம், இவற்றிற்கு மட்டும் எழுந்திருப்பாள். மலமூத்ர விஸர்ஜனங்களும் வீட்டு முற்றத்திலேயே, மற்றைய பொழுதெல்லாம் படுத்த படுக்கைதான். இவ்விதமாக ஒன்பது வருஷ காலம் ஜீவித்திருந்தாள்.

தன் தாயார் ஊரிலிருந்த தனது இல்லத்திலேயே இருக்க வசதி செய்து கொடுத்தான் பார்த்தஸாரதி. சிசுருஷைகள் செய்வதற்காகக் கைம்பெண்ணாகிவிட்ட அவனுடைய மூத்த ஸஹோதரியைத்தான் நிரந்தரமாக ஊரிலேயே வாஸஞ்செய்ய ஏற்பாடு செய்தான். அதனால் அந்த அம்மாளுக்கும் ஓரளவு ஆதரவு ஏற்பட்டது. இதைக்கண்டு வேறு சில நெருங்கிய பந்துக்களுக்குப் பொறாமை. தாமும் அவ்வாறு பராமரிக்கத் துடிப்பதாகச் சொல்லிக்கொண்டு ஊரில் பார்த்தஸாரதியின் தாயாரிருந்த வீட்டில் போய்ச் சேர்ந்தனர். இவ்வாறு கூடிய கும்

பல் ஒரு கல்யாண கும்பலாகி விட்டது. செலவைச் சமாளிக்க பார்த்தஸாரதி திணறிப் போனான். வந்து கூடியவர்கள் குடும்பத்தில் கல்யாணம், கார்த்திகை யென்ற விசேஷங்களெல்லாம் பார்த்தஸாரதியின் செலவில் அவன் தாயாரிருந்த விடத்தில்தான் நடக்கும்.

"என்ன செய்வது? ஸீமந்தம் என் நாட்டுப் பெண்ணுக்கு வந்திருக்கிறது. என் வீட்டில் சிறப்பாக நடத்த வேணுமென்று எனக்குக் கொள்ளை ஆசை. நாலுபேர் நமது பந்துக்களை வரவழைத்து மரியாதை செய்து அனுப்ப வேண்டும். ஆனால் என்னை விட்டு ஒருநாழிகை நீ போகக் கூடாதென்று அம்மா நிர்ப்பந்தமாகச் சொல்கிறாள். அவள் சொல்லைத் தட்டிவிட்டுப் போகவும் மனம் வரவில்லை. செய்வது என்னவென்று தெரியாமல் தவிக்கிறேன்'' என்பாள் ஒரு ஸஹோதரி.

"அதற்காக நீ கவலைப் படாதே. இதை உன் வீடாகவே பாவித்துக்கொள்: உனக்கு வேண்டிய ஸகல வசதிகளையும் உன்னிஷ்டம்போல் நான் செய்து தருகிறேன். உன் வீட்டில் செய்ய விரும்புவது போலவே இங்கு யாவற்றையும் நடத்திக்கொள். அம்மாவுக்கும் மனத்திற்கு ஸந்தோஷமாகுமே'' என்று சொல்வான் பார்த்தஸாரதி.

(தொடரும்)



GANZON BROS.

DRESS SPECIALISTS

3, Thope Street

TRIPLICANE, MADRAS - 5

★

Clothing Contractors to Government of India Supply Dept., Railways & Public Bodies, Ready - to - Wear - Garments Manufacturers and Exporters

★

In the hands of the Master - Tailors and Cutters of GANZON, Clothes acquire a subtle distinction beyond the power of imitation.

★

GANZONS have set standards of superb craftsmanship-Standards that have been the pride of the firm of Ganzons for over a quarter of a century.

ஈசுவர தரிசனம்

ஆகாயத்தில் அநேக நக்ஷத்திரங்களைக் காண்கிறாய். ஆனால், சூர்யோதயமானதும் அவை தென்படுவதில்லை; ஆதலால் பகற்போதில் ஆகாயத்தில் நக்ஷத்திரங்களே இல்லையென்று சொல்லலாமா? மனிதனே, உனது அஞ்ஞான காலத்தில் நீ ஈசுவரனைக் காணமுடியாததினால், ஈசுவரனே இல்லையென்று சாதிக்காதே!

★

பெறுதற்கரிய இம்மானிடப் பிறவியைப் பெற்றவன் இப்பிறவியிலேயே ஈசுவரனை அறிய முயலாது போனால் வீணில் பிறந்தவனே யாவான்.

★

ஆழமான கடலில் முத்துக்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றை எடுப்பதற்கும் ஒருவன் எல்லாவித ஆபத்துக்கும் துணியவேண்டும். கடலில் ஒரு தரம் மூழ்கியதில் உனக்கு முத்துக்கள் அகப்படாது போனால் அக்கடலில் முத்துக்களே இல்லையென்று தீர்மானித்துவிடாது, அடிக்கடி மூழ்கு; கடைசியில் உனக்குப்பலன் கிடைக்கும். உலகத்தில் ஈசுவர தரிசனமும் அப்படிப்பட்டதேயாம். அவனைக் காணவேண்டுமென்று நீ செய்யும் முதல் பிரயத்தனம் பயனற்றதாகுமானால் நீ அதைரியப்படக் கூடாது. அம்முயற்சியில் இன்னும் சிரமப்படு! முடிவில் நீ ஈசுவரனை நிச்சயமாகக் காண்பாய். நித்தியமாயுள்ள ஞானத்தையும் ஆனந்தத்தையும் பற்றித் தியானம் செய்! அப்போது உனக்கு ஆனந்தம் உண்டாகும்.

★

ஆனந்தமோ எப்பொழுதும் சாசுவதமானது; ஆனால் அஞ்ஞானத்தால் அது மூடப்பட்டு மறைந்துள்ளது, விஷய சுகங்களில் உனது ஆசை குறையுமளவுக்கு ஈசுவரனிடம் உனக்குப்பிரேமை அதிகமாகும். எண்ணெய் இல்லாது போனால் விளக்கு எரியாது; அதுபோன்று ஈசுவரனில்லாமற் போனால் மனிதன் ஜீவித்திருக்க முடியாது.

★

நீரும், நீர்க்குமிழியும் ஒன்றேயாம்; அக் குமிழி நீரிலேயே தோன்றி நீரிலேயே மிதந்து, கடைசியில் நீரிலேயே இரண்டறக் கலந்து போகின்றது. அதுபோல் ஜீவாத்மா, பரமாத்மா என்ற இரண்டும் ஒன்றேயாம்.

★

மனித ரூபமாக விளையாடுபவன் ஈசுவரனே. அவன் ஒரு செப்படி வித்தைக்காரன் போன்றவன். ஜீவன், ஜகத் என்ற மாயைத் தோற்றமெல்லாம் அவனுடைய பெரிய வித்தைகள். செப்படி வித்தைக்காரன் மட்டுமே உண்மை.

மனிதர்கள் தலையணையைப் போன்றவர்கள். ஒன்று சிவப்பாயும், மற்றொன்று நீலமாயும் வேறொன்று கறுப்பாயுமிருந்த போதிலும் அவற்றினுள்ளிருக்கும் பஞ்சு ஒன்றே. அது போலத்தான் மனிதனும். ஒருவன் பார்வைக்கு அழகாகவிருக்கிறான்; இன்னொருவன் கறுப்பாயிருக்கிறான். மற்றொருவன் பரிசுத்தனாகவிருக்கிறான் வேறொருவன் கெட்டவனாகவிருக்கிறான் என்றாலும், ஈசுவரன் அவர்கள் எல்லோருள்ளும் வாசஞ்செய்கிறான்.

★

வேக வைத்த நெல்லைப் பூமியில் விதைத்தால், அது மறுபடியும் முளைக்காது. வேகவைக்காத நெல்தான் முளைவிடும். அது போல சித்தனான பிறகு ஒருவன் இறப்பானானால் அவன் மறு ஜன்மம் அடைவதில்லை. அசித்தனே நான் சித்தனாகும் வரையில் திரும்பத் திரும்பப் பிறவி எடுக்கவேண்டும்.

★

சிவம், சக்தி ஆகிய இரண்டும் சிருஷ்டிக்கு அத்தியாவசியமானவை. உலர்ந்து போன களிமண்ணை வைத்துக்கொண்டு எந்தக் குயவனாலும் மண்பாண்டங்கள் செய்ய முடியாது. தண்ணீர் அதற்கு அவசியம் வேண்டும். அதுபோல, சக்தியினுடைய உதவியில்லாமல் சிவனால் மட்டும் சிருஷ்டித் தொழில் நடைபெறாது.

எண்பத்தேழு வயதிலும் விவாக மனு!

அமெரிக்காவில் சமீபத்தில் நடந்த ஒரு பிறந்த நாள் கொண்டாட்டத்தைப் பற்றி ஒரு சுவையான தகவல் கிடைத்திருக்கின்றது. இது ஒரு தாயாருக்கு ஒரே பிரசவத்தில் பிறந்த மூன்று பெண்களின் 87 வது பிறந்த நாள் கொண்டாட்டத்தைப் பற்றியாகும்.

இம்மூன்று மாதர்களின் பெயர்கள் முறையே, "விசுவாசம்" "தர்மம்" "நம்பிக்கை," என்பதாகும். இவர்கள் பிறந்த தினத்தன்று அநேக ஆயிரம் பேர்களிடமிருந்து ஆசிகள் வந்ததோடு அநேகர் 87 வயதான இந்த விதவைக் கிழவிகளை மணஞ்செய்து கொள்ளவும் தயாரென்று கடிதங்கள் எழுதினார்களாம்.

தொடர் நாடகம்:

மேவாரின் வீழ்ச்சி

[மூலம்: த்விஜேந்திரலால்ராயால் இயற்றப்பட்ட மிகப் புகழ்பெற்ற வங்க நாடகம்]

தமிழாக்கம்:

"பைங்காநாடு"

அஜய்: சொல்லுகிறேன். எப்படி வெறுப்பா? உன்னை அடைய முயற்சி செய்வது வீண் என்று நான் நினைத்தேன். நீ இந்த உலகப் பெண்மணி அல்ல. ஆனல் சுவர்க்கத்தின் தேவி. உன் ஆத்மாவின் தீவிர ஜோதியை உலகம் பொறுக்காது. இந்த எண்ணத்தால் கடவுள் இந்த அமிகான சரீரத்தை அந்த ஜோதியை மறைக்கும் சாதனமாகப் படைத்திருக்கிருர். ஆகாயம் நாடக மேடை. ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒவ்வொரு பவித்திரமான நாடகக்கதை. நிலவு நிர்மலமான, இனிமையான சங்கீதம். அந்த நாடகத்தின் நாயகி நீ. நான் உன்னிடம் அன்பைச் செலுத்துவதற்குத் தகுதியற்றவன். ஆம்! நான் உன்னிடம் பக்தியைச் செலுத்த முடியும். அந்தப் பக்தியின் பிரதி உபகாரமாக கொஞ்சம், மிகக் கொஞ்சம், கருணையை விரும்புகிறேன். என்ன? என் ஆவல் பூர்த்தியாகுமா?

[அஜயசிம்மன் இவ்வாறு சொல்லிக்கொண்டே மானஸியின் கரத்தைப் பற்றுகிருன். இதற்குள் ராணீ அங்கு வருகிருள்.]

ராணீ: அஜயசிம்மா!

[மானஸியின் கரத்தை விட்டு அஜயன் பின்னல் நகருகிருன்.]

ராணீ: அஜய்! நீ இம்மாதிரி தனிமையில் நம் பெண்ணுடன் பேசக்கூடாது.

அஜய்: மன்னிப்புக் கோருகிறேன்.

மானஸி: அஜய்! மன்னிப்பு எதற்கு?

ராணீ: ஞாபகமிருக்கட்டும். நீ ராஜ கன்னிகை, போ, உள்ளே போ.

[மானஸி செல்லுகிருள்.]

ராணி: அஜய்! நீ கோவிந்த சிம்மனின் மகன். உன்னை நாங்கள் எங்கள் வீட்டு மனிதரைப் போல் கருதுகிறோம். ஆனால் நீ இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மானஸி ஒன்றுமறியாத பெண். நீயும் ஒன்றும் புரியாத வாலிபன். இந்த எண்ணத்தை நினைவு படுத்திக்கொண்டு மானஸியுடன் சந்தித்துப் பேசு. எனக்குத் தெரிந்த வரையில் இந்த சமயத்தில் அவளைச் சந்தித்துப் பேசுவது முறையல்ல.

அஜய்: கட்டளைப்படி.

[அஜயசிம்மன் வணங்கிவிட்டுச் செல்லுகிருன்.]

ராணி: நான் நன்ருகப் புரிந்து கொண்டுவிட்டேன். அஜயனுடன் என் மானஸிக்குக் கலியாணம் நடந்தால் எவ்வளவோ நன்ருயிருக்கும். ஆனல் இது நடக்கக் கூடியதா? இல்லை. ஒரு பொழுதும் நடக்காது. ஆம்! நடக்கக்கூடாத விஷயத்தைப்பற்றி சிந்திப்பதில் என்ன பிரயோசனம்!

[ராணு அமரசிம்மர் வருகிருர்.]

ராணு: ராணி!

ராணி: மகாராஜ்! நான் தங்களிடம் வரவிரும்பினேன்.

ராணு: நீ மானஸியை ஏதாவது சொன்னயா?

ராணி: இல்லையே ஏன்? என்ன ஆயிற்று?

ராணு: அவள் அழுது கொண்டிருக்கிருள்.

ராணி: (திடுக்கிட்டு) அழுதுகொண்டிருக்கிருளா?

ராணு: போய்ப்பார். ஏன் அழுகிருள்?

ராணி: பைத்தியம். நான் அழும்படி என்ன சொன்னேன்? நீங்கள் உங்கள் பெண்ணைப்பற்றி கவனிப்பதே இல்லை. அவளுக்கும் ஒன்றும் தெரியவில்லை. அவள் சிறிது நேரத்திற்கு முன்பு அஜயனுடன்.........

ராணு: ஜாக்கிரதை! மானஸியைப்பற்றி கொஞ்சம் நிதானித்து பேசு. அவள் யார் என்று தெரியுமா?

ராணி: யார் அவள்?

ராணா: அவள் யார் என்று நாம் அறியமாட்டோம். இது வரை நாம் அவளை அறியவே சக்தியற்றிருந்தோம். ஒருவராலும் சொல்ல முடியாது. அவள் யார்? எங்கிருந்து வந்திருக்கிறாள் என்று.

ராணி: இருக்கட்டும் எனக்கு இந்தப் பக்கத்திலும் கெட்ட பெயர். அந்தப்பக்கத்திலும்..............அவள் எதற்கு அழுகிறாள் என்று போய் பார்க்கிறேன். மிகவும் கஷ்டப்படுத்துகிறாள்.

[செல்ல முற்படுகிறாள்.]

ராணா: இன்னும்......யார்.

[ராணி திரும்புகிறாள்.]

ராணா: இனிமேல் மானஸியை ஒன்றும் சொல்லக்கூடாது. சுவர்க்கத்தின் ஒரு கிரணம் கருணையுடன் இந்த உலகில் இறங்கி வந்திருக்கிறது. நீ ஏதாவது சொன்னால் அது திரும்பிச் சென்று விடும். (ராணி வெறுப்பை வெளிப்படுத்திக்கொண்டே செல்கிறாள். ராணா ஓர் உயர்ந்த ஆசனத்திலமர்ந்து ஆகாயத்தை உற்று நோக்கிக்கொண்டே சொல்கிறார்.) "இந்த வாழ்க்கை ஒரு கனவு. இந்த ஆகாயம் எவ்வளவு நீல வர்ணத்துடன் நிர்மலமாய் விளங்குகிறது. அதன் கீழே ஏராளமாக நீரைப் பொழியும் மேகங்கள் தண்ணீரைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு மெள்ள மெள்ள அசைந்து கொண்டிருக்கின்றன. இந்த மெள்ள அசைந்து வரும் அழகு எப்பொழுதாவது பயங்கரமான உருவத்தை எடுத்துக் கொள்கின்றது. வானத்தில் மேகங்கள் கர்ஜிக்கின்றன. பூமியில் மழை பெய்து பெருகுகிறது. அதற்குப் பிறகு எல்லாம் அமைதியாகவும் உறுதியாகவும் ஆகின்றன."

[கோவிந்தசிம்மன் வருகிறார்.]

ராணா: யார்? கோவிந்தசிம்மரா? இந்த சமயத்தில் திடீரென்று எப்படி வந்தீர்கள்?

கோ: மகராஜ்! மேவாரின் மீது மறுபடியும் படையெடுக்க புதுப்படை வந்திருக்கிறது.

ராணு: வந்துவிட்டதா? தேவரீர் ரத்தத்துடன் இந்தப் போர் முடிவடையாது என்பது நமக்கு முதலிலேயே தெரியும். முகலாயர்கள் ராஜபுதனம் முழுவதையும் அழிக்காத வரையிலும் சும்மாயிருக்கமாட்டார்கள்.

கோ: மகாராஜ்! நம் பக்கத்தில் இதுவரை ஒருவித ஏற்பாடும் நடக்காததற்குக் காரணம் என்ன?

ராணு: ஏன்? ஏற்பாட்டிற்குத் தேவை என்ன?

கோ: மகாராஜா போர் செய்ய மாட்டாரா?

ராணு: ஏன்? போர் புரிவதனல் என்ன ஏற்படும்?

கோ: அபபடியென்ருல் சீக்கிரம் முகலாயர்கள் மேவாரை கைப்பற்றிக் கொள்ளுவார்கள்.

ராணு: அவர்களுக்கு இவ்வளவு பிடிவாதமிருக்கும்போது இதில் என்ன செய்ய இருக்கிறது?

கோ: மகாராஜ் போரே செய்யப் போவதில்லையா?

ராணு: இல்லே. ஒரு தடவை நடந்தது. முடிந்துவிட்டது.

கோ: ஒருவித முயற்சி, எதிர்ப்பு ஒன்றும் செய்யாமலேயா?

ராணு: ஆனல் இதற்கெல்லாம் தேவை என்ன இருக்கிறது. எனக்குத் தெரிந்தமட்டில் இவைகள் எல்லாம் வீண்தான். தேவார் யுத்தத்தில் நம் படையில் பாதி அழிந்து விட்டது. இப்பொழுது முகலாயர்களுடன் போர் செய்ய படை எங்கு இருக்கிறது?

[ஸத்தியவதி வருகிருள்.]

ஸத்: மகாராஜ்! தரையைப் பிளந்துகொண்டு வரும் படையைப்பற்றி கவலேப்படவேண்டாம்.

ராணு: யார்? சாரணீயா?

ஸத்: ஆம் மகாராஜ்! நான் சாரணீ. முகலாயர்கள் மறுபடியும் மேவாரின் மீது படையெடுக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன், ஆனல் மேவார் இதுவரை கவலேயற்று இருப்பதைப் பார்க்கிறேன். ஒரு சமயம் மகாராஜாவின் தூக்கம் கலேயவில்லே

என்று நினைத்தேன். அதனால் நான் மகாராஜாவின் தூக்கத்தைக் கலைப்பதற்காக வந்துள்ளேன்.

ராணு: சாரணி! இப்பொழுதே நமக்குப் போர் செய்யும் விருப்பம் இல்லை. இந்தத் தடவை நாம் ஒப்பந்தம் செய்து கொள்ளுவோம்.

ஸத்: இது ஏன் மகாராஜ்! தேவார் யுத்தத்தில் வெற்றி ஏற்பட்ட பிறகு ஒப்பந்தம் ஏன்? என்ன மகாராஜ்! அந்த கௌரவத்தின் உச்சியிலிருந்து நழுவி அவமானத்தின் ஆழ்ந்த பள்ளத்தில் விழப் போகிறீர்களா?

ராணு: சாரணீ! தேவார் யுத்தத்தை விட்டுத் தள்ளு. தேவாரில் நமக்கு வெற்றி ஏற்பட்டது உண்மைதான். ஆனால் உனக்குத் தெரியுமா? அந்த வெற்றி எப்படிக் கிடைத்தது என்று. அதில் ஏறக்குறைய பாதி சைன்யம் கொல்லப்பட்டுவிட்டன. இவ்வளவு வீரர்களின் ரத்தத்தை பெருகச் செய்து நாம் வெற்றி பெற்றோம்.

ஸத்: மகாராஜ்! இது கவலையோ அல்லது வருத்தமோ அடையவேண்டிய விஷயமல்ல. வீரர்களின் ரத்தம்தான் ஜாதியைப் பரிசுத்தப்படுத்துகிறது. எந்த நாட்டில் வீரர்கள் இருக்கின்ருர்களோ அந்த நாட்டிற்காக வருத்தப்பட வேண்டியதில்லை. ஆனால் வீரர்கள் இறவாத நாட்டிற்காகத்தான் நாம் வருத்தப்பட வேண்டும்.

ராணு: ஆனல் நாம் பார்க்கிறோம். மறுமுறை நாம் போர் செய்தாலும் அதற்குப் பலன் ஏற்படாது. இந்தப் போருக்கு முடிவே கிடையாது. கையில் அடக்கக் கூடிய சேனையை வைத்துக்கொண்டு உலகத்தை வெற்றி கொள்ளும் டில்லி ஸம்ராட்டின் சேனைக்கு எதிராக நிற்பது முற்றிலும் பைத்தியக்காரத்தனம்.

ஸத்: மகாராஜ்! தாங்கள் இதைப் பைத்தியக்காரத்தனம் என்று சொன்னல் இதற்கு எல்லா ஆராய்ச்சிக்கும் மேலான இடமளிக்கவேண்டும். உலகம் முழுவதும் இந்தப் பைத்தியக்காரத்தனத்தின் காலடியில்தான் வந்து புரளுகிறது. சுவர்க்கத்திலிருந்து அபூர்வ சக்தி ஒன்று வந்து இந்தப் பைத்தியக்காரத்தனத்தின் தலையில் கிரீடத்தை அணிவிக்கின்றது. எதைத் தாங்கள் பைத்தியக்காரத்தனம் என்று சொல்லுகிறீர்களோ, அந்தப் பைத்தியக்காரத்

தனம் இல்லாமல் இன்று ஒருவனும் ஒரு பெரிய சாதனையையும் சாதிக்கவில்லை.

ராணு: ஆனால் இந்த யுத்தத்தின் முடிவு நிச்சய மரணந்தான்.

ஸத்: மகாராஜ்! ராணு பிரதாப சிம்மரின் மகனுன தங்களுக்கு அடிமை மேலானதா அல்லது மரணம் மேலானதா என்று அறிந்து கொள்வது கடினமல்ல. மரணத்தின் பயத்தால் நாம் நம்முடைய ரத்னத்தைத் திருடர்கள் கையில் ஒப்படைத்து விடுவோமா? ரத்னத்தைக் காட்டிலும் மேலான இந்த நாட்டை நம் முன்னோர்களால் சம்பாதிக்கப்பட்ட, அநேக நூற்றுண்டுகளின் நினைவுச் சின்னத்தை அற்பமான உயிருக்குப் பயந்து போர் செய்யாமலேயே ஒப்படைத்து விடுவோமா? மகாராஜ்! எழுந்திருங்கள். முகலாயப் படை நம் அருகிலே வந்து விட்டது. இப்பொழுது கனவு காணும் நேரமல்ல.

ராணு: சாரணி! நீ யார்? உன் வார்த்தைகளில் கர்ஜனை; உன் கண்களில் மின்னல்; உன் அவயவங்களில் புயல். சூரியனைப் போல ஒளி வீசுகின்ற, வெள்ளப் பெருக்கைப் போன்ற வேகமுள்ள வஜ்ரத்தைப்போல் பயங்கரமான நீ யார்? நீ சாதாரண சாரணி அல்ல.

(தொடரும்)

VISIT

OUR

RETAIL SHOW ROOM

FOR ALL YOUR

DRESS REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED

FROM

SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS

106-107, Moore Market,

MADRAS - 3

இளநரை தடுத்து கூந்தல் செழிக்க

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

காஷ்மீர்-குஸும்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

சாதாரணம் - பாக்கெட்டில்

நஞ்சன்கூடு-பல்பொடி

மேலும்

54. அரிய குடும்ப மருந்துகள் விவரப் புத்தகத்திற்கு எழுதுக

யுனைடெட் கன்ஸர்ன் 54, பந்தர் தெரு, சென்னை - 1.

A. K. SHERIFF

5/7, KALMANDAPAM ROAD

Rayapuram, Madras-13.

MANUFACTURER OF

READY MADE DRESSES

FIRST - CLASS CLOTHES

MADE OF SUPERIOR B. & C.

MATERIALS

Prices Moderate

C. C. JACOB

Tailors, Dress Manufacturers & Contractors

(Specialists in B & C Quality Textile Dresses)

10, Thambu Chetty St., Madras - 1.

★

For Readymade garments fabricated out of India's best clothing materials —B. & C. Mills cloths

Contact us for your requirements.

தொடர் நாவல்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

உயிர்க்கனல்

★★★★★★★★★★★★★ "ஸ்ரீரா" ★★★★★★★★★★★★★

அத்தியாயம் 9

மண்ணுருவில உடலுடன் ஒட்டிப்போயிருந்த கால்கள் விடுபட்டு இரண்டும் எழுந்து நின்றது. நாய் தனது வாயைத் திறந்து பல்லைப் பளிச்செனக் காட்டிற்று. நாயைக் கண்டால் தான் செய்யும் வெற்றிகரமான வாபசுக்கு முன்னர் தனது கோபத்தை வெளிப்படுத்தும் பாணியில் ஏனைய பூனைகள்காட்டும் மனோபாவத்தை அந்தப் பூனையும் காட்டிற்று.

பின்னர் படியிலிருந்து தாவிக் கீழே இறங்கி வீட்டைவிட்டு வெளியில் ஓடக் கிளம்பிற்று. சீற்றம் பொங்க நாய் துரத்திற்று. கீழே தாவும்போது சில சோழிகளைத் தட்டிக் கீழே தள்ளிவிட்டுச் சென்றது. கோபத்தின் வேகம் மிக அதிகமாக இருந்ததால் குரைப்போ, உறுமலோ பலமாகக் கிளப்பவில்லை அப்போது. சோழிகள் இடம் பெயர்ந்த ஓசையும் மற்ற சிறு சலசலப்புகளும் அவ்வீட்டின் உறக்கத்தைக் கலைக்கப் போதியதாகஇல்லை. கொலுவின் ஏனைய அங்கங்கள் சக்தியற்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தன. யுத்தத்தில் கலந்துகொள்ளத் தேவையான அம்சம் அவற்றிற்கில்லை.

வீட்டின் இருளைவிட்டு ரோட்டின் மங்கலுக்குப் பூனை செல்லவும் நாய் அதை வாயுவேகத்தில் துரத்தவும் சரியாக இருந்தது. திண்ணையில் படுத்திருந்த சபேசய்யர் புரண்டு படுத்தார். அவருக்கு விழிப்பு ஏற்படப் போதுமான காரியம் ஒன்றும் நடந்து விடவில்லை. எதிர்வீட்டில் நடந்து கொண்டிருந்த "அரசியல் அமர்க்களங்கள்" அவருக்கு வழக்கமாகப் போயிருந்ததால் அவரது தூக்கம் அவற்றாலும் பாதிக்கப்படவில்லை.

நடு ரஸ்தாவுக்குப் பூனை வந்த போது நாய் மிகவும் நெருங்கி விட்டது. தனது பல்லை நீட்டிப் பூனையின் பின் கால் ஒன்றை மோதிற்று. "கிரீச்" என்ற சப்தத்துடன் பூனை முன்னிலும் வேகமாக ஓடிற்று. துரத்திய பிராணியும் விடாமல் தொடர்ந்தது.

கோபாலய்யரின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிற்குள் நுழையும் நோக்குடன் ஓடிய பூனை கதவடைத்திருந்ததைக் கண்டு திண்ணைக் கம்பத்தைச் சுற்றிக்

கொண்டு திரும்பிற்று. அதே பாதையில் நாயும் வேகமாகச் சென்றதால் பூனையின் திருப் பத்தை எதிர்பார்த்து மடக்கக் கூடிய சூசனை அதற்குக் கிட்ட வில்லை எனவே பூனையின் பங் கில்தான் ஜெயம் இருந்தது.

கீழே குதித்த பூனை வேகமாக கோபாலய்யர் வீட்டுப் படி களில் தாவி ஏறித் திறந்திருந்த வாயிற்படி வழியே நுழைந்து இருளில் மறைந்துவிட்டது. தன் குலத்துக்கு மனிதர்கள் தங்கள் வீடுகளில் அளித்திருந்த சுதந் திரத்தைப் பயன்படுத்திக் கொள்வதில் அதற்குத் தயக்கம் ஏற்படவில்லை.

"திறந்த வீட்டில் நாய் நுழை வது" என்று பழமொழி கூறு வது அந்தப் பிராணியின் இயற் கைக்கு ஒத்த சொல்லல்ல. 'நாய்' என்ற பதப்பிரயோகத்துக்கு "வெறுக்கப்பட்ட, விரும்பப் படாத பிராணி" என்ற விசேஷ அர்த்தத்தை எடுத்துக்கொண்டு அந்த மிருக உருவை மறந்து விட்டாலல்லாது இந்தப் பழ மொழி அர்த்தமற்றதாகத்தான் ஆகிவிடும்.

"திறந்த வீட்டில்" நுழைந் தது பூனைதான்—நாயல்ல! நாய் வீட்டுப்படியை அடைந்ததும் தனது வேகத்தை சடுதியில் குறைத்துக்கொண்டு முன்காலை தரையில் மோதி சறுக்கிற்று. தலையை ஒருமுறை நிமிர்ந்து நோக்கிற்று. பின்னர் ஒரு குரைப்புக்குரைத்துவிட்டுத் தலை யைக் கீழே வழிய விட்டுக் கொண்டு ஒரு ஆட்டு ஆட்டிற்று அப்புறம் திரும்பி நடக்க ஆரம் பித்தது.

இந்த நாய்—பூனைப் போராட் டத்தின் நெருங்கிய சடலத்தைக் கோபாலய்யர் வகையறுக்கள் கவனிக்காமல் போகவில்லை. பக் கத்திலிருந்த தடியைத் தூக்கிக் கொண்டு நாயை விரட்டினார் கோபாலய்யர். பூனையை விரட் டிய வேகம் மறைந்து, தான் விரட்டப்பட்ட கொடுமை புலப் பட ஆரம்பித்தது அதற்கு. வேக மாக ஓடி வெங்கிட்டுவின் வீட் டுக்குள்—தனது கர்ப்பக் கிரு ஹத்துக்குள்—நுழைந்து. கூடத் துக்குச் சென்று தான் முன்பு அமர்ந்திருந்த கொலுப்படியின் மேலேறி அமர்ந்தது. உயிர்க் கணப்பு அணைந்தது. வேகம் குறைந்தது. துடிப்பு ஓய்ந்தது. உயிர்ச் சக்தி மண்ணாகி மண் ணுக்குள் மறைந்தது.

கோபாலய்யரின் வீட்டுக்குள் நுழையாத நாய் வெங்கிட்டு வின் வீட்டில் திரும்பி வந்து எப்படி நுழைந்தது என்ற பிரச்னை ஏற்பட இடமிருக் கிறதே!

தர்க்க ரீதியாக அந்த நாய் வெங்கிட்டுவின் வீட்டுக்குவாழ்க் கைப்பட்டிருந்தது என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண் டும். அதைப் பொறுத்தவரை யில் வெங்கிட்டுவின் வீடு அதன் வாசஸ்தலம், குறைந்தபட்சம் பழக்கப்பட்ட இடம். இதற்கு

மாருக கோபாலய்யரின் வீடு அதற்கு வேற்று வீடு—"திறந்த வீடு." வெங்கிட்டுவின் வீடு அதற்குத் "திறந்த" வீடல்ல—சொந்த வீடு!

வேற்றுமையற்றுத் திரியும் சந்நியாசியான பூனைக்கும், தராதர உணர்ச்சி படைத்த நாய்க்கும் இந்த வெளிப்படை பேதமாவது இருக்கவேண்டாமா? கண்ட வீட்டிலெல்லாம் நுழைந்து தனது கடமையை மறந்திருக்கும் பூனைக்கும், நன்றியும் கடமையுணர்ச்சியும் படைத்த நாய்க்கும் இந்த வித்தியாசம்கூட அவசியமில்லையா?

காரண காரியமற்ற இந்த இயல்பு விளையாட்டின் ஆராய்ச்சி வெறும் காட்சிச் களிப்பைப்போன்று ரஸமானதல்ல. எனவே இதை விடுத்து மேலே செல்லலாம்.

கோபாலய்யர் வீட்டில் பூனை ஒடுங்க ஆரம்பித்தது. சுடர் அணையுமுன் கூடத்திலிருந்த கொலுவில் காலியிருந்த இடத்தில் ஏறி உட்கார்ந்தது. அதே படியில் பக்கத்துக் கிண்ணத்திலிருந்த சுண்டலின் வாடை இலேசாக அதற்குப்பட்டது. ஆனால் மேலும் ஈடுபடக் கூடிய சக்தி தங்கவில்லை. சுடர் மங்கி அணைந்து போயிற்று, மண்ணுருவம் திரும்பிவிட்டது. உயிர்ச் சுரசுரப்பிலிருந்து, செத்த வழவழப்புக்கு மாறி விட்டது அதன் இருக்கை.

பூனை நுழைந்த சப்தத்தை அரைகுறையாகக் காதில் வாங்கிய சுந்தரி அம்மாள் "சூ" என்று ஒரு முறை கொட்டிவிட்டுப் புரண்டு படுத்துத் தூங்க ஆரம்பித்தாள். வெங்கிட்டுவின் வீட்டில் சபேசய்யரும் ஏனையோரும் சற்றும் விக்னமின்றி அயர்ந்துதான் இருந்தார்கள்.

அந்த மகோன்னதமான நாடகம் இவ்வாறாக நடந்து முடிந்தது. இரவின் ஏக்கம் திரும்பவும் ஜனித்தது. அலுப்பின் மக்கிப்போன ஆடை விரிப்பில் சகலமும் சுருங்கி உறங்கிக்கிடந்தன. உயிர்த் தேக்கத்தின் ஆழமும் இருளும் திரும்பவும் ராஜ்ய பாரம் நடத்த ஆரம்பித்தன.

வளை குடாவில் மடக்கப்பட்ட கடல் தனது ஈடுபாட்டை, குதூகலத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதுபோல் உயிரும் தூக்கத்தில் தனது இயல்பை மறந்திருந்தது!

அத்தியாயம் 10

அந்த இரவில் நடந்த இந்த அபூர்வ சம்பவம் சம்பந்தப்பட்ட இரு குடும்பங்களிலும் உண்டாக்கிய குழப்ப எதிரொலிகளைப் பற்றிக் கற்பனை செய்து பார்ப்பதே விசேஷமான ரஸனை உடைய விஷயமாகும். மானுஷிக நடவடிக்கைகளினின்று பிரிவுபட்டு, எதிர்பார்ப்பு சக்திகள், ஊக சக்திகள் இவற்றை மிரள வைக்கத் தகுந்த அதிசயம்படைத்த இந்தச்

சம்பவம் இத்தகைய எதிரொலி களைப் பயக்காமல் எப்படி இருந்திருக்கமுடியும்?

விடியற்காலையில், தமது முழு அயர்வையும் போகக்கூடிய நீண்ட தூக்கத்துக்குப் பின்னர், சபேசய்யர் தமது சர்வ சுதந்திர சொத்தாகிய வாயிற்திண்ணையி லிருந்து ஒரு தடவை சோம்பல் முறித்துக் கொட்டாவி விட்டார்.

வழக்கம் போல் தம் கை விரல்களைப் பரஸ்பர உதவி கொண்டு சொடுக்கிவிட்டுக் கொண்டார். தனக்குத் தெரிந்த கடவுளர் பெயரை ஒரு முறை உச்சரித்து விட்டுக் கைகளை ஒரு முறை பார்த்துக்கொண்டார். தூக்கத்தின் பின் கலக்க முற்று முழுப்பார்வை சக்திகளையும் இழந்திருந்த கண்களுக்கு இந்தச் செயல் ஊட்டிய புத்துயிரைப் பற்றி விஞ்ஞான ரீதியாக நினைத் துப்பார்க்க அவருக்கு சந்தர்ப் பம் ஏற்பட்டதேயில்லை. ஏதோ ஒரு அர்த்தமற்ற பழக்கமாகத் தான் அதை அவர்ஒப்புக்கொண் டிருந்தார்.

திண்ணையில் நிமிர்ந்து உட் கார்ந்தவர் வாயிற் கதவு திறந்து கிடப்பதைக் கண்டார். இது வழக்க விரோதமாகத்தான் இருந்தது அவருக்கு. அவ்வளவு சீக்கிரத்தில் ஒருவரும் எழுந் திருக்கமாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும். இரவில் இடைவேளை எழுச்சியின்போது கதவு திறக்கப்படக்கூடிய வேளையுமல்ல அது. காலை மிக வும் நெருக்கத்தில் வந்துவிட்டது. எதிர் சந்துக் கோனன் வீட்டுக் கோழிகூட கூவி முடிந்த நேரம் அது

ஒருக்கால் தங்கம்மாள் வந்து கதவை திறந்திருக்கலாம் என்று நினைத்தார்.

தூக்கம் சீக்கிரத்தில் முழித் துப் போயிருக்கலாம் என்று சந்தேகப்பட்டவர் ஒரு தடவை "அடியே" என்று பலத்துக்கூப் பிட்டார். பதில் ஒன்றும் கேட்க வில்லை. மற்றொரு முறை அதே குரலை எழுப்பிவிட்டு எழுந்து உள்ளே மெதுவாகச் சென்ற வண்ணமே "சரோஜா" என்று ஒரு முறையும் "வெங்கிட்டு" என்று ஒரு தடவையும் "டேய், பாலு" என்று ஒரு தடவையும் கூப்பிட்டுப் பார்த்தார். பதில் ஏதும் கிடைக்கவில்லை.

"அடியே" என்ற சபேசய்ய ரின் கூச்சலுக்குத் தங்கம்மாள் பதிலளிக்காததற்கு அவள் இன் னும் உறங்கியிருந்தது காரண மல்ல. உண்மையில் வழக்கத் திற்குச் சற்று சீக்கிரமாகவே அன்று அவள் எழுந்து விட்டி ருந்தாள். விடியற்காலையில் அடித்த குளிர் காற்று அவளை எழுப்பிவிட்டிருந்தது. எழுந்த தும் புறக்கடைப்பக்கம் சென்று பல் துலக்கிவிட்டு வெந்நீர் அண் டாவைத் தூக்கி அடுப்பின் மேல் அமர்த்தி விறகுகளை அடுப்புக் குள் செருகிக்கொண்டிருந்த தங் கம்மாளுக்கு வாயிலிலிருந்து சபேசய்யர் கூப்பிட்ட குரல்

காதில் விழாமல் போனதில் அதிசயமில்லை.

வாயிற் கதவை ஒருக்களித்து விட்டு சபேசய்யர் மெதுவாக உள்ளே நுழைந்தார். ரேழி, கூடம் இவற்றின் முக்கால் இருட்டைக் கடந்து மெதுவாகப் பின்கட்டுக்குச் சென்றார்.

புறக்கடையை அடைந்தவர், "என்ன இது? வாசலை இப்படித் திறந்து போட்டுட்டு நீ பாட்டிலே புழக்கடையில் காரியஞ் சேயறே. ரொம்ப நன்னா இருக்கு!" என்று பழி சுமர்த்தினார் தங்கம்மாளின் பேரில்.

நான் ஏது பாவமும் அறியேனே என்று கூறும் வண்ணம் திரும்பிப்பார்த்த தங்கம்மாள், "நானெங்கே திறந்து போட்டேன்? நான் அந்தப் பக்கம் வரவேயில்லையே! திறந்தா கிடந்தது?" என்று வேகமாய்க் கேட்டாள்.

வாயிற் கதவு காரணம் தெரியாமல் திறந்துகிடப்பதற்குக் காரண பூதமாயிருக்கக் கூடிய சம்பவங்கள் அவளது கற்பனையில் வேகமாக எழுந்தன.

தன்னைச் சற்று நிதானித்துக் கொண்ட தங்கம்மாள் எழுந்து நின்று கேள்விக் குறி போல் முகத்தைச் சற்று சுளித்துக் கொண்டு பார்த்தாள்.

"நீ திறக்காமல் பின்னே எப்படித் திறந்திருக்கும்? உள் பக்கம் தாழ்ப்பாள் போட்ட கதவு எப்படி வெட்டி மல்லாத்திப் போச்சு? வேடிக்கையாய் இருக்கே? புழக்கடை வழியாக வந்த திருடன் வாசல் வழியில் போயிட்டானா?" என்று அரை கேலியாகக் கேட்டார் சபேசய்யர்.

அன்று திருடன் வந்திருப்பான் என்பதையோ, அவன் புழக்கடை வழியாக வந்து வாயில் வழியாகச் சென்றிருப்பான் என்பதையோ பரிபூர்ண அசாத்தியமாக சபேசய்யர் நினைக்கவில்லையானாலும் இப்படி நடந்திருக்க முடியும் என்று அவர் நம்பவில்லை. எனவே கடைசியாக அவர் கூறிய சில வார்த்தைகள் சிரிப்பை வருவிக்கும் தன்மையனாகத்தான் இருந்தன.

"திருடன்" என்ற பதப்பிரயோகம் சந்தர்ப்ப விரோதமாகச் சிறிது பட்டாலும் அது தங்கம்மாளைச் சற்றுத் துணுக்குறச் செய்யாமற் போகவில்லை. கணவன் என்ற முறையில் சபேசய்யர் கண்டித்ததாக இருந்ததால் மனையாள் என்ற முறையில் அவருக்குச் சூடு கொடுக்கும் நோக்கத்துடன் "புழக்கடை வழியாகத் திருடன் வந்திருந்தால் புழக்கடைக் கதவு திறந்திருக்காதா?" என்று கேட்டு வைத்தாள் தங்கம்மாள், அதே போக்கில்.

வீட்டுக்குப் பெரியவர் என்ற முறையில் அவர் இந்த விவாதத்தை கிளப்பி யிருந்தால் வீட்

திரட்டு

உன்னத மாதாந்தரக் கட்டுரைப் பொக்கிஷம்

(TAMIL DIGEST)

சுவைமிக்க ஆராய்ச்சிக் கட்டுரைகள், தொடர் நாவல், தொடர் நாடகம், கதைகள், பல விசேஷ அம்சங்கள் நிறைந்தது.

128 பக்கங்கள் விலை எட்டணாதான்.

விவரங்களுக்கு:—

திரட்டு காரியாலயம்

22-A, நரசிங்கபுரம் தெரு,
மவுண்ட் ரோடு,
சென்னை-2.

டுக்குப் பெரியவள் என்று முறை தானும் அந்தக் கதவு திறந்திருந்த படலம் பற்றி அக்கறையுடன் சற்றுக் கவலையுடன் மனதுக்குள் யோசனை செய்ய ஆரம்பித்தாள்.

தங்கம்மாளின் கேள்வியை எளிதில் மடக்கிவிட்டார் சபேசய்யர். "நுழைஞ்சப்புறம் புழக்கடைக் கதவைத் திறந்து போடணும்னு எழுதிவச்சிருக்கா? ஏன் தாழ்ப்பாள் போட்டுட்டு போயிருக்கக்கூடாது!'' என்று கேட்டார் அவர்.

தங்கம்மாள் தாங்கமுடியாமல் சிரித்துவிட்டாள்.

"என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கு? அசமஞ்ஜம்'' என்று உறுமிவிட்டு சபேசய்யர் தனது காலைக்கடன்களைக் கவனிக்கப் புறப்பட்டார். தங்கம்மாளைத் தவிர ஏனைய மூவருக்குள் யாராவது ஒருவர் நள்ளிரவில் வாயிலுக்கு வந்துவிட்டுத் திரும்பும்போது தாள் போட மறந்திருக்கலாம் என்று தான் அவர் தமக்குள் முடிவு செய்துகொண்டிருந்தார். விபரீதமாக ஒன்றும் நேர்ந்திருக்க முடியாது என்ற எண்ணமே அவர் அந்த பிரச்னையை அத்துடன் கைவிட்டதற்குக் காரணம்.

வெந்நீரடுப்புக்கு சத்தை வைத்து மூட்டம் போட்டு சில விறகுகளையும் பாந்தமாக வைத்துவிட்டுப் கூடத்துப்பக்கம் விரைந்தாள் தங்கம்மாள். பாலசுந்திரத்தின் அறைத் கதவு திறந்து விட்டதா என்று ஒரு முறை எட்டிப் பார்த்துவிட்டுக் கூடத்தின் பின் கோடியிலேயே நின்று மூலை மேடையில் வைக்கப்பட்டிருந்த வெள்ளிச் செம்பு பத்திரமாக இருக்கிறதா என்று பரிசோதித்தாள். திருப்தியேற்பட்டது. சமயலறையையும் சோதனைபோட்டு மனத்தைதேற்றிக்கொண்டாள். பணப்பெட்டி நகைப்பெட்டி, சொத்து சுதந்திரமெல்லாம் பாலசுந்திரத்தின் அறையிலிருந்ததாலும், அந்த அறை இன்னும் திறக்கப்படாமலிருந்தாலும் சற்றுக் கவலை விட்ட நிலை ஏற்பட்டது. கொலு பொம்மைகளுக்காக ஒரு திருடன் வந்திருக்கமுடியுமென்றோ வேறெதற்காக வந்திருந்தாலும் தற்செயலாகக் கூடக் கொலு பொம்மைகளின் மேல் ஆசை வைத்திருக்க முடியுமென்றே அவளுக்குச் சந்தேகம் சிறிதும் தோன்றவில்லை.

ஏனையவர்கள் திருப்பள்ளியெழுச்சி நடந்தவுடன் குற்றவாளியைக் கண்டிபிடிப்பது, பாட்டுக் கொடுப்பது என்று முடிவு செய்து கொண்டவளுக்கு ஸரோஜா முன்னிரவில் தான் கூறிய குறிப்பு ஞாபகம் வந்தது. அவள் மறந்து கதவைத் திறந்துபோட்டு விட்டுத் தூங்கப் போயிருக்கலாம் என்ற முடிவு ஏற்பட்டது.

(தொடரும்)

CONSULT

K. M. S. Press

22-A, Narasingapuram St.,
Mount Road, Madras - 2

FOR ALL HIGH CLASS
JOB & BOOK WORK
IN ENGLISH & TAMIL

சிருஷ்டியில் யாவும் கடவுள் மயமே

முதலில் நாம் மனிதனுடைய மிகவும் சாந்தமும் புனிதமுமான உருவங்களில் பரம்பொருளைக்காணப் பயிலுவோம். அவ்வாறே இந்த சிருஷ்டியிலுள்ள விசாலமான, மனோகரமான பகுதிகளில் அதை முதலில் காண்போம். உஷாகால மெனப்படும் அதிகாலை நேரத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். சூரியன் தோன்றுவதற்கு முன்னுள்ள அந்த தெய்வீக உஷா தேவதையின் புகழைப் பாடும் ரிஷிகள் அந்த மகிழ்ச்சியில் மெய்மறந்து ஆடுகிறார்கள். “ஏ உஷையே! நீ ஆண்டவன் செய்தியைக் கொணரும் தேவ தூதி. நீ பனித்துளியில் குளித்து வந்திருக்கிறாய். நீயே சாகா நிலையின் ஜயக்கொடி” என்று இவ்வாறு உஷையை உள்ளத்திலிருந்து எழும் சொற்களால் ரிஷிகள் வர்ணித்திருக்கிறார்கள். வேதரிஷி, “ஆண்டவனின் செய்தியைக் கொணரும் உன்னைக் கண்ட பின்னும் எனக்கு அவன் புலனாகாவிட்டால், அவனைப் புரிந்துகொள்ள முடியாவிட்டால் வேறு யார்தான் எனக்கு அவனைக் காட்டுவார்?” என்கிறார். உஷை இவ்வளவு நேர்த்தியாய்த் தன்னை அலங்கரித்துக்கொண்டு நம் எதிரில் வந்து நிற்கிறாள். ஆனால் நம் கண்கள் அவளைப் பார்த்தால் தானே!

அவ்வாறே அந்த சூரியனைப் பார். அதன் காட்சி பரம்பொருளின் காட்சி போன்றதே. அது வானில் பல்வகை வண்ண சித்திரங்களை வரைகிறது. ஓவியன் மாதக்கணக்காய்த் தூலிகையை இங்குமங்கும் திருப்பி சூரியோதயக் காட்சியைச் சித்திரமாய் வரைந்து அதற்கு வர்ணம் பூசுகிறான். ஆனால் நீ காலையில் எழுந்து அந்த ஆண்டவனின் கலைத்திறனைக் கொஞ்சம் கண் திறந்து பாரேன். அந்த தெய்வீகக்கலையை, அந்த எல்லையில்லா வனப்பை எதனுடன் ஒப்பிடலாம்? ஆனால் அதை யார் பார்க்கிறார்கள்? அங்கே அழகிய ஆண்டவன் நின்றுகொண்டிருக்க இங்கே இவன் முகத்தின் மீது போர்வையை இழுத்து மூடிக்கொண்டு குறட்டை விடுகிறான். சூரியன், “ஏ சோம்பேறி! நீ படுத்துக்கொண்டே யிருக்க விரும்புகிறாய். ஆனால் நான் உன்னை எழுப்பி விடுகிறேன்” என்று சொல்லி தன் உயிர்க்கிரணங்களைப் பலகணி வழியே உள்ளே செலுத்தி அந்தச் சோம்பேறியை எழுப்பி விடுகிறது.

(ஸூர்ய ஆத்மா ஜகதஸ் தஸ்துஷச்ச)

சூரியன் நிலைத்தவை, நகருபவை ஆகிய அனைத்தின் ஆன்மா. அதுவே சராசரங்களுக்கு ஆதாரம். ரிஷி, அதற்கு 'மித்திரன்' அல்லது நண்பன் என்ற பெயர் அளித்திருக்கிறார்.

மித்ரோ ஜனான் யாதயதிப்ருவாணோ
மித்ரோ தாதாரப்ருதிவீ முதத்யாம்

"இந்த மித்திரன் மக்களைக் கூவி அழைத்து அவர்களைத் தம் பணிகளில் ஈடுபடுத்துகிறான். அவன் சுவர்க்கத்தையும் புவியையும் தாங்குகிறான்." உண்மையிலேயே சூரியன் வாழ்க்கைக்கு ஆதாரமானது. அதில் பரம்பொருளைக் காண்.

மேலும் அந்தப் புனிதமான கங்கையோ! நான் காசியிலிருந்த பொழுது கங்கைக் கரையில் போய் அமர்ந்து விடுவேன். இரவில் ஊரடங்கிய பிறகு தனித்துச் செல்லுவேன். அதன் பிரவாகம் எவ்வளவு அழகாய், ஆனந்தமாயிருக்கும்! அதன் அந்த அழகிய பெருமைமிக்க வெள்ளமும் அதனுள் அடங்கியதாய்த் தோன்றும் வானத்தின் எண்ணிறந்த மீன்களும்! நான் வாய் திறவாது இருந்துவிடுவேன். சிவபெருமானுடைய ஜடாமகுடத்திலிருந்து, அதாவது இமயத்திலிருந்து இழிந்து வரும் அந்த கங்கையை, எதன் கரையில் தம் ராஜ்யபாரங்களை யெல்லாம் துரும்பென வீசி எறிந்துவிட்டு ராஜாக்கள் தவமியற்றச் சென்றார்களோ அந்த கங்கையைக் கண்ணுறக் காணும் பொழுது எனக்கு மிக்க மன வமைதி ஏற்படும். அந்த மனவமைதியை நான் எவ்வாறு வர்ணிப்பேன்? அங்கே என் வாய் அடைத்துப் போகிறது. தான் இறந்த பிறகு தன் எலும்புகளாவது கங்கையிற் சேரவேண்டுமென்று இந்து விருப்புவதன் காரணம் எனக்குப் புலனாகத் தொடங்கிற்று. நீங்கள் வேண்டுமானால் சிரியுங்கள். உங்கள் சிரிப்பால் ஒன்றும் கெட்டுவிடவில்லை. ஆனால் எனக்கு இந்த பாவனைகள், உள்ள உணர்ச்சிகள் மிகவும் புனிதமாய், போற்றத்தக்கவையாய்த் தோன்றுகின்றன. இறக்குப் தருவாயில் இரண்டு துளி கங்கை நீரை வாயில் ஊற்றுகிறார்கள். அந்த இரு துளிகள் என்பவை என்ன? ஆண்டவனே வாயில் இழிவது போலாகிறது. அந்த கங்கையை பரம்பொருளென்றே கொள். ஆண்டவனுடைய கருணையே அவ்வாறு பெருகிக்கொண்டிருக்கிறது. உன் அகத்திலும் புறத்திலுமுள்ள எல்லாக் குப்பை கூளங்களையும் அந்தத் தாய் கழுவுகிறாள்; தன்போக்கில் அடித்துக்கொண்டு போகிறாள். கங்கைத் தாயிடம் நமக்கு ஆண்டவன் காட்சி யளிக்கவில்லை என்றால்

வேறு எங்குதான் அளிப்பான்? சூரியனும் ஆறுகளும் 'ஓ ஓ, வென்று அலைகளை வீசி எறியும் அந்தப் பரந்த கடலுமாகிய இவை யெல்லாம் ஆண்டவனின் பல்வேறு உருவங்களே.

மேலும் இந்தக் காற்றே! அது எங்கிருந்து வருகிறதோ, போவதுதான் எங்கோ, நாம் அறியோம். இது ஆண்டவன் தூதனே. இந்தியாவில் ஒரு காற்று இமயத்திலிருந்தும் மற்றொன்று மாபெருங் கடலிலிருந்தும் வருகிறது. இப் புனிதக்காற்றும் நம் உள்ளத்தைக் தொட்டு நம்மைத் தட்டி எழுப்பி நம் காதுகளுக்குச் செய்தி கொணருகிறது. ஆனால் இந்தக் காற்றின் செய்தியை யார் கேட்கிறார்கள்? சிறை அதிகாரி (ஜெயிலர்) நான்கு வரி கொண்ட நம் கடிதத்தை நம்மிடம் தரவில்லை என்றால் நம் மனம் வெறுப்புறு கிறது. ஏ துரதிர்ஷ்ட முள்ளவனே! அந்தக் கடிதத்தில் அப்படி என்ன வைத்திருக்கிறது? ஆண்டவனின் அன்புச் செய்தியை ஒவ்வொரு கணமும் இந்தக் காற்று தாங்கி வருகிறதே, அதைக் கேளேன்!

நம் வீட்டில் தினமும் உதவிவரும் இந்தப் பிராணிகளைப்பார். அந்த பசுத்தாய்க்கு எவ்வளவு அன்பு, எவ்வளவு பாசம், எவ்வளவு வாஞ்சை! அவை இரண்டு மூன்று மைல்களுக்கப்பால் காடுமேடு களில் மேய்க்துவிட்டு தன் கன்றுகளைக்காண எவ்வளவு ஆவலுடன் ஓடிவருகின்றன! வேத ரிஷிகளுக்கு மலைகளிலிருந்து தூய நீருடன் கலகலவென்று ஒலித்துக்கொண்டு ஓடிவரும் ஆறுகளைப் பார்க்கும்பொழுதெல்லாம் தன் கன்றுகளுக்காகப் பால் நிரம்பிய மடியுடன் 'அம்மா!' என்று கத்திக்கொண்டு பாய்ந்து வரும் பிள்ளைப்பாச மிக்க பசுக்களின் நினைவு வருகிறது. அந்த ரிஷி ஆற்றை நோக்கி, "ஏ தேவி, பாலைப்போல் தூய நீரைத் தாங்கி வரும் நீ பசுவைப் போன்றிருக்கிறாய். பசுக்களால் காட்டிலேயே இருந்துவிட முடியாதிருப்பதைப் போல் உன்னால் மலைகளில் இருக்க முடியாது. நீ வறட்சியால் அவதிப்படும் தன் பிள்ளைகளைக் காணத் தலை தெறிக்க ஓடிவருகிறாய்'' என்கிறார்.

(வாச்ரா இவ தேநவ: ஸ்யந்தமானா:)

வாஞ்சை மிக்க பசுவின் உருவில் பகவானே வாயிலில் நிற்கிறார்.

மேலும் அந்தக் குதிரையைப் பார்! எவ்வளவு உண்மை யானது, எவ்வளவு நன்றியுள்ளது! அராபியர் தம் குதிரைகளை எவ்வளவு நேசிக்கிறார்கள்! அந்த அராபியனின் கதை உங்களுக் குத் தெரியுமல்லவா? ஆபத்தில் சிக்கிய ஒரு அராபியன் தன் குதி

ரையை ஒரு வியாபாரிக்கு விற்கச் சித்தமாய் விடுகிருன். அவன் கையில் பணப்பையுடன் குதிரைக் கொட்டடிக்குப் போகிருன். ஆனால் குதிரையின் அந்த கம்பீரமான அன்பு ததும்பும் கண்களை அவன் கண்டதும் அவன் பணப்பையை வீசி எறிந்துவிட்டு, "என் உயிரே போனாலும் சரி, நான் குதிரையை விற்கமாட்டேன்" என் கிருன். "எனக்கு என்ன நேர்ந்தாலும் நேரட்டும். உணவு கிடைக்காவிட்டால் வேண்டாம். ஆனால் குதிரையை விற்கமாட் டேன். ஆண்டவன் எனக்கு உதவுவான்" என்கிருன். முதுகைத் தட்டிக்கொடுத்ததும் அது எப்படி சிலிசிலிக்கிறது. அதன் பிடரி தான் எவ்வளவு நேர்த்தியாயுள்ளது! உண்மையில் குதிரையிட முள்ள குணங்களை அளவிடமுடியாது. அந்த சைக்கிளில் என்ன இருக்கிறது? குதிரைக்குத் தீனி வைத்துத் தேய்த்துப் பராமரி. அது உன் பொருட்டு தன் உயிரையே தந்துவிடும். அது உன்னுடன் இணைபிரியாதிருக்கும். என் நண்பரொருவர் குதிரை சவாரி செய் யக் கற்று வந்தார். குதிரை அவரைக் கீழே தள்ளிக்கொண்டே யிருந்தது. அவர் என்னிடம்' "இந்தக் குதிரை என்னைத் தன் முதுகில் இருக்கவே விடமாட்டேனென்கிறதே!" என்ருர். நான் அவரிடம், "நீர் குதிரை மீது ஏறுவதோடு சரியா? அதற்குத் தீனி வைத்துத் தண்ணீர் காட்டி ஏதேனும் செய்கிறீரா இல்லையா? இதையெல்லாம் வேருருவன் செய்ய நீர் அதன் முதுகில் ஏறி உட்காருவதென்ருல் அது எப்படி சரியாகும்? நீரே அதற்குத் தீனி வைத்துத் தண்ணீர் காட்டித் தேய்த்துவிட்டுப் பிறகு சவாரி செய் யும்" என்றேன். அவர் அப்படியே செய்தார். சில நாட்களுக்குப் பிறகு அவர் என்னிடம் வந்து "இப்பொழுது குதிரை என்னைக் கீழே தள்ளுவதில்லை" என்ருர். குதிரைதான் ஆண்டவனுயிற்றே! அவன் ஏன் பக்தனைத் தள்ளுகிருன்? அவருடைய பக்தியைக் கண்டு குதிரை பணிந்து போய்விட்டது. இவன் பக்தனு அல்லது வேறு எவனேனுமா என்று குதிரை அறிய விரும்புகிறது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தாமே குதிரைக்கு உடலைத் தேய்த்துவிடுவார், தினவெடுப்பார், தம் பீதாம்பரத்தில் கொள்ளைக் கொண்டு போய்க் கொடுப்பார். ஒரு பள்ளமோ, வாய்க்காலோ சேருே வழியில் குறுக்கிட்டால் சைக்கிள் அங்கேயே நின்றுவிட, குதிரை எல்லாவற்றையும் ஒரு எட்டில் தாண்டிப் போய்விடுகிறது. இந்த அழகிய அன்புமிக்க குதிரை ஆண்டவனின் உருவே.

அந்தச் சிங்கத்தை எடுத்துக்கொள். நான் பரோடாவில் இருந்து வந்தேன். பொழுது விடிந்ததுமே அதன் கர்ஜனையின் கம்பீர தொனி காதில் விழும். அதன் குரலின் காம்பீர்யமும் சிறப் பும் உள்ளத்தை ஒரு குலுக்குக் குலுக்கிவிடும். கோயில்களின் கர்பக்கிரகங்களில் எழும் எதிரொலியைப் போன்ற கம்பீரம்

வாய்ந்ததே அதன் உள்ளத்தினடியிலிருந்து எழும் த்வனியும். மேலும் சிங்கத்தினுடைய தீரம், பெருமை, அஞ்சாமை ஆகியவற்றை வெளியிடும் முகப் பொலிவையும் அரசனுக்குரிய அதன் போக்கையும் பெருமையையும் என்னென்பது! இந்தப் பெருமை பொருந்திய அழகிய பிடரி இருக்கிறதே, அதை வனராஜன் மீது இயற்கையிலேயே போர்த்தப்பட்டுள்ள சாமரம் என்று சொல்லாமல் வேறு என்னென்பது? பர்டௌதாவில் ஒரு அழகிய தோட்டத்திலிருந்து அந்த சிங்கம். அங்கே அது சுதந்திரமாயிருக்கவில்லை; கூண்டிலடைபட்டு அதனுள் சக்கரம் சுற்றிக்கொண்டே யிருந்தது. அதன் கண்களில் கொடுமை சிறிதும் காணப்படவில்லை. அதன் முக முத்திரையிலும் பார்வையிலும் கருணை நிரம்பியிருந்தது. அது உலகத்தைச் சிறிதும் பொருட்படுத்துவதாகவே தோன்றவில்லை; ஆத்ம சிந்தனையிலேயே ஆழ்ந்து கிடந்தது போன்றிருந்தது. உண்மையில் சிங்கம் ஆண்டவனின் ஒரு புனிதமான வேலைப்பாடே. சிறுபிராயத்தில் நான் 'அண்ட்ராக்ளிஸூம் சிங்கமும்' என்ற கதை படித்ததுண்டு. அது எவ்வளவு சிறந்த கதை! அந்தப் பசியாலும் தாகத்தாலும் வாடும் சிங்கம் அண்ட்ராக்ளிஸ் முன்னர் செய்த உபகாரத்தை நினைத்து அவனுடன் நட்புப் பூண்டு அவன் காலை நக்க ஆரம்பிக்கிறது. இதன் மர்மம் என்ன? அண்ட்ராக்ளிஸ் சிங்கத்தினிடம் உள்ள ஆண்டவனைக் கண்டுகொண்டான். சிவனருகில் எப்பொழுதும் சிங்கம் இருந்துவருகிறது. சிங்கம் பகவானுடைய திவ்ய சிருஷ்டியே.

புலியின் பெருமைதான் என்ன குறைவா? அதனிடமும் ஆண்டவனின் அம்சம் பெரிதும் வெளியாகிறது. அதை நண்பனாக்கிக்கொள்வது அசாத்தியமல்ல. பாணினி பகவான் காட்டில் அமர்ந்து சீடர்களுக்குப் பாடம் போதித்துக் கொண்டிருந்தார். இதற்குள் புலி வந்துவிட்டது. பிள்ளைகள் 'வியாக்ரம், வியாக்ரம்' (புலி, புலி) என்று பயந்து கூக்குரலிட்டார்கள். பாணினி, "சரி, வியாக்ரம் என்றால் என்ன? (விய ஜிக்ரதீதி வ்யாக்ர:) எதனுடைய மோப்ப சக்தி தீவிரமாயிருக்கிறதோ அதுவே வியாக்ரம். பிள்ளைகளுக்கு அதைக் கண்டதும் அச்சமுண்டான போதிலும் பாணினிக்கோ அந்த வியாக்ரம் தீங்கற்ற இன்பமான ஒரு சொல்லே ஆயிற்று. புலியைப் பார்த்து அவர் அதன் பெயரின் உற்பத்தியை விளக்கத் தொடங்கிவிட்டார். புலி பாணினியைத் தின்றுவிட்டது. ஆனால் புலி தின்றதனால் என்ன ஆயிற்று? பாணினியின் உடலினுடைய இனிய மணம் அதற்குப் பிடிக்கவே அது அதைக் கிழித்துத் தின்றது. ஆனால் பாணினி அங்கிருந்து ஓடித் தப்பவில்லை. ஏனெனில், அவர் சப்த பிரம்மத்தின் பக்தர். அவருக்கு எல்லாம் அத்வைத மயமாய், ஒன்றாய்விட்டது. புலியினிடத்திலும் அவர் சப்த பிரம்மத்தை உணர்ந்தார். பாணினியின் இந்தச் சிறப்பு

காரணமாகவே பாஷ்யங்களில் அவர் பெயர் வரும் இடங்களிலெல்லாம் பாணினி பகவான் என்று அடைமொழியோடு மரியாதையுடன் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(அஜ்ஞானந்தஸ்ய லோகஸ்ய ஜ்ஞானஞ்ஜன சலாகயா
சக்ஷுருன்மீலிதம் யேனதஸ்மை பாணினயே நம:)

என்று அவர்களெல்லாம் பாணினிக்குத் தம் பெரும் நன்றியைத் தெரிவிக்கிறார்கள்.

இத்தகைய பாணினி பகவான் புலியினிடம் ஆண்டவனை தரிசிக்கிறார், ஞானதேவர்.

"வீட்டிற்கே சுவர்க்கம் வந்தாலும், நம்மீது புலி பாய்ந்தாலும் ஆத்ம புத்திக்கு அழிவு ஏற்படாதிருக்க!"

என்கிறார்.

பாணினி மகரிஷியின் நிலை இவ்வாறு இருந்தது. புலி ஒரு தெய்வீக விபூதி என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

பாம்பையும் அவ்வாறே எண்ணுங்கள். பாம்பைக்கண்டு எல்லோரும் அஞ்சுகிறார்கள். ஆனால் பாம்பு ஆசாரத்தில் தீவிர புத்தியுள்ள பிராமணனைப் போன்றது; எவ்வளவு துப்புரவாய் இருக்கிறது! எவ்வளவு அழகாயிருக்கிறது! அதற்கு அசுத்தம் சிறிதும் பிடிக்காது. அசுத்தமான பிராமணர்கள் எவ்வளவோ பேரைப் பார்க்கலாம். ஆனால் அழுக்கில் தோய்ந்த பாம்பை எவரேனும் பார்த்திருக்கிறீர்களா? தனித்து வாழும் ரிஷியைப்போல் அல்லவா அது இருக்கிறது! துப்புரவாய், பளபளவென்று அழகிய மாலை போலிருக்கிறது அந்தப் பாம்பு. அதைக் கண்டு அஞ்சுவதேன்? நம் முன்னோர் அதன் வழிபாட்டிற்கல்லவா ஏற்பாடு செய்திருக்கிறார்கள்?

இந்து மதத்தில் எத்தனையோ குருட்டுப் பழக்கங்கள் இருக்கின்றனவென்று வேண்டுமானால் நீங்கள் சொல்லிக்கொள்ளுங்கள். ஆனால் அதில் நாக பூஜைக்கு நிச்சயமாக ஏற்பாடு இருக்கிறது. சிறுபிராயத்தில் நான் என் தாய்க்காக மஞ்சளைக்கொண்டு பாம்பின் சித்திரம் வரைந்து தருவதுண்டு. நான் என் தாயிடம், "கடையில் நல்ல பாம்புப் படம் விற்கிறதே அம்மா," என்றேன். என்வாய், "அது நன்றாயிராது. எனக்கது வேண்டாம்; என் குழந்தை

வரைந்ததுதான் எனக்குப் பிடிக்கும்" என்பார். அந்தப் பாம்பை பூஜை செய்யப்படும். இது பைத்தியக்காரத்தனமா? ஆனால் சிறிது சிந்தித்துப் பாருங்கள். அந்தப் பாம்பு பூஜை மாசத்தில் விருந்தினனாய் நம் வீட்டிற்கு வரும். கார்காலமாகையால் பாவம், அதன் வீடு முழுமையும் நீர் நிரம்பிப்போய்விடும். அப்பொழுது அது என்ன செய்யும்? தொலைவில் தனித்து வாழும் அந்த ரிஷி உங்களுக்கு வீண் சிரமம் கூடாதென்று எங்கேனும் கூரை மேட்டிலோ மரங்களினிடையிலோ வந்து கிடைக்கும். அது மிக மிகக் குறைந்த இடத்தையே அடைத்துக்கொள்ளுகிறது. ஆனால் நாம் தடி எடுத்துக்கொண்டு ஓடுகிகிறோம். ஆபத்தில் சிக்கிய விருந்தினன் ஒருவன் நம் வீட்டிற்கு வந்தால் அவனை அடித்தல் சரியா? பிரான்ஸிஸ் யோகியைப் பற்றிச் சொல்லுவதுண்டு: அவர் காட்டில் பாம்பைக் காணும்பொழுது அதனிடம் மிக்க அன்புடன் "வா தம்பீ, வா" என்பாராம். பாம்பு அவருடைய மடியில் தவழ்ந்து அவர் உடல்மீது ஏறி இறங்குமாம். இதைப் பொய் என்று எண்ணாதீர்கள். அன்பிற்கு நிச்சயமாய் இத்தகைய சக்தி உண்டு. பாம்பை விஷம் உள்ளதென்று சொல்லுகிறோமே, மனிதர்களிடமுள்ள விஷம் குறைவா? பாம்பாவது எப்பொழுதாவது தீண்டுகிறது; அது வலுவில் போய் தீண்டுவதுமில்லை. நூற்றில் தொண்ணூற்று ஒன்பது பாம்புகள் விஷமில்லாதவையே. அது உன் வயலைப் பாதுகாக்கிறது. பயிரை அழிக்கும் எத்தனையோ பூச்சிகளையும் பிற ஜந்துக்களையும் தின்று வாழுகிறது. இத்தகைய உபகாரியும் சுத்தமானதும் சக்தியுள்ளதும் தனிமையை விரும்புவதுமான பாம்பு ஆண்டவனின் உருவமே.

நம் தேவர்களிடையில் பாம்பும் வருகிறது கணேசரின் இடையில் பாம்பே கட்டப்பட்டிருக்கிறது. சிவன் கழுத்தில் பாம்பு சுற்றிக்கொண்டிருக்கிறது. விஷ்ணு பகவானே பாம்புப்பாயலிலேயே படுத்துறங்குகிறார். இதன் மர்மத்தை இதிலுள்ள இனிமையைச் சிறிது உணருங்கள். இவை அனைத்தின் கருத்து, பாம்பின் மூலமாய் ஆண்டவன் உருவமே வெளியாகியிருக்கிறது என்பதே. பாம்பிலுள்ள இந்தப் பரம்பொருளைப் புரிந்து கொள்ளுங்கள்.

—வினோபாஜி.

எப்போதும் உற்சாகம் அளிப்பது
அசோகா சுகந்த பாக்குத்தூள்

NANJUNDAN & CO

PROP. C. NANJUNDAN (BOOCHI)

256, RAJA STREET COIMBATORE

Post Box 189 Grams : "BOOCHI" Phone { Res : 603 / Office At 657

Agents For :

COMPLETE RANGE OF TEXTOOL TEXTILE SPINNING MACHINERY

Blow Room Machinery, Carding Engines, Speed Frames, Ring Spinning Frames, Reeling Machines & Bundling Presses.

Manufactured by

TEXTOOL COMPANY LIMITED

COIMBATORE

FOR

Madras, Andhra, Mysore, Travancore and Cochin States

AND

SOLE DISTRIBUTORS

FOR

MESSRS SKINS & LEATHERS LTD.

Manufacturers of

Calf Skins for Roller Covering & Aprons for High Draft Spinning.

198755

Edited, printed and published by E. BALASUBRAMANIAM at the K. M. S. PRESS, 22-A, Narasingapuram Street, Mount Road, Madras. Associate Editor :- N. S. MANI.

USE **BINNY'S COTSWOL**

For year - round comfort
Available in smart and attractive colours
An excellent material to keep you comfortable in any weather.

AVAILABLE WITH ALL GOOD CLOTH DEALERS.

Manufactured by :—
The Bangalore Woollen Cotton & Silk Mills Co., Ltd.,
Bangalore City.

Distributors :— **H. A. R. MOHAMED & SONS,**
6 - A, Godown Street, MADRAS - 1.

WOMEN OF TASTE ALWAYS INSIST ON

BINNY'S

Pure Spun Silk & Georgette Sarees

In attractive GOLD BORDERS and shades

Manufactured by:

The Bangalore Woollen Cotton and
Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :

H. A. R. Mohamed & Sons

No. 6–A, GODOWN STREET,

Madras-1.

NANJUNDAN & CO

PROP. C. NANJUNDAN (BOOCHI)

256, RAJA STREET COIMBATORE

Post Box 189 Grams: "BOOCHI" Phone { Res : 603 / Office At 657

Agents For:

COMPLETE RANGE OF TEXTOOL TEXTILE SPINNING MACHINERY

Blow Room Machinery, Carding Engines, Speed Frames, Ring Spinning Frames, Reeling Machines & Bundling Presses.

Manufactured by

TEXTOOL COMPANY LIMITED

COIMBATORE

FOR

Madras, Andhra, Mysore, Travancore and Cochin States

AND

SOLE DISTRIBUTORS

FOR

MESSRS SKINS & LEATHERS LTD.

Manufacturers of

Calf Skins for Roller Covering & Aprons for High Draft Spinning.

198755

Edited, printed and published by E. BALASUBRAMANIAM at the K. M. S. PRESS, 22-A, Narasingapuram Street, Mount Road, Madras. Associate Editor :- N. S. MANI.

BINNY & Co. (MADRAS) LTD.
THE BANGALORE WOOLLEN COTTON AND SILK MILLS COMPANY LIMITED
BANGALORE
REGISTERED No. 84359
AGENTS SECRETARIES & TREASURERS

USE **BINNY'S COTSWOL**

For year - round comfort
Available in smart and attractive colours
An excellent material to keep you comfortable in any weather.

AVAILABLE WITH ALL GOOD CLOTH DEALERS.

Manufactured by :—
The Bangalore Woollen Cotton & Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :— H. A. R. MOHAMED & SONS,
6 - A, Godown Street, MADRAS - 1.

WOMEN OF TASTE ALWAYS INSIST ON

BINNY'S

Pure Spun Silk & Georgette Sarees

In attractive GOLD BORDERS and shades

Manufactured by :

The Bangalore Woollen Cotton and Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :

H. A. R. Mohamed & Sons

No. 6–A, GODOWN STREET,

Madras-1.

Colourful

BINNY'S FABRICS

The most suitable material for the tropics. These lovely colourful fabrics in beautiful designs such as seersucker, plain and printed Linen, Lustalin Shirtings, Hanava Suitings, etc., are available at our Show Rooms.

VENKATESH VASTRALAYA

Phone :

Retail Show Room :

2, THAMBU CHETTY STREET, MADRAS-1.